
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 டிசம்பர் 1 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 284 | Thursday 01, December, 2022 | 16 பக்கங்கள் | 50/-




**பாரிய பெருந்தோட்ட கம்பனிகளுக்கு சொந்தமான**

## பயன்படுத்தப்படாத காணிகளை சுவீகரிப்பது தொடர்பில் அரசு கவனம்

**அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் ஆராய்வு**



பாரிய பெருந்தோட்டக் கம்ப னி களுக்குச் சொந்த மான பயன்படுத்தப்படாத கா ணி களை சுவீகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவன ம் செலுத்துவதாகவும் அது தொடர்பான முன்மொழி வை அமைச்சரவையின் அனு மதிக்கு முன்வைத்துள்ளதா கவும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார். எதிர்காலத்தில் இது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படுமெனவும் அவர் 06

## மாகாண சபைகளுக்கு பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள்

**ஜனாதிபதியின் கருத்தை சிதைக்கும் விதத்தில் ஊடகங்களில் செய்திகள்**



மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை ஸ்தாபிக்க ஜனாதிபதி தயாராகி வருவதாக ஊடகங்களில் வெளியான செய்திகள், உண்மைக்குப் புறம்பானவை. 06

**மாவட்ட அபிவிருத்திச் சபை முறைமை**

## தட்டிக் கழிக்கப்பட்டதை தமிழ் மக்கள் தொட்டுப் பார்க்கக் கூட தயாரில்லை



**தமிழினம் தோற்றுவிட்டதாக எவரும் கருதக்கூடாது**
**அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டமாக தெரிவிப்பு**

பல தசாப்தங்களுக்கு முன்னர் தட்டிக்கழிக்கப் பட்ட மாவட்ட அபிவிருத் திச் சபையை தமிழ் மக்கள் தொட்டுக் கூட பார்க்கத் தயாராக இல்லையென அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

தமிழினம் தோற்று விட்டதாக மட்டும் எவருமே கருதக் கூடாதெனவும் அவர் வலியுறுத்தினார். தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக மாவட்ட அபிவிருத்தி 06

# சுற்றுலா தலமாகும் மட்டக்களப்பு மாவட்டம்

**2023 ஆம் ஆண்டை இலக்காகக் கொண்டு திட்டம்**

- ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று உயர்மட்ட கலந்துரையாடல்



**அரச காணிகளை அடையாளம் காணவும் தீர்மானம் மட்டு மாவட்டத்தை 2023 இல் சுற்றுலா தலமாக மாற்றுவதே நோக்கம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக, காணிகளை அடையாளம் காணும் கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (30) நடைபெற்றது.

இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் வெருகல் தொடக்கம் மட்டக்களப்பு வரையான கரையோர பிரதேசத்தில், அரச மற்றும் தனியார் காணிகளை அடையாளம் காண்பது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது. 06

# பல்கலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் நாளை



**விண்ணப்பம் கோரப்பட்டு மிக குறுகிய காலத்தில் வெளியிடப்படுவதாக அறிவிப்பு**

க.பொ.த உயர் தரம் 2021 (2022) பரீட்சை பெறுபேறுகளின் படி பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வெட்டுப்புள்ளி, நாளை 02 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக வரலாற்றிலேயே முதற்தடவையாக விண்ணப்ப படிவங்கள் கோரப்பட்டு மிகவும் குறுகிய காலத்துக்குள் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிக்கும் வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்படவுள்ளமை விசேட அம்சமாகும்.

இதன்படி பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு இரண்டு மாதம் ஒரு வாரத்துக்குள் வெட்டுப்புள்ளிகளை வெளியிட பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் பரீட்சைக்குரிய பல்கலைக்கழக வெட்டுப் புள்ளிகள் நவம்பர் மாத 06

## தமிழக மீனவர்களை விடுவிக்க தலையிடுமாறு கோரிக்கை

**ஜெய்சங்கருக்கு மு.க.ஸ்டாலின் மீண்டும் கடிதம்**

**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**






இலங்கை கடற்படை கைது செய்த தமிழக மீனவர்களை விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி, மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். 06

## 66,000 குடும்பங்களுக்கு உணவு நிவாரணம் வழங்கல்

**முதல் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பம்**



நாட்டில் 66,000 குடும்பங்களுக்கு உணவு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்படி, மாதாந்தம் 15,000 ரூபா என்ற அடிப்படையில் 06 மாதங்களுக்கு இந் நிவாரணம் வழங்கப்படுமென உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கை உறுதி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தின் பிரதம அதிகாரியும், ஜனாதிபதி ஆலோசகருமான, கலாநிதி சுரேன் பட்டகொட தெரிவித்தார்.

## 04 இலட்சம் கிலோ பால்மா தடுத்து வைப்பு; அரசுக்கு ரூ 145 மில். நட்டம்

**பால்மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவிக்கிறது**



சுங்கத் திணைக்களத்தின் பொறுப்பிலுள்ள சுமார் 04 இலட்சம் கிலோ பால் மா தொகை விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால், அரசாங்கத்துக்கு 145 மில்லியன் ரூபா வரி பணம் கிடைக்காது போயுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினரான லக்ஷ்மன் வீரசூரிய இதனைத் தெரிவித்துள்ளார். இறக்குமதி செய்யப்பட்ட 04 லட்சம் கிலோ பால் மாவை, விடுவிக்காது சுங்கம் தடுத்து வைத்துள்ளதால், அவை நுகர்வுக்கு பொருத்தமற்றதாக 06

## சிறுவர்களை தாக்கும் ஒருவித வைரஸ் காய்ச்சல்

**பெற்றோருக்கு தீபால் பெரேரா எச்சரிக்கை**



சிறுவர்கள் மத்தியில் மிக வேகமாக ஒரு வகையான காய்ச்சல் பரவுவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விஷேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

டெங்கு காய்ச்சலும், இன்ஃப்ளுவன்ஸா பாதிப்பும் அடிக்கடி பதிவாகி வருவதாகவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் கருத்து தெரிவித்த டாக்டர் 06



**எல்லை நிர்ணய அறிக்கைகளின் பிரகாரம் உள்ளூராட்சி சபைகள்** 07




**IMF தீர்மானங்கள் சில சமயம் எதிர்மறையாகவும் அமையலாம்** 03



**இராணுவ பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரிய** 03

**அரச ஊழியர்களது ஆடை விவகாரம்**

## அரச உத்தியோகபூர்வ ஆடை குறித்த இரண்டு சுற்றறிக்கைகள் இரத்து




அரசாங்க நிர்வாக தர அதிகாரிகளின் உத்தியோகபூர்வ ஆடை தொடர்பான சுற்றறிக்கைகள், இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி, கொவிட்19 தொற்று பரவலின்போது, வசதியான ஆடைகளுடன் பணிக்கு வருமாறு அரசாங்க ஊழியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கும் வகையில் 2019 ஜூன் 26 மற்றும் 2022 செப்டம்பர் 27 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளே 06

## இலங்கையர் ஒருவர் 10,000 டொலர் இந்திய ரூபாவை வைத்திருக்க அனுமதி

**இலங்கையின் கோரிக்கைக்கு இந்திய அரசு அங்கீகாரம் வழங்கியதாக தகவல்**



இலங்கையர் ஒருவர் 10,000 டொலர் பெறுமதியான இந்திய ரூபாவை (INR) வைத்திருக்க அனுமதிக்கும் புதிய ஒழுங்குமுறைக்கு இந்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய ரூபாவை வெளிநாட்டு நாணயமாக அனுமதிக்குமாறு இலங்கை விடுத்த கோரிக்கைக்கு, இந்திய அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் நேற்று தெரிவித்தன.

ஆசிய நாடுகளில் இந்திய ரூபாவை பிரபலப்படுத்தவும், அமெரிக்க டொலரில் சார்ந்திருப்பதைக் 06

**மாவட்ட அபிவிருத்தி சபை முறைமை**

## இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது



**தமிழ் தரப்பினர் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டிய காலம் இது**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஏற்கனவே, தோல்வியடைந்த மாவட்ட அபிவிருத்தி சபை முறைமை, இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையப்போவதில்லை என்றும் தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றுமையுடன் செயற்பட்டு சமஷ்டி முறை தீர்வை பெற்றுக் கொள்வதில் உறுதியாக செயற்பட 06



# நகர்வலம்



## பூகோள மாற்ற ஆராய்ச்சிக்கான தெற்காசிய உப குழுக் கூட்டம்

### அமைச்சர் நஸீர்அஹமட் ஆரம்பித்து வைத்து உரை



பூகோள மாற்ற ஆராய்ச்சிக்கான தெற்காசிய உபகுழுவின் கூட்டம் செவ்வாய்கிழமை (29) கொழும்பில் ஆரம்பானது. சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் இக்கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்தார்.

மேலும், பூகோள மாற்ற ஆராய்ச்சிக்கான ஆசிய, பசுபிக் வலையமைப்பும் இங்கு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் ஆரம்பமான இந்நிகழ்வில், பூகோளத்தைப் பாதுகாப்பதற்கான, தெற்காசிய அபிவிருத்திச் செயற்றிட்ட முன்மொழிவுப் பயிற்சி செயலமர்வும் இடம்பெற்றது. இங்கு உரையாற்றிய அமைச்சர் கூறியதாவது,

பூகோள மாற்றத்துக்கான காரணங்களைக் கட்டுப்படுத்தும் மிக முக்கிய கூட்டம் இது. இங்கு தெற்காசியாவின் காலநிலை நிபுணர்கள் ஒன்று கூடியுள்ளனர். ஆசிய, பசுபிக் வலையமைப்பின் வருகையை பாராட்டாமல் இருக்க முடியாது. உலக, உயிர்களின் உயிர்வாழ்வுக்கு காலநிலை மாற்றம் பிரதான பங்களிக்கிறது.

எனவே, எமது எதிர்காலத்தை வளமாக்க, நாம் பூமியைப் பாதுகாப்பது அவசியம். இலங்கையின், பல்லினத்தன்மைவாய்ந்த உயிர்களைப் பாதுகாப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக அக்கறையுடன் செயற்படுகிறார். இதற்காக பல்வேறு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இவரது, அக்கறைக்கு அச்சாணியாக இந்தக் கூட்டம் அமையும் எனவும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, ஆசிய, பசுபிக் வலையமைப்பின் பணிப்பாளர் ருயுஜி ரொமிஸ்கா, பிரதித் தலைவர் லிண்டா ஏ. ஸ்டீவென்ஸன் மற்றும் சுற்றாடல் அமைச்சின் சர்வதேச தொடர்பாடல் பணிப்பாளர் ஜானகி அமரதுங்க உள்ளிட்ட தெற்காசிய நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை

## திறன்களை கொண்ட தலைமுறையை உருவாக்கும் வகையில் மாற வேண்டும்

### கல்வி முறைமை மறுசீரமைப்பு கலந்துரையாடலில் நாமல் தெரிவிப்பு



க.பொ.த. உயர்தரப் பரீட்சை, திறன்களைக் கொண்ட தலைமுறையை உருவாக்கும் வகையில் மாற வேண்டுமென்பது தொடர்பில் நிலைமாறு காலமொன்று தேவையெனவும், இது தொடர்பான முன்னோக்கிய வழிகள் அடங்கிய முன்மொழிவொன்றை குழுவுக்கு சமர்பிக்குமாறும் தேசிய சபையின் உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ எம்.பி தெரிவித்துள்ளார்.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றத்தில் அண்மையில் கூடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஒரு நிலையான கொள்கை ஒன்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கல்வி முறைமையை மறுசீரமைப்பதற்கான திட்டம் பற்றிய ஆரம்பகட்ட கலந்துரையாடலொன்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

கல்வி அமைச்சு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகளின் பங்குபற்றலுடன் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. பல்கலைக்கழக நுழைவுத்தேர்வான க.பொ.த. உயர்தரப் பரீட்சை, திறன்களைக் கொண்ட தலைமுறையை உருவாக்கும் வகையில் மாற வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்தனர். அது தொடர்பில் நிலைமாறு காலமொன்று தேவை எனவும், இது தொடர்பான முன்னோக்கிய வழிகள் அடங்கிய முன்மொழிவொன்றை குழுவுக்கு சமர்பிக்குமாறும் தேசிய பேரவை உப குழுவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கல்வி முறையின் மூலம் தொழில் பயிற்சி மற்றும் திறன்மிக்க தொழிலாளர்களை அங்கீகரித்து மேம்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இராஜாங்க அமைச்சர்களான விஜித பேருகொட, வைத்திய கலாநிதி சீதா அறம்பேபொல, பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாஉல்லா, பவித்ரா வன்னிஆராச்சி, வஜிர அபேவர்த்தன மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் அடுத்தடுத்து நடைபெற்ற குழுவின் இரு கூட்டங்களிலும் கலந்து கொண்டனர்.

15 வயது மகள் துஷ்பிரயோகம்

## தந்தைக்கு 45 வருட கடுங்காவல் தண்டனை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தாயின் அரவணைப்பின்றி இருந்த 15 வயது மகளை இடையிடையே துஷ்பிரயோகம் செய்து கர்ப்பிணியாக்கிய பொலன்னறுவை நிஷ்ஷங்கல்லபுர பகுதியைச் சேர்ந்த தந்தை ஒருவருக்கு 45 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பத்து இலட்சம் ரூபா இழப்பீடு மற்றும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் விதித்து பொலன்னறுவை மேல் நீதிமன்றம் சந்தேக நபருக்கு உத்தரவிட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கின் முடிவை பொலன்னறுவை மேல் நீதிமன்ற நீதவான் ருச்சிர வெலிவத்த நேற்று முன்தினம் (29) வெளியிட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரான தந்தைக்கு எதிரான மூன்று குற்றச்சாட்டுக்களுக்கு தனித்தனியாக 15 ஆண்டுகள் முதல் 45 ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இனிப்பு பண்டம் என்ற போர்வையில்

## சர்வதேச பாடசாலைக்கு முன்னால் போதைப்பொருள் விற்பனை; இருவர் கைது

**(மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)**



பாணந்துறை முன்னணி தனியார் சர்வதேச பாடசாலைக்கு முன்பாக இனிப்பு பண்டங்கள் என்ற பெயரில் போதைப் பொருட்களை விற்பனை செய்யும் கடையொன்றை நடாத்திவந்த இருவரை கைது செய்துள்ள பாணந்துறை பொலிஸார், இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 12 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பாணந்துறை மேலதிக மாஜிஸ்திரேட் லஹிரு எஸ். சில்வா உத்தரவிட்டார்.

பாடசாலை மாணவர்கள் சீனி உருண்டைக்கும் லொலிபொப் என்பவற்றுக்கு அடிமையாகி அவற்றை நித்தமும் கேட்பதாக பெற்றோர்கள் பொலிசாருக்கு செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக குறித்த கடையை முற்றுகை இட்டதாக பாணந்துறை வடக்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சஞ்சீவ லக்மால் விஜேவீர தெரிவித்தார்.

இச்சுற்றிவளைப்பின் போது 4000 சீனி உருண்டைகள் அடங்கிய 60 போத்தல்கள், லொலிபொப் 55 மேலும் இனிப்புப் பண்டங்களும் கைப்பற்றப்பட்டதாகவும், அக்கடையில் இருந்த இருவரை கைது செய்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.



கொழும்பு ரோயல் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைப்பெற்ற "ஷுபாவித கீதய" மாணவர்களின் இசை நிகழ்ச்சியில் புரவலர் ஹாசிம் உமர் மாணவனுக்கு பரிசு வழங்குவதையும், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பிரதிப் பணிப்பாளர் நாயகம் (சந்தைப்படுத்தல்) பாலித்த திசாநாயக்கவையும் படத்தில் காணலாம்.

## கொழும்பு பாத்திமா மு.ம கல்லூரிக்கு பஸ் அன்பளிப்பு

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பஸ் ஒன்றை அன்பளிப்புச் செய்யவுள்ளார்.

இந்நிகழ்வு இன்று (1) வியாழக்கிழமை காலை 9:30 மணிக்கு கல்லூரியின் ஸேம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து கொள்வார்.

## லலித் அத்துலத்முதலியின் 86ஆவது பிறந்த நாள்



**ருஸைக் பாரூக்**

மறைந்த முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் 86ஆவது பிறந்தநாள் நிகழ்வு (26) அனுஷ்டிக்கப்பட்டது. தேசிய ஊழியர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி ஞாபகார்த்த நிகழ்வு கொழும்பு ஹெட்டியாவத்தையில் அமைந்துள்ள லலித் அத்துலத்முதலியின் உருவச் சிலைக்கருகில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் லக் வனிதா தலைவியுமான சாந்தினி கோங்கஹகே, தேசிய ஊழியர் சங்க உப தலைவரும் ஊடக செயலாளருமான சுனில் சில்வா மற்றும் துறைமுக அதிகார சபையின் தேசிய ஊழியர் சங்க தலைவி துஷாரி பிரியங்கா ஆகியோர் அன்னாரின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தனர்.

## காணாமல் போன தங்க மோதிரத்தை தேடிக் கொடுத்த முன்மாதிரி இளைஞன்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நகரை சேர்ந்த வர்த்தகர் ஒருவரின் கையில் இருந்த தங்க மோதிரம் ஒன்று கடந்த ஒக்டோபர் 09ஆம் திகதி காணாமல் போன நிலையில் உரியவரால் அதனை தேடிக் கண்டுபிடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி பயனளிக்கவில்லை. இருந்த போதிலும் இம்மாதம் 13ஆம் திகதி அநுராதபுரம் மதீனா ஹோட்டலுக்கு உணவு அருந்துவதற்காக வந்த வர்த்தகரிடம் அங்கிருந்த ஊழியர்களில் ஒருவர் உரிய வர்த்தகரைப் பார்த்து, 'நீங்கள் தொலைத்து விட்டு தேடிய மோதிரத்தை தேடி கண்டுபிடித்து விட்டோம். அதனை காசாளரிடம் கேட்டு பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக் கொண்டுள்ளார். காசாளரிடம் விசாரித்த போது ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க மோதிரத்தை உரிய நபரிடம் கொடுத்துள்ளார்.



நெடுஞ்சாலையில் செல்லும் பெண்களின் தங்க ஆபரணங்களை கொள்ளையடிக்கும் நம் நாட்டில் உங்கள் நிறுவனத்தில் முன்மாதிரி ஊழியர்கள் இருப்பதையிட்டு பெருமையடைகிறேன். உங்களுடன் நிறுவன ஊழியர்களும் இணைந்திருப்பதில் நான் பெருமையடைகிறேன். உங்களுக்கு எனது மரியாதையான நன்றியை தெரிவித்து கொள்கிறேன். இவ்வாறு வர்த்தகரால் எழுதப்பட்ட கடிதம் அநுராதபுரம் பொலிஸ் நிலையம், அநுராதபுரம் பெரிய பள்ளிவாசல் மற்றும் குறிப்பிட்ட ஹோட்டலுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ண அவர்களின் 114ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் எம். ஆர். காந்தி அவர்கள் மணிமேடை சந்திப்பில் அமைந்துள்ள திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் நாகர்கோவில் மாநகராட்சி கவுன்சிலர்கள் முத்துராமன், ஐயப்பன், சுனில் ரோசிட்டா, முன்னாள் கவுன்சிலர் நாகராஜன், நிர்வாகிகள் திருமால், சந்திர சேகர் மற்றும் மகளிர் அணி ஷீலா, உஷா ஆகியோர் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.





தென் மாகாணத்தின் முன்னணி முஸ்லிம் பாடசாலைகளிலொன்றான மாறை/ மின்ஹாத் தேசிய பாடசாலை மாணவர்கள் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு நேற்று (30) கொழும்பு வந்திருந்தனர். அதன் ஒரு அங்கமாக வருகை தந்திருந்த மாணவிகள் கொழும்பு, லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் ஆசிரியர்கள் சகிதம் குழுவாக எடுத்துக்கொண்ட படம். (படம்: நிஷ்ஷங்க விஜேரத்ன)

## தலசீமியாவால் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு உதவி கோரல்



தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ள 10 வயதுடைய சிறுவன் ஒருவனுக்கு உதவி செய்யுமாறு, அச்சிறுவனது பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

களுகமும பிரதேசத்தின் கரம்பே மீவெவ பிரதேசத்தைச் சேர்ந்த ஹிமங்ச தினுஜய அபேசிங்க எனும் சிறுவனே தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இச்சிறுவனுக்கு ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் குருதி மாற்றம் செய்ய வேண்டியுள்ளதாகவும், பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இந்நோய்க்குரிய சத்திர சிகிச்சை ஆசிரி வைத்தியசாலையில் மாத்திரமே மேற்கொள்ளப்படுவதுடன், இச்சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காக சுமார் 7,500,000.00 ரூபா தேவைப்படுகின்றது.

இச்சத்திர சிகிச்சைக்குரிய உடல் திசுக்கள் இந்தியாவின் Donor Registry (DATRY) மூலம் கொண்டு வருவதற்காக சுமார் 5,000,000.00 ரூபா தேவைப்படுகின்றது. இச்சத்திர சிகிச்சையின் பின்னர் 6 மாதங்கள் வரை இச்சிறுவனை மிகுந்த அவதானத்துடன் பராமரிப்பதற்கும் மருந்துகளுக்கும் சுமார் 25 இலட்சம் ரூபா தேவைப்படுவதாக, வைத்தியர் தெரிவித்துள்ளார்.

இச்சத்திர சிகிச்சைக்கு மொத்தமாக தேவைப்படும் 150 இலட்சம் ரூபாவை திரட்ட முடியாதுள்ளதாகவும் ஆகவே இச்சிறுவனின் உயிரை காப்பதற்காக உங்களது உதவியை 0774686151 எனும் கையடக்கத் தொலைபேசி மூலம் இச்சிறுவனின் தந்தை அல்லது 0771178748 எனும் கையடக்கத் தொலைபேசி மூலம் இச்சிறுவனின் தாயை தொடர்பு கொண்டு தங்களாலான உதவியை வழங்க முடியுமெனவும், அவர்கள் கேட்டுள்ளனர்.

அல்லாவிடின், கே.மதுஷா ரசாங்கனீ எனும் பெயரில் 8024844 எனும் கணக்கு இலக்கத்தில் இலங்கை வங்கியில் (BOC) வைப்பிலிட முடியுமெனவும், பெற்றோர் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 டிசம்பர் 1 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN திනකරන්




**தொழுகை நேரம்**

01 முதல் 03 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.47 |
| லுஹர் | 12.01 |
| அஸர் | 03.23 |
| மஃரிப் | 05.53 |
| இஷா | 07.07 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் கார்த்திகை 15

ராகுகாலம் : பகல் : 01.30 - 03.00வரை

சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | செலவு |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | முயற்சி |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

## எக்ஸ்பிரஸ் பேர்ள்' அனர்த்த மொத்த இழப்பு ரூ.07 பில்லியன்

# பேச்சு நடத்துவதை விடுத்து வழக்குத் தொடர வேண்டும்

**இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட பாதிப்புக்கு முழுமையான நட்ட ஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்ளும் வகையில், சட்ட மாஅதிபர் திணைக்களம் சம்பந்தப்பட்ட கப்பல் நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டுமென இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

07 பில்லியன் டொலர்களை நட்ட ஈடாக பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். பேச்சுவார்த்தைகள் நடத்தினால், நட்டஈடு மூன்று பில்லியனாக குறைவடையும். எனவே, பேச்சு வார்த்தைகளை விடுத்து வழக்கு தொடர்ந்து அதன் மூலம் முழுமையான தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சபையில் தெரிவித்தார்.

அதேவேளை டொலர்களாகப் பெறப்பட வேண்டிய நட்டஈட்டை, இலங்கை ரூபாவில் பெற்றுக்கொள்ள சட்டமா

06

## IMF தீர்மானங்கள் சில சமயம் எதிர்மறையாகவும் அமையலாம்



சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது, வைத்தியரை நாடுவதைப் போன்றதென மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார். இவ்வுதவிகளால் பெறப்படும் தீர்வுகள் சில சமயங்களில் விரும்பத்தகாததாக இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு கருத்து தெரிவித்த மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்,

06

## இராணுவ பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரிய



இலங்கை இராணுவத்தின் பிரதம அதிகாரியாக மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரிய நியமிக்கப்பட்டுள்ளார். மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரிய, இலங்கை கலாற்படையில் திறமையான அதிகாரியாக விளங்கினார். இவர் இராணுவ சேவையில் 35 வருடங்களை பூர்த்தி செய்தவரென்பதும் குறிப்பிடத்தக்கது. யுத்த காலத்திலும் சிறந்து விளங்கிய இவர், வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் பலவற்றில் கல்வி பயின்றுள்ளார்.

# மலையக மக்களும் தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்

## மலையகத்துக்கு 1,40,000 வீடுகள் தேவை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்படும் நிலை மாறி, அவர்களையும் தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து அவர்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைவு பெறவுள்ளது. எனினும் இன்னுங்கூட அவர்கள் குடியிருப்புகளுக்கும் மலசல கூடங்களுக்கும் போராட வேண்டியுள்ளது. எனவே, இனியாவது, இவர்களின் நிம்மதியான வாழ்க்கைக்கு அரசாங்கம் வழிவகுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வர்த்தக வாணிப அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி



அமைச்சு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் ஆயிரம் ரூபா சம்பளத்தை உறுதிப்படுத்தியது. ஆனாலும் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலையில் பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து காத்திரமான கூட்டு ஒப்பந்தம் ஒன்றுக்கு மீள செல்ல வேண்டும்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன மலையக மக்களின் கஷ்டங்கள் மற்றும் நிலைமைகளை நன்கு அறிந்தவர். பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் சிறந்த மனதைக் கொண்டவர். அவரது காலத்தில் இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. வரவு செலவு திட்டத்தில் பெருந்தோட்டக் கைத்தொழில் தொடர்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு பயனளிக்கும் வகையில் எந்தவிதமான முன்மொழிவுகளும் முன் வைக்கப்படவில்லை. இது கவலையளிக்கின்றது.

06

# பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் நேர்முக பரீட்சை



பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்திற்கு 2022ஆம் கல்வி ஆண்டிற்கு புதிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 10ஆம்,11 ஆம் திகதிகளில் நளீமிய்யா கலாபீட வளாகத்தில் நடைபெறவுள்ளதாக கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) தினகரனுக்கு தெரிவித்தார்.

இம்மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை வடக்கு, வடமத்திய, வடமேல், சப்ரகமுவ, ஊவா மாகாணங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கிழக்கு, மத்திய, மேல், தென் மாகாணங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கும் நேர்முக பரீட்சைகள் கலாபீட வளாகத்தில் இரு பிரிவாக நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மேற்படி பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அண்மையில் வெளியான க.பொ.த (சா/த) பரீட்சையில் இஸ்லாம், கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டுமெனவும் நேர்முக பரீட்சைகள் மேற்படி சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.00 மணி முதல் நடைபெறவுள்ளதாகவும் நேர்முக பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் கலாபீடத்திற்கு சமுகம் தருமாறும் கலாபீட முதல்வர் மேலும் கேட்டுள்ளார்.மேலதிக விபரங்களை கலாபீடத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியுமெனவும் முதல்வர் மேலும் தெரிவித்தார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம்:

# சீசீரிவி கமெராவின் காட்சிகள் திட்டமிட்ட வகையில் அழிப்பு

## அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நாட்டின் கடல் வளத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல், கடலில் தரித்திருந்த இடத்திலிருந்து துறைமுகத்துக்குள் பிரவேசிப்பது வரையிலான சீ.சீ.டிவி காட்சிகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்பட்டுள்ளன.

நட்ட ஈடு பெறுவதில் முக்கியமான ஆதாரமாக கருதப்படும் இக்காட்சிகள் தொடர்பில், அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டுமென எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நீதிமன்ற விசாரணைகளில் இந்த விடயம் வெளிக் கொணரப்பட்டுள்ளதாகவும், இதனோடு சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெரனாண்டோ உரையாற்றும்போது முன்வைத்த கூற்று தொடர்பில் கேள்வி எழுப்பும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பான சீ.சி.டிவி காட்சிகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால், கப்பல் அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில்

06

## கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட

# தோட்டங்களை அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்க வேண்டும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கம்பெனிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தோட்டங்களை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென வடிவேல் சுரேஷ் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

200 வருடங்களுக்கு மேல் நாட்டின் அந்நிய செலாவணிக்காக அர்ப்பணிப்புடன் உழைக்கும் மலையக சமூகம் கௌரவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

ஆறு பரம்பரைகளாக மலையக தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் அந்தத் துறையை நேசிக்கின்றனர். நாமும் அந்த துறையை அதிகம் நேசிக்கின்றோம். நாட்டின் முக்கியமான வளங்களை அழிப்பவர்களிடமிருந்து அதனை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வர்த்தக வாணிப அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு ஆகியவற்றுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாடு வங்குரோத்து நிலை அடைந்



துள்ளமைக்கு மலையக மக்கள் காரணமல்ல, எனினும் பொருளாதார நெருக்கடி காரணமாக எமது சமூகமே மிக மோசமாகபாதிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிற்துறையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கம் தோட்டக் கம்பனிகளுக்கு கிடையாது.

இது தொடர்பில் கவனம் செலுத்தி பெருந்தோட்டங்களை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும்.

200 வருடகால வரலாற்று பின்னணியுள்ள மலையக மக்கள், இந்நாட்டின் மூத்த சமூகமாக இருந்து பொருளாதார முன்னேற்றத்திற்கு தமது உழைப்பை அர்ப்பணித்துள்ளனர்.

அந்த மக்கள் கௌரவிக்கப்பட வேண்டும்.

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் 10 மாவட்டங்களில் தேயிலைப் பயிர்ச் செய்கை காணப்படுகிறது.1992 ஆம் ஆண்டு அரசாங்கம் 22 கம்பனிகளிடம்

06

# டிசம்பர் 05 ஆம் திகதி முதல் ரயில் நேர அட்டவணை மாற்றம்

## பல கட்டங்களாக திருத்த தீர்மானம்

ரயில் சேவைகளின் நேர அட்டவணைகள் அடுத்த வாரம் முதல் திருத்தம் செய்யப்படுமென இலங்கை ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

இதில், பல கட்டங்களாக நேர அட்டவணை திருத்தப்படுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.இதன்படி களனிவெளி மார்க்கத்தில் இயங்கும் புகையிரதங்களின் நேர அட்டவணை எதிர்வரும் டிசம்பர் மாதம் (05) திருத்தப்படவுள்ளது.

இதனிடையே, கடந்த சில வாரங்களாக ரயில்கள் தடம் புரள்தல் மற்றும் தாமதம் போன்ற பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ரயில் தண்டவாளங்கள் பழுதடைந்துள்ளமை மற்றும் ஊழியர் பற்றாக்குறையே தாமதம் மற்றும் தடம் புரள்வுக்கு காரணமென ரயில்வே ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

# கொட்டகலையில் கோலாகல இசைத்திருவிழா "தேனும் பாலும்" கலந்த "வசந்த கானங்கள்"

## பிரதம அதிதியாக IDM Nations Campus தலைமை இயக்குனர் ஜனகன்



மனது மறக்காத பழைய, இடைக்கால பாடல்களின் இசைச் சங்கமத்தில் ஏ கருணாவின் ஜெனி சவுண்ட் ஆதரவில் VSN இலக்ரோனிக்ஸ், N விஜய்குமார் அனுசரணையில் ரஜினி பாசில் கவிக்கமல் இணைந்து வழங்கும் “ஸ்டைல்” வீனஸ்” “அக்ஷரா” இசைக்குழுவினர்களின் இனிய இசையில் “தேனும் பாலும்” கலந்த “வசந்த கானங்கள்” எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5மணிக்கு கொட்டகலை ரிஷிகேஷ் மண்டபத்தில் வெகு கோலாகலமாக நடைபெறவிருக்கிறது. தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவரின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக IDM Nations Campus தலைமை நிர்வாக இயக்குனர், பணிப்பாளர் விநாயகமூர்த்தி ஜனகனும், சர்வதேச இசைக்கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவர் அதி வணக்கத்திற்குரிய அருட்கலாநிதி எஸ் சந்ரு பெர்னாண்டோவும் கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் நிதிச் செயலாளர் லெட்சுமணன் பிள்ளை விஸ்வநாதனும் ( புஸ்பா),

06

# போதைப்பொருட்களுடன் ஆஸ்பத்திரி ஊழியர் கைது

## மஹரகம பகுதியில் பொலிஸார் அதிரடி

மஹரகம பிரதேசத்திலுள்ள வைத்தியசாலையொன்றின் ஊழியர் ஒருவர், போதைப் பொருளுடன் வைத்தியசாலைக்கு அருகில் கைது செய்யப்பட்டுள்ளதாக நுகேகொடை மிரிஹான பிரிவு ஊழல் எதிர்ப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், சுகாதார உதவியாளராக கடமையாற்றுபவரென அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 05 கிராம், 500 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் சுமார் ஒரு இலட்சம் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான 10 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலை ஊழியர் ஒருவர், ஐஸ் போதைப்பொருள் மற்றும் கஞ்சாவை பொதி செய்து விற்பனை செய்வதாக நுகேகொடை பிரதேச ஊழல் ஒழிப்பு பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜனசாந்த கஹடதெனியவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, இச்சந்தேக நபர் மோட்டார் சைக்கிளில் கடமைக்குச் சென்று கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டார். இவரிடமிருந்து சிறிய பொட்டலங்களில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப்பொருள் பொதிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 231.31 | 242.45 |
| கனடியன் டொலர் | 265.08 | 277.22 |
| யூரோ | 358.78 | 373.86 |
| ஜப்பான் யென் | 2.4417 | 2.5454 |
| சிங்கப்பூர் டொலர் | 255.60 | 266.39 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 412.93 | 429.30 |
| சுவிஸ் பிராங்க் | 360.91 | 378.36 |
| அமெரிக்க டொலர் | 360.88 | 371.68 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 964.12 | கட்டார் ரியால் | 99.42 |
| குவைத் டினார் | 1,174.43 | சவூதி ரியால் | 96.73 |
| ஓமான் ரியால் | 944.10 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.96 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 15ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 06

### குறள் தரும் சிந்தனை



நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

*நட்பு என்பது சிரித்து மகிழ்வதற்காக அல்ல; நண்பர்கள் நல்வழி தவறிச் செல்லும் பொழுது இடித்துரைத்துத் திருத்துவதற்காகும்.*

# வாகன விபத்துகளை கட்டுப்படுத்த தயாராகும் புதியதொரு திட்டம்

நாளாந்தம் அதிக வாகனவிபத்துகள் இடம்பெறக் கூடிய நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகிறது. இந்த நிலைமை அண்மைக் காலமாகத்தான் ஏற்பட்டு இருக்கிறது. கடந்த சில வருடங்களாக வாகனங்களின் பாவனையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பும், வாகன சாரதிகள் வீதிப் போக்குவரத்து சட்டங்களை மதிக்காமல் மீறி செயற்படுவதும்தான் இந்நிலைக்கு பெரிதும் பங்களித்துள்ள காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டு உள்ளன.

இந்த நிலையில் வீதிப் போக்குவரத்து வாகனங்களால் ஏற்படும் விபத்துகளால் மாத்திரம் நாளொன்றுக்கு 8 முதல் 10 பேர் வரை இந்நாட்டில் உயிரிழப்பதாக பொலிஸ் திணைக்களத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில், இந்நாட்டில் வீதிப் போக்குவரத்து விபத்துகளும் அவற்றின் விளைவான உயிரிழப்புகளும் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

'வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை முறையாகக் கடைப்பிடிப்பதன் ஊடாகவே இந்நாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களை குறைத்துக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும்' என்று குறிப்பிட்டுள்ள தொற்று நோய்கள் கட்டுப்பாட்டுப் பிரிவின் தலைவர் டொக்டர் சமிதா சிறிதுங்க, தவறும் பட்சத்தில் 2025 ஆம் ஆண்டாகும் போது வீதிப் போக்குவரத்து விபத்துகளுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை கூடிவிடும் என்றுள்ளார்.

இவை இவ்வாறிருக்க, ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின்படி, வீதிப் போக்குவரத்து விபத்துகளை 2030 ஆம் ஆண்டாகும் போது 50 வீதமாகக் குறைக்க வேண்டும் என்றும் நிபந்தனையும் காணப்படுகிறது.

இவ்வாறான சூழலில் வீதி போக்குவரத்து வாகன விபத்துக்களைக் குறைத்து கட்டுப்படுத்துவதற்கு ஒவ்வொரு சாரதியும் பங்களிக்க வேண்டும். இதன் நிமித்தம் வீதிப் போக்குவரத்து சட்டங்களை மதித்து செயற்படத் தவறலாகாது. இதில் ஏற்படுகின்ற பல வீனங்கள் மற்றும் தவறுகளால்தான் வீதிப் போக்குவரத்து வாகன விபத்துகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பெரும்பாலான வீதி போக்குவரத்து வாகன விபத்துக்களை எடுத்து நோக்கினால் அவை பெரிதும் தவிர்த்துக் கொள்ளக் கூடியனவாக இருப்பதை அவதானிக்கலாம். அதற்கு சாரதிகள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறான விடயங்களில் கவனத்தைத் குவித்துத் தான் வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் விஷேட திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் ஊடாக வீதிப் போக்குவரத்து குற்றங்களைப் புரிபவர்களுக்கும் வீதிப்போக்குவரத்து சட்டங்களை மதியாதும் மீறியும் செயற்படுபவர்களுக்கு புள்ளி வழங்கும் முறைமையை நடைமுறைக்கு கொண்டு வரப்பட உள்ளது.

இதன் ஊடாக வீதிப் போக்குவரத்து குற்றங்கள் புரிபவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். அந்த புள்ளிகள் குறிக்கப்பட்ட தொகையை அடையும் போது சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரம் இரத்தாகி விடும். அவ்வாறு சாரதி அனுமதிப் பத்திரம் இரத்தாகும் சாரதிகள் மீண்டும் புதிய சாரதி போன்று சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சை உள்ளிட்ட அனைத்தையும் தாண்டியே மீண்டும் சாரதி அனுமதி பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இந்நடைமுறையின் ஊடாக வீதிப் போக்குவரத்து சட்டங்களை சாரதிகள் மதித்து பொறுப்புணர்வுடன் செயற்படக் கூடிய நிலைமை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பயனாக வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களை பெரிதும் குறைத்துக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறான நடைமுறை உலகின் பல நாடுகளில் காணப்படுகின்றது. அந்நாடுகளில் வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்கள் குறைவடைந்து காணப்படுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது.

வாகன சாரதிகள் வீதிப் போக்குவரத்து சட்டங்களை உரிய ஒழுங்கில் மதித்து செயற்பட்டால் பெரும்பாலான வீதி விபத்துக்களைப் பெரிதும் தவிர்த்துக் கொள்ள முடியும். இருந்த போதிலும் இச்சட்டங்களை மதியாது செயற்படுவதன் விளைவாகவே வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்கள் அதிகரிக்கின்றன. நாட்டில் பதிவாகும் பெரும்பாலான வீதி விபத்துகளை பகுப்பாய்வு செய்து பார்த்தால் அந்த விபத்துகள் தவிர்த்துக் கொள்ளக் கூடியவையாக விளங்குவதை அவதானிக்கலாம். வீதிப் போக்குவரத்து சட்டங்கள் உதாசீனம் செய்யப்படுவதே பெரும்பாலான விபத்துகளுக்கு அடிப்படைக் காரணமாக உள்ளன.

ஆகவே வீதிப் போக்குவரத்து வாகன விபத்துகளை குறைத்துக் கட்டுப்படுத்துவதற்கு உதவும் வகையில் ஒவ்வொரு சாரதியும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். அப்போது வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்கள் பெரிதும் குறைவடைந்து விடும் எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# சீன அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

## கடற்றொழில், விவசாய நடவடிக்கைகளுக்கு மண்ணெண்ணெயை அன்பளிப்பாக வழங்குமாறும் சீனத்தூதுவரிடம் வேண்டுகோள்

கடற்றொழில் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு மண்ணெண்ணெயை அன்பளிப்பாக வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவரினால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு கணிசமானளவு மண்ணெண்ணெய் தேவைப்படுகின்றமையினால், மண்ணெண்ணெயை அன்பளிப்பாக வழங்குவதற்கு சீனா முன்வர வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை முன்வைத்துள்ளார்.

சீனாவினால் வழங்கப்பட்ட சுமார் 90 இலட்சம் லீற்றர் டீசலை சம்பிரதாயபூர்வமாக பெற்றுக் கொண்ட வேளையில் கடற்றொழில் அமைச்சரினால் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இக்கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிப்பதற்கு இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் உறுதியளித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.







கடந்த 27ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தில் டீசலை சம்பிரதாயபூர்வமாக பெற்றுக் கொள்ளும் நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பாகத் தெரிவிக்கையில், "சீன அரசாங்கம் தற்போது 90 இலட்சம் லீற்றர் டீசலை வழங்கியுள்ளமை எமது மக்களுக்கு பேருதவியாக அமைந்துள்ளது. சீனா வழங்கியுள்ள இந்த உதவிக்காக சீன அரசாங்கத்திற்கும் சீன மக்களுக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பில் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது கிடைத்துள்ள 90 இலட்சம் லீற்றர் டீசலில் ஒரு பகுதியை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் வழங்கி அவர்களிடம் இருந்து மண்ணெண்ணெயைப் பெற்று மண்ணெண்ணெயைப் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" எனக் குறிப்பிட்டார்.

(ஊடகப் பிரிவு_கடற்றொழில் அமைச்சர்)

# உலகெங்கும் எச்.ஐ.வி தொற்றுடன் நடமாடும் 3 கோடி 80 இலட்சம் பேர்!


## எய்ட்ஸ் நோய் விழிப்புணர்வு ஒவ்வொருவருக்கும் அவசியம்!

சர்வதேச எய்ட்ஸ் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த வருடம் 'Putting Ourselves to the Test: Achieving Equity to End HIV'_'எம்மை நாம் பரிசோதனைக்கு உட்படுத்துவோம்: எய்ட்ஸை ஒழிக்க சமத்துவமாக ஒன்று திரள்வோம்' எனும் தொனிப்பொருளில் சர்வதேச ரீதியில் எய்ட்ஸ் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தேசிய எய்ட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் விஷேட வைத்தியர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி அவர்களின் அறிக்கையிலிருந்து, இலங்கையில் இளம் வயதினர் மத்தியில் எய்ட்ஸ் நோய் அதிகரித்திருப்பது தெரியவந்துள்ளது.

உலக சுகாதார அமைப்பினால் எய்ட்ஸ் நோய் உலக பரவு நோயாக அறிவிக்கப்பட்டுள்ளது. எய்ட்ஸ் (AIDS) என்பது Acquired immunodeficiency Syndrome என்ற தொடரின் சுருக்கமாகும். அதாவது தேடிப்பெற்ற நீர்ப்பீடனக் குறைபாடு நோய்த்தொகுதி என்பதாகும். HIV என்னும் வைரஸ் மூலமே இந்நோய் உருவாகிறது. எச்.ஐ.வி. வைரஸ் உடலினுள் புகுந்து வெண்குருதிக் கலங்களைத் தாக்கி நோய் எதிர்ப்பு சக்தியைப் பலவீனப்படுத்துகிறது. இதனால் எய்ட்ஸ் பீடிக்கப்பட்ட ஒருவர் நோயாளியாகிறார்.

எச்.ஐ.வி. வைரஸ் 3 வழிகளில் ஒருவருக்குக் கடத்தப்படலாம். அவையாவன 1. நோயுற்றவர்களுடன் பாதுகாப்பற்ற முறையில் உடலுறவு கொள்ளுதல். 2. நோயாளரின் குருதியை மற்றையவருக்கு மாற்றுவதன் மூலம் அல்லது நோயாளி பாவித்த ஊசியை வேறொருவருக்கு பயன்படுத்துவதன் மூலம். 3. நோயுள்ள தாய் தன் கருவிலுள்ள குழந்தைக்குக் கடத்தல்.







இலங்கையில் முதலாவது எய்ட்ஸ் நோயாளி 1987 ஆம் ஆண்டு தொழில் நிமித்தம் நைஜீரியா சென்று நாடு திரும்பிய களுத்துறை மாவட்ட வாசியாவார். அவர் இனம் காணப்பட்டதை அடுத்து இலங்கை தம்மை உசார்படுத்திக் கொண்டது. அன்று தொடக்கம் 31.10.1997 வரை 76 பேர் எய்ட்ஸ் நோய்க்கு இலக்காகி, அவர்களில் 61 பேர் இறந்தனர். இவர்களில் ஆண்கள் 46 பேர், பெண்கள் 15 பேர் . 2012ஆம் ஆண்டில் இலங்கையில் எய்ட்ஸ் தொற்றினால் 1597 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 22 பேர் மரணமடைந்துள்ளதாகவும் தேசிய பாலியல் நோய் எய்ட்ஸ் தடுப்பு பிரிவு தெரிவித்திருந்தது.

தற்போது இலங்கையில் தொடர்ச்சியாக எச்.ஐ.வி. தொற்று அதிகரிப்பதற்கான காரணங்கள் குறித்த ஆய்வுகளின் போது, பாலியல் தொழிலாளர்களுக்கு ஊடாகவே நாட்டில் அதிகளவானவர்கள் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகிறார்கள் என்று தெரியவந்துள்ளது. அவர்கள் அவதானத்துடன் நோக்கப்பட வேண்டியவர்கள் என்று எச்.ஐ.வி எய்ட்ஸ் ஒழிப்பு அமைப்பின் அதிகாரி ஒரவர் தெரிவித்தார். இலங்கையில் ஆயிரக்கணக்கில் பெண் பாலியல் தொழிலாளர்கள் உள்ளதாக எச்.ஐ.வி எய்ட்ஸ் ஒழிப்பு அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. புள்ளிவிபர முடிவுகளின்படி உலக சனத்தொகையில் சுமார் 3 கோடி 80 இலட்சம் மக்களுக்கு மேல் எச். ஐ. வி. தொற்றுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

உலகத்தில் தென் ஆபிரிக்காவே அதிகளவில் எச்.ஐ.வி. நோயாளிகளைக் கொண்டிருக்கின்றது. இதைத் தொடர்ந்து நைஜீரியாவும் இந்தியாவும் உள்ளன. இலங்கையில் எச்.ஐ.வி உடன் 4000 இற்கும் அதிகமானோர் வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் 2900 பேர் மாத்திரமே சிகிச்சை பெறுகின்றனர். எச்.ஐ.வி. தொற்றிலிருந்து பாதுகாத்து கொள்ளவோ அல்லது, முழுமையாக மீள்வதற்கோ இன்னமும் தடுப்பு மருந்து பூரணமாக கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனாலும் உயிரியல் விஞ்ஞானிகள் அதற்கான தீர்வை நோக்கி வேகமாக பயணித்து வருகிறார்கள். எச்.ஐ.வியை எதிர்க்கும் திறன் கொண்ட நோய் எதிர்ப்பாற்றல் குருதியணுக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரபல நோபல் பரிசு பெற்ற மருத்துவவியலாளர் டேவிட் பல்டிமோர் தமது பரிசோதனைகளை எலிகளில் நிகழ்த்திய போது அனுகூலங்களான முடிவுகள் பெறப்பட்டதாகக் கூறுகிறார். எய்ட்ஸ் நோய் உலகிற்கு ஓர் அச்சுறுத்தல். இந்நோயானது மரணத்தை ஏற்படுத்தக் கூடியது. இந்நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதன் மூலமே முற்காப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம்.

நோய்த்தடுப்பு யுத்திகள் நன்கறியப்பட்டுள்ள போதிலும், கணிசமான அளவு இளைஞர்கள் எச்.ஐ.வி, எய்ட்ஸ் பற்றிய அறிவைப் பெற்றிருந்த போதிலும், தாங்கள் எச்.ஐ.வி தொற்றுதலுக்காளாகும் அபாயத்தைக் குறைவாக மதிப்பிட்டு, பேராபத்து விளைவிக்கும் நடவடிக்கைகளில் இறங்குகின்றனர் என எச்.ஐ.வி, எய்ட்ஸ் ஒழிப்பு அமைப்பு கூறுகின்றது.

பாலியல் தொழிலாலும் ஓரினச் சேர்க்கையாலும் இலங்கையில் எய்ட்ஸ் நோய் பரவுகின்றது. தற்போது 15, 16, 17 வயது மாணவர்களும் விபசாரத்தில் ஈடுபடுவதாகவும் தெரியவருகிறது. எதிர்காலங்களில் மாணவர்கள் மத்தியில் அதிகளவு எய்ட்ஸ் நோயாளிகள் உருவாகும் அபாயம் தோன்றியுள்ளது எனவும் அதிர்ச்சியான தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே பெற்றோர் இது விடயத்தில் கூடிய கவனம் எடுக்குமாறு வேண்டப்படுகின்றனர். சிறுவர்கள் ஆபாச படங்களை பார்ப்பதனால் தான் விபசாரத்திற்கு தள்ளப்படுகின்றனர். பெற்றோரும் ஆசிரியர்களும் மதவழிபாட்டு போதகர்களும் ஆபாச படங்களை பார்ப்பதிலிருந்து மாணவர்களை பாதுகாப்பதற்கான புத்திமதிகளை எடுத்துக் கூறி மாணவர் சமுதாயத்தை பாதுகாக்க முன்வர வேண்டும்.

பாலியல் உறவை திருமண வாழ்க்கைக்குள் மாத்திரம் வரையறுப்பதன் மூலம் எய்ட்ஸ் நோயிலிருந்து பாதுகாப்புப் பெற முடியும்.

**கலாபூஷணம் பரீட் இக்பால்...**
*(யாழ்ப்பாணம்)*

# ஆய்வாளர் மர்ஹூம் மொஹிடீன் நினைவு நிகழ்வு அக்கரைப்பற்றில்

இலங்கையின் சிறந்த ஆய்வாளரும், முற்போக்கு சிந்தனையாளரும் பன்னூலாசியரும், ஆவணக்காப்பாளருமான மர்ஹூம் எம்.ஐ எம்.மொஹிடீன் காலமாகி ஓராண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை அக்கரைப்பற்றில் நடைபெற்றன.

அன்னாரை நினைவு கூரும் வகையில் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள மர்ஹூம் எம்.ஐ. எம். மொஹிடீன் ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல் நிலைய கேட்போர் கூடத்தில் சமய நிகழ்வுகளும் நினைவுச் சொற்பொழிவுகளும் நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எ. சிராஜ் மஷூர் உரையுடன் ஆரம்பமாகின.

'குர் ஆன்' ஓதும் நிகழ்வுகள் கிழக்கிலங்கை அரபுக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர்அஷ் ஷேய்க் எ. ரயீஸ் முப்தி தலைமையில் நடைபெற்றன. அன்னாரின் நினைவுப்பேருரையை அக்கரைப்பற்று பட்டின ஜும்மாப்பள்ளி வாசல் நம்பிக்கையாளர் சபைத்தலைவரும், ஓய்வு பெற்ற கொத்தணி அதிபருமான எம்.ஏ. உதுமாலெப்பை நிகழ்த்தினார். அதிபர் திலகம் எம்.ஏ உதுமாலெப்பை பற்றிய அறிமுக உரையை ஏ எல்.சுஹைப் நிகழ்த்தினார். அதிபர் திலகம் உதுமாலெவ்வை தனது உரையில் அன்னாரின் ஆரம்பக் கல்வி, அவர் கற்ற பாடசாலைகள், பள்ளிப்பருவத்தில் அவர் காட்டிய திறமைகள், சாதனைகள் மற்றும் சமூக சேவை நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டார்.

அதன் பின்னர் அவர் உத்தரவு பெற்ற நில அளவையாளராக தகைமை பெற்றார். அதை தொடர்ந்து வீடமைப்புத் திணைக்களத்தில் உதவிக் கட்டட வடிவமைப்பாளராக (Assistant Architect) பணியாற்றினார். பின்னர் ஸாம்பியாவிற்கு சென்று அங்கு 4 வருடங்கள் பணிபுரிந்தார்.

அவர் அங்கு Chief Inspector of Building ஆகவும், Chief Land Surveyor ஆகவும் கடமையாற்றினார். இக்காலகட்டத்தில் அவரது காட்டிய விடாமுயற்சியின் காரணமாக Construction Survey Institute of London நடத்தும் பரீட்சையில் சித்தியடைந்து அதில் அங்கத்துவம் பெற்றார்.





மர்ஹூம் மொஹிடீன் ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுவது, தரவுகளைச் சேகரிப்பது, ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்ற நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடும் ஆர்வமும் காட்டியதாக குறிப்பிட்ட உதுமாலெப்பை, முஸ்லிம் சமூகம் தொடர்பான நூல்களை வெளியிட்டும், ஆய்வுகளை மேற்கொண்டும் உள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஓய்வுபெற்ற கமநல பிரிவு உத்தியோகத்தர் எ.எம் ஜஹ்பரும் உரையாற்றினார். ஆளுநர் சபை தலைவர் ஜௌபர் இஸ்மாயிலின் சிறப்பு சொற்பொழிவு 'சூம்' தொழில் நுட்பமூலமாக ஒளிபரப்பு செய்யப்பட்டது.

மர்ஹூம் எம்.ஐ எம். மொஹிடீன் ஆய்வு மற்றும்ஆவணப்படுத்தல் நிலையமும் அவரின் பெயரில் அவர் பிறந்த வீடு அமைந்துள்ள வீதியும் ஆளுநர் சபையின் தலைவர் ஜௌபர் இஸ்மாயிலினால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அக்கரைப்பற்று பட்டின ஜும்மாப்பள்ளி வீதியில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் மர்ஹூம் எம்.ஐ எம். மொஹிடீனின் ஆய்வுக்கட்டுரைகள், தகவல் கணிப்பீடுகள், அவரது சிந்தனையில் உருவான கட்டட தொழில் நுட்பங்கள் , கருத்துக்கணிப்பீடுகள், அன்னார் கலந்து கொண்ட தேசிய, சர்வதேச ரீதியிலான பேச்சுகள் பற்றிய துணுக்குகள் போன்றன பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அத்தோடு அவை இறுவட்டு வடிவத்திலும் வைக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் பிரத நிறைவேற்று அதிகாரி சிராஜ் மசூர் தெரிவித்தார்.

**எம்.ஏ.பகுர்டீன்...**
*(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)*

# பயங்கரவாதத்தை போலவே காலநிலை மாற்றமும் நவீன உலகுக்கு அச்சுறுத்தல்!

**காலநிலை மாற்றத்துக்கு பயனுள்ள தீர்வுகளை வழங்கக் கூடிய நாடுகள், அந்த விடயத்தில் நேரடியாகத் தலையிடாவிட்டால் மனித குலத்தின் எதிர்கால இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

COP 27 மாநாட்டின் வெற்றிக்கு மிகப்பெரும் தடையாக இருப்பது அரசியல்மயப்படுத்தலும், காலதாமதமுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

COP 27 உடன்படிக்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய 'மனிதன்_காலநிலை மாற்றம்'எனும் மிகப்பெரிய அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்காக உலகத் தலைவர்கள் கடந்த 27 ஆண்டுகளாக 'கொப்' கட்டமைப்பின் கீழ் கூடி வருகின்றனர். எனினும், கொப் செயன்முறையின் கீழ் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள காலநிலை மாற்றத்துடன் தொடர்புடைய உலகளாவிய மற்றும் கூட்டுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் இன்னும் தயாராக இல்லை.

கொப் 27 இல் எட்டப்பட்ட முடிவுகள் துன்பத்திலிருந்து நாடுகளை விடுவித்து ஒரு முற்போக்கான நிலையில் வைக்க மீண்டும் தவறி விட்டன. அரசியல்மயமாக்கல் மற்றும் காலதாமதம் ஆகியனவே வெற்றிக்கு மிகப்பெரிய தடையாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும். உச்சிமாநாட்டின் இறுதி முடிவு ஊக்கத்தை இழப்பதாக அமைந்துள்ளது. மிகப்பெரிய சேதத்திற்கு வரலாற்று ரீதியாக பொறுப்புக்கூற வேண்டிய நாடுகள் மற்றும் அர்த்தமுள்ள பங்களிப்புகளை வழங்கக் கூடிய நாட்டு தலைமைகள் சமூமளிக்காமையானது காலநிலை நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைத் தடுக்கிறது.

உலகிலுள்ள தெற்கு நாடுகள் இழப்பு மற்றும் சேதத்துக்காக பகுதி அளவில் வழங்கப்பட்ட நிதியுடன் போராடிய போதும், கடந்த ஆண்டுகளில் G77 நாடுகளின் ஒருமித்த நிலைப்பாடு மற்றும் அழுத்தம் காரணமாக பாரியளவில் சாதித்துள்ளன.



## காலநிலை மாற்றத்திற்கு தீர்வுகளை வழங்கக் கூடிய நாடுகள் இவ்விடயத்தில் தலையிடாமலிருப்பது மனிதகுலத்தின் எதிர்கால இருப்பை அச்சுறுத்தும்!

இழப்பு மற்றும் சேதங்கள் நிதி சரியான பாதையில் செல்கின்ற போதும், தேவையான நிதி பங்களிப்புகளை செய்வதற்கு பொறுப்பான நாடுகளை அடையாளம் காண்பதில் ஒரு முக்கியமான புறக்கணிப்பு உள்ளது. பொறுப்புக்கூறுதல் மற்றும் இழப்பீடுகள் பற்றிய சரத்துக்களைக் கொண்டதான நிதியை ஸ்தாபிப்பது பற்றிய எவ்வித குறிப்புகளும் இதில் உள்ளடக்கப்படவில்லை. இதன்விளைவாக இதில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து இழப்பு மற்றும் சேதங்கள் நிதி, வினைத்திறனுடன் செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் G77

## COP 27 உடன்படிக்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட அறிக்கை

நாடுகள் தொடர்ந்தும் பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டும்.

மேலும், இந்த நிதி கடந்தகால நிகழ்வுகளுக்கானது, இது ஏற்பட்ட சேதங்களுக்கு மட்டுமே இழப்பீடு வழங்கும். இது காலநிலை மாற்றத்திற்கான மூல காரணங்கள் குறித்து கவனம் செலுத்த மாட்டாது. எனவே தற்போது இடம்பெற்றுவரும் பேரழிவுகளை வரும் முன்னரே தடுப்பதற்காக, 100 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி எனும் இலக்கை அடைவதனை கருத்திற் கொண்டு நாம் முயற்சி செய்ய வேண்டும்.

உலகம் முன்பு கணித்ததை விட வேகமாக முன்னேறி வருகிறது. எனவே, காலநிலை மாற்றத்தைத் தணிக்கும் முயற்சிகள் மேலும் தேக்கநிலையில் இருக்க முடியாது. உலக வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸுக்கு மேல் உயரக் கூடாது என்று கடந்த ஆண்டு உலகமே ஒருமனதாக தீர்மானித்தது. இதற்கான செயல்திட்டமும் முன்வைக்கப்பட்டது. அதற்கான அசல் இலக்கு நடைமுறைப்படுத்தப்படாத போதும் அதனை செயற்படுத்த வேண்டிய விதம் குறித்து கொப் 27 இல் சமரசம் செய்யப்பட்டது.

மேலும், புதைபடிவ எரிபொருட்களை படிப்படியாக வெளியேற்றுவதிலோ அல்லது உமிழ்வுகள் மீதான புதிய இலக்குகளிலோ உறுதியான உறுதிப்பாடு எதுவும் இல்லை. இந்த ஒப்பந்தங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயத்திற்கு ஒரு எளிய கட்டு. காலநிலை மாற்றம் என்பது பயங்கரவாதத்தைப் போலவே நவீன உலகிற்கு மிகவும் அச்சுறுத்தலானது. உலகத் தலைவர்கள் அக்கறையுடன் இவ்விடயத்தில் ஈடுபடவில்லை என்றால், உலகளாவிய காலநிலை மோசமடைந்து, குடியிருப்புகள்பாதிக்கப்படும்போது அவர்கள் வெறுமனே ஓரத்தில் இருந்து பேச்சு நடத்தியவர்களாக மட்டுமே இருப்பர்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெறவுள்ள கொப் 28 மற்றொரு தொடக்கப்புள்ளியாக இருக்கக்கூடாது, மாறாக கடந்தகால முடிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டமை தொடர்பில் ஆராய்வதாக இருக்க வேண்டும்.

காலநிலை மாற்றத்திற்கான உலகளாவிய செயல் திட்டங்களை வலுப்படுத்துவதற்கான ஒரு வருட பணிக்கான ஒப்புதல் முத்திரையாக இது இருக்க வேண்டும். ஆற்றல் துறைக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கும் ஆரம்பமாக வேண்டும்.

மாநாட்டில் பங்கெடுக்கும் தரப்பினருடன் தொடர்புடைய வகையில் கொப் 28 இல் நிலைபேண்தகு முன்னேற்றம் காணப்படட வேண்டும். இல்லையென்றால் கொப்பினை கலைப்பதே சிறந்தது. இது மேலும் தொடர தேவையில்லை.

---

# பயனுள்ள பொருத்தமான திட்டமே எமது நாட்டுக்கு இன்று அவசியம்

**எமது நாட்டு மக்கள் தனிநபரை முன்னிலைப்படுத்தியே வாக்களிக்கின்றனர். ஆனால் இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரகலய எனும் போராட்டத்துடன், தனிஆளை முன்னிலைப்படுத்தி அதிகாரத்தை வழங்குவதை நிராகரிக்க வேண்டுமென இன்று மக்கள் புரிந்துள்ளார்கள் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் பொறியிலாளர் ஆரிய வங்ச திசாநாயக்க தெரிவித்தார்.**



## ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ஆரியவங்ச திசாநாயக்க

பிடகோட்டே மார்க்கா நிறுவன மண்டபத்தில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இன்று நாட்டுக்கு தேவைப்படுவது இன்னொருவரன்றி தேசத்துக்கு பயனுள்ள பொருத்தமான நிரந்தர கொள்கையுடன் அமைந்த வேலைத் திட்டமாகும். இன்றுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்து தேசம் முன்னோக்கிப் பயணிக்க ஏதுவான பாதை அவசரமாகத் தேவைப்படுகின்றது.

எமது கட்சியின் முன்னோடியான மறைந்த அமைச்சர் லலித் அன்று கண்ட பொருளாதாரம் இன்று இல்லை. மோசமான திறந்த பொருளாதாம் தான் நாட்டில் அமுலாக்கப்படுகின்றது. நாட்டின் விவசாயம் வீழ்ச்சிகாண இடமளிக்கப்பட்டது. நாட்டுக்கு பிரச்சினை வந்தால் மக்களுக்கான சேவைகள் தடைப்படும் நிலைதான் உள்ளது.

வெளிநாட்டவர்களின் டொலருக்குத்தான் கணக்கு செய்ய வேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. ஆட்சியாளர்களின் தவறினால் இளைஞர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர்" என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் இந்தக் கட்சி பாரிய தொகைக்கு விலை

பேசப்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கூட முன்வைக்கப்பட்டதாகவும் தெரிவித்த கட்சித் தலைவர், எதிர்வரும் தேர்தல்களில் களமிறங்குவதாகவும் அதற்காக மக்களை ஒன்று சேர்க்கும் பணிகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

(பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

---

# தமிழ் அரசியல்கைதிகள் மீதான ஜனாதிபதியின் கரிசனைக்கு அவுஸ்திரேலியா – இலங்கை நண்பர்கள் கழகம் பாராட்டு

**இலங்கையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் சிலரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுவித்திருப்பதற்கு நன்றி தெரிவிப்பதுடன் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிப்பதற்கு அவர் ஆவன செய்ய வேண்டும் எனக் கோரும் கடிதம் ஒன்றை அவுஸ்திரேலியா வாழ் மூவினத்தையும் சேர்ந்த இலங்கையர்கள் தங்கள் இலங்கை நண்பர்கள் கழகத்தின் ஊடாக அனுப்பி வைத்துள்ளனர்.**


FRIENDS OF SRI LANKA - AUSTRALIA
P O Box 5292 Brandon Park Victoria 3150 AUSTRALIA
Email: uthayam12@gmail.com
29th November 2022

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் நெருக்கடியான நேரத்தில் ஜனாதிபதியாக தெரிவாகிய தங்களுக்கு எமது வாழ்த்துக்களை தெரிவிக்கின்ற அதேசமயம், நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சில அரசியல் கைதிகளை விடுவித்த தங்களது பெருந்தன்மையான நிலப்பாட்டை நம்நாட்டின் அமைதியை விரும்பும் அனைத்து குடிமக்களும் வரவேற்கிறோம்.

துரதிர்ஷ்டவசமாக, சட்டப்படி குற்றப் பத்திரம் வழங்கப்படாமல் இன்னும் நூற்றுக்கணக்கானவர்கள் சிறையில் இருக்கிறார்கள். இவர்கள் குற்றவாளிகளா, குற்றம் சுமத்தப்பட்டவர்களா அல்லது இன்னும் குற்றம் சுமத்தப்படாதவர்களா என்பதைப் பொருட்படுத்தாமல் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீதான எல்லா நடவடிக்கைகளும் சட்டப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டம் கடுமையானது – விரும்பத்தகாதது. எனினும் தவிர்க்க முடியாமல் உருவாக்கப்பட்டது என்பதை இலங்கை அரசு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஏற்றுக் கொண்டது.

குறிப்பிட்ட இந்தச் சட்டத்தை நீக்க இலங்கை அரசு பல முயற்சிகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மேற்கொண்டு, ஏற்றுக் கொள்ளக்கூடிய உள்நாடு மற்றும் வெளிநாட்டுக் கோட்பாட்டிற்கு இணங்க புதிய சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும்.

இலங்கை அரசு இன்னமும் இக்கடமையை நிறைவேற்ற தாமதிப்பதனால், இந்தச் சட்டம் தொடர்ந்தும் நிறைவேற்றுச் சட்டத்தொகுப்பில் இடம்பெறுகிறது. இச்சட்டத்தின் கீழ் கைதான பெரும்பாலானவர்களுக்கு எதிராக கிடைக்கும் ஒரே சாட்சியான அவர்களின் விருப்பத்துக்கு மாறாக பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் பெறப்பட்ட வாக்குமூலமானது நடைமுறையில் சட்டப்படி ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

அவர்கள் மீதான வழக்கைத் தொடர்வதற்கு வழக்குகள் தயாராக இல்லாததால் இவ்வழக்குகளில் அநேகமானவை ஒத்திப்போடப்பட்டுள்ளன. அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் வெகுகாலமாக காவலில் இருக்கிறார்கள். அவர்களை காவலில் எடுத்த உடனேயே நீதிவிசாரணை மேற்கொண்டிருந்தால், அவர்களுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும்.

## ஏனைய அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு வினயமான வேண்டுகோள்

காவலில் இருப்பவர்களின் குடும்பத்தினர், குடும்பத்திற்காக உழைப்பவரின்றி வெகுகாலமாக துன்பமடைந்துள்ளனர். அதிமுக்கியமான இக்காரணிக்காக கொடுக்க வேண்டிய கவனத்தை பயங்கரவாத தடைச்சட்டம் கொடுக்கவில்லை. குறிப்பிட்ட இந்தப் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கடுமையான இயல்பைத் தவிர்த்தமையால்தான், 1971ஆம் ஆண்டு காலத்தில் நடந்த உள்நாட்டுக்கிளர்ச்சியில் கைதானவர்கள் (ஜே.வி.பி) நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

அவர்கள் பின்னர் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். ஏன் அதே வழிமுறையை தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கும் கடைப்பிடிக்க முடியவில்லை என்பதை எம்மால் அறியமுடியவில்லை.

இந்த வழக்குகள் அனைத்தும் அரசாங்க சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆதிக்கவரம்பின் கீழ் வருவதாக கருத முடியாது. சட்டமா அதிபர், அரசின் தலைமைச் சட்ட ஆலோசகராகும் போது, இந்த வழக்குகள் அரசின் பரிமாணத்தைப் பெறுகின்றன.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையானது குறித்த காலத்தில் தீர்க்கப்பட்டிருக்குமேயானால், காவலில் இருக்கும் அதிகப்படியானோர் இப்போதுள்ள நிலையில் இருந்திருக்க மாட்டார்கள். நாட்டுக்கும் சமூகத்திற்கும் பலனளிக்கும் குடிமக்களாக இருந்திருப்பார்கள் என்று நியாயமாக சொல்லியிருக்க முடியும்.

எனினும் தாங்கள் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் தாங்கள் இந்த அரசியல் கைதிகள் விடயத்தில் காண்பித்திருக்கும் கரிசனையை நாம் வரவேற்கின்றோம். எஞ்சியிருக்கும் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் மனிதாபிமான அடிப்படையில் தாங்கள் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோருகின்றோம்.

இது விடயத்தில் மேலும் தாமதிக்காமல் இதர தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இவ்வாறு அவுஸ்திரேலியா வாழ் மூவினத்தையும் சேர்ந்த இலங்கையர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தகவல்: **லெ.முருகபூபதி...**
*மூத்த எழுத்தாளர், அவுஸ்திரேலியா*

---

# ஐந்தாம் ஆண்டில் கால்பதிக்கும் கெப்பிட்டல் FM வானொலி

**இலட்சக்கணக்கான ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்போடு, 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி 'இது நம்ம ரேடியோ' என்னும் மகுட வாசகத்தை சுமந்தவாறு FM 94, 103.1என்னும் பண்பலைகளிலும் WWW.CAPITALFM.LK என்னும் இணையத் தளத்தின் ஊடாகவும் தன் அத்திவாரத்தின் அத்தியாயத்தை ஆரம்பித்தது கெப்பிட்டல் FM.**

TRYMASS MEDIA NETWORK நிறுவனத் தலைவர் வின்சேந்திரராஜனின் எண்ணக்கருவில் உருவான கெப்பிட்டல் FM ஐ சுமதி வின்சேந்திர ராஜன், நிதர்ஷன் வின்சேந்திரராஜன், விதுர்ஷன் வின்சேந்திரராஜன் ஆகியோர் பணிப்பாளர்களாக இருந்து திறம்பட வழி நடத்துகிறார்கள்.

இவர்களுடன் கெப்பிட்டலின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக லீ சிங் மே, அலைவரிசை பிரதானியாக K.C.பிரகாஷ், சிரேஷ்ட முகாமையாளராக A.L.ஜவீர், நிகழ்ச்சி முகாமையாளராக வு.தரணிதரன், தலைமை நிர்வாகி மற்றும் இசைக் கட்டுப்பாட்டாளராக S.T.ரவுப், உதவி முகாமையாளர்களாக திருமதி ஹம்சிமாலன், ஆகாஷ் ரஜீவ மற்றும் அறிவிப்பாளர்களான பிரவீனா, பிருந்தா, கிருசாந்தினி, அழகேந்திரன், குருஈஸ்வர் திரேஷ்குமார், கெலிஸ்டஸ், சஞ்சய், ரீஜிவன், ரேகாசினி, கனுசியா ஆகியோருடன் செய்திப் பிரிவு முகாமை யாளராக டில்ஷான் தாலிப், வெளிக்கள செய்தி முகாமையாளராக பிரஷாந்தன் மற்றும் செய்தியாசிரியர் களான பாசித் ஏ. நியாஸ், வினிப்பிரியா, பிரசாந்தி, யதுஷா மற்றும் video editor ராகவர்ணா, ரூபன் போன்றோரும் சிறப்பாக கடமையாற்றுகிறார்கள்.

காலை ஐந்து மணியில் இருந்து ஏழு மணி வரை பிருந்தா மற்றும் கனுசியாவுடன் நல்லூர் ஆலய மணியோசையோடு ஆரம்பமாகும் வணக்கம் கெப்பிட்டல் நிகழ்ச்சியும், ஏழு மணியில் இருந்து பத்து மணி வரைக்கும் புதிய நடையில், அறிவியல் உண்மைகள், பத்திரிகை கண்ணோட்டம், உளவியல் சார் கருத்துக்கள், மக்களின் எதிர்பார்ப்பு, அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு மற்றும் தெளிவுடன் கேட்போரையெல்லாம் கலகலப்பாக வைத்திருக்கும் காலை நேர நிகழ்ச்சியினான விவேகம் பீ பொசிட்டிவ் நிகழ்ச்சியினை அலைவரிசை பிரதானி K.C.P.யுடன் பிரவீணா தொகுத்து வழங்குகிறார்.

காலை பத்து மணியில் இருந்து ஒரு மணி வரைக்கும் 90 களில் வெளியான பாடல்களோடும், புதிய புதிய சினிமா தகவல்களோடும், ஹம்சி மற்றும் திரேஷ் தொகுத்து வழங்கும் கெப்பிட்டல் ரிதம் நிகழ்ச்சியையும் ஒரு மணியில் இருந்து மூன்று வரைக்கும் ஆகாஷ் ரஜீவ் தொகுத்து வழங்கும் இடைக்கால பாடல்களில் ராகமாக ஒலிக்கும் பாட்டு தலைவன் நிகழ்ச்சியையும் கெபிட்டல் அலைவரிசையில் கேட்கலாம்.

தரணீதரன் மற்றும் கிருஷாந்தியுடனான மாத்தி யோசி நிகழ்ச்சியும் மாலை ஐந்து மணியிலிருந்து எட்டு மணி வரைக்கும் கலகலப்பான நகைச்சுவைகளோடு கெப்பிட்டல் ட்ரைவ் நிகழ்ச்சியினை கெலிஸ்டஸ் மற்றும் ரோகாசினி இணைந்து வழங்குகிறார்.

இரவு எட்டு மணியிலிருந்து பத்து மணிவரையும் இதயத்தின் மூச்சுக்காற்றாய் ஒலிக்கும் காதலுடன் நிகழ்ச்சியினை அழகேந்திரனும் பத்து மணியிலிருந்து பன்னிரண்டு மணிவரைக்கும் காதலையும் கவிதை யையும் சுகமாய் தந்து இடைக்கால பாடல்களை தரக்கூடிய இரவு நேரத்து முதன்மை நிகழ்ச்சியான நீ நான் இசை நிகழ்ச்சியினை சிரேஷ்ட அறிவிப்பாளர் யு.டுஜவீர் சிறப்பாக திறம்பட படைத்து கொண்டிருக்கிறார்.



அத்தோடு பன்னிரண்டு மணியிலிருந்து அதிகாலை மூன்று மணி வரை துள்ளல் பாடல்களோடு விடியும் வரைநிகழ்ச்சியினை சஞ்சய்,மற்றும் ரிஜீவன், கெபிட்டல் காற்றலையின் இரவுபொழுதை கோலாகலமாக கொண்டு செல்கிறார்கள்.

அதிகாலை மூன்று மணியில் இருந்து நான்கு மணிவரை காற்றோடு கலந்திருக்கும் காதல் கவிதைகளோடு காற்றின் மொழி நிகழ்ச்சியும், நான்கு மணியில் இருந்து ஐந்து மணிவரை நினைவுகளை மீட்டிப்பார்க்க கூடிய நீங்காத நினைவுகள் நிகழ்ச்சியும் கெப்பிட்டலில் ஒலிக்கிறது.

2018 ஆண்டு அரச வானொலி விருது விழாவில் சிறந்த விளையாட்டு நேர்முக வர்ணனையாளருக்கான விருதையும் சிறந்த வானொலி நடிகைக்கான விருதையும் கெபிட்டல் சுவீகரித்துக் கொண்டது. அத்தோடு 2019ம் ஆண்டு அரச வானொலி விருது விழாவில் சிறந்த ஆண் நிகழ்ச்சி தொகுப்பாளருக்கான விருது, சிறந்த சிறுவர் நாடக பிரதியாளருக்கான விருது, சிறந்த ஆண் செய்தி வாசிப்பாளருக்கான விருது, சிறந்த நகைச்சுவை நிகழ்ச்சிக்கான விருது மற்றும் ஆண்டின் சிறந்த உரைஞருக்கான விருது அடங்களாக ஐந்து அரச விருதுகளையும் 2021 ஆண்டு; சிறந்த விளையாட்டு நிகழ்ச்சிக்கான சிறப்பு சான்றிதழ், சிறந்த சிறுவர் நாடக பிரதியாளருக்கான சிறப்பு சான்றிதழ், மற்றும் சிறந்த பிராந்திய செய்தியறிக்கைக்காக இரண்டு சான்றிதழ்கள் அடங்கலாக நான்கு சான்றிதழ்களையும் சிறந்த சிறுவர் நாடக நடிகைக்கான விருதினையும் பெற்றுக் கொண்டதுடன் மேலும் 2022ஆம் ஆண்டு அரச வானொலி விருது வழங்கும் விழாவில் சிறந்த நேர்முகநிகழ்ச்சிக்கான விருது, சிறந்த மாலை நேர நிகழ்ச்சிக்கான விருது மற்றும் சிறந்த நிலையக் குறியிசைக்கான வெற்றிச் சான்றிதழ், சிறந்த பிராந்திய செய்தியாளர்கான வெற்றிச்சான்றிதழ் என மொத்தமாக நான்கு விருதுகளை பெற்று வானொலி வரலாற்றில் சாதனை படைத்து தலைநிமிர்ந்து தன் பணியை திறமையுடன் படைக்கிறது!



இத்தனை சிறப்புகளோடு இன்னும் பல புதிய மாற்றங்களோடு ஆறாம் ஆண்டில் ஆண்டில் கால்பதிக்கும் கெப்பிட்டல் FM இன்னும் முடிவில்லாத வயதுகளை எட்டிப்பிடிக்கப் போகிறது என்பது உண்மை.

**யதுஷா ரவித்தியாகராஜா...**

## அரச உத்தியோகபூர்வ ஆடை... (தொடர்)

இரத்து செய்யப்பட்டுள்ளன. கடந்த (28) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எம்.பி.கே. மாயாதுன்னவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள புதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கையர் ஒருவர் 10,000... (தொடர்)

குறைக்கவும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் வசிப்பவர்கள் இப்போது இந்திய ரூபாவை மற்றொரு நாணயமாக மாற்றிப் பயன்படுத்த முடியுமென்றும், இதை செயல்படுத்துவதற்கு, இலங்கையிலுள்ள வங்கிகள் இந்திய வங்கியுடன் (Nostro account) நொஸ்ட்ரோ கணக்குகளை" ஆரம்பிக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமென்றும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(நாஸ்ட்ரோ கணக்கு என்பது ஒரு வங்கி மற்றொரு வங்கியில் வெளிநாட்டு நாணயத்தில் வைத்திருக்கும் கணக்கைக் குறிக்கிறது)

இலங்கை வங்கிகளின் கடல்கடந்த வங்கி அலகுகள், (OBU) வதிவிடமில்லாதவர்களிடமிருந்தும் சேமிப்பு மற்றும் வைப்புகளை ஏற்க அனுமதிக்கப்பட்டுள்ளமை மற்றொரு முக்கியமான அம்சமாகுமென இந்திய ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஊடக அறிக்கைகளின்படி, ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் பணம் அனுப்புதல் உட்பட அனைத்து நடப்புக் கணக்கு பரிவர்த்தனைகளும் இலங்கையில் வசிப்பவர்கள் மற்றும் வசிக்காதவர்களுக்கிடையில் மேற்கொள்ளப்படலாம்.

இந்த ஏற்பாட்டை சில மாதங்களுக்கு முன்னர் இந்தியா அங்கீகரித்த போதிலும், இலங்கை மத்திய வங்கி நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக ரூபாவை அறிவிக்கவில்லை.

## பல்கலை அனுமதிக்கான... (தொடர்)

இறுதியில் வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

க.பொ. த உயர் தர 2021(2022) பரீட்சைக்காக பாடசாலை விண்ணப்பதாரிகள் 2,36,035 பேரும், தனியார் பரிட்சார்த்திகள் 36,647 பேருமென மொத்தம் 2,72,682 பேரும் தோற்றி இருந்தனர். இதில் 1,71,497 பேர் பல்கலைக்கழக அனுமதிக்காக குறைந்தபட்ச தகுதிகளை பெற்றிருந்தனர்.

அவ்வாறு பல்கலைக்கழக அனுமதிக்காக குறைந்தபட்ச தகுதியைப் பெற்றுக் கொண்டவர்களில்1,49,946 பேர் பாடசாலை மாணவர்களாவர். இவர்களில் 21,551 தனியார் பரீட்சார்த்திகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பரீட்சை முடிவுகளின் படி அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 42, 519 மாணவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுற்றுலா தலமாகும்... (தொடர்)

இந்தப் பிரதேசத்தை சுற்றுலாப் பிரதேசமாக அபிவிருத்தி செய்து மட்டக்களப்பை 2023 ஆம் ஆண்டில் சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்றுவதே இதன் நோக்கமாகும். மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே. கருணாகரன் உட்பட பல பிரதேச செயலாளர்கள் ZOOM தொழில்நுட்பத்தினூடாக இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஏ. சூலானந்த பெரேரா, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.சி.எம். ஹேரத் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

## மலையக மக்களும்... (03 ஆம் பக்கத் தொடர்)

நாட்டுக்கு அதிகளவான வருமானத்தை மலையக மக்களே ஈட்டிக்கொடுக்கின்றனர். ஆனாலும் இன்றுவரை நலிவடைந்த சமூகமாகவே இவர்கள் பார்க்கப்படுகின்றனர். எனினும் இவர்களின் உழைப்பினால் பெருந்தோட்ட நிறுவனங்கள் பெரும் இலாபங்களை ஈட்டி வருகிறது.

1823 ஆம் ஆண்டு கூலித்தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட இவர்கள் அடிப்படை வசதிகளின்றியே வாழ்கின்றனர்.

மலையகத்திற்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் தேவைப்படுகின்றன.இந்த வீட்டுத் தேவைகளை அரசாங்கத்தால் தனியாக பூர்த்தி செய்ய முடியாது. மாறாக வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்று இதனை மேற்கொள்ள முடியும். இந்திய அரசாங்கம் 10 ஆயிரம் வீடுகளை வழங்கிய போதிலும் வீடுகளை நிர்மாணிப்பதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் காணிகளை ஒதுக்கித் தரவில்லை. இடமில்லாது வீடுகளை எவ்வாறு நிர்மாணிப்பது? தோட்டப்புறங்களுக்கு 37 ஆயிரத்துக்கும் அதிகமான மலசலகூடங்கள் தேவையாக உள்ளன. நுவரெலியா மாவட்டத்துக்கு மாத்திரம் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மலசல கூடங்கள் அவசியமாக உள்ளன. உணவுகளை உட்கொண்டால்தானே மலசலகூடங்களைப் பயன்படுத்த வேண்டும். அதுதான் உண்பதற்கே வழியில்லையே என்றே சிந்திக்கத் தோன்றுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தோட்டங்களை அரசாங்கம்... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்த பெருந்தோட்டங்களை ஒப்படைத்தது.1992 ஆம் ஆண்டு தோட்டங்களில் காணப்பட்ட பௌதீக மற்றும் மனித வளம் தற்போது அருகியுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள பெருந்தோட்ட கம்பனிகளில் சுமார் 9,ஆயிரம் காணிகள் காடாக்கப்பட்டுள்ளன.22 கம்பனிகள் என்பது உண்மையல்ல.நான்கு கம்பனிகளே அனைத்து பெருந்தோட்டங்களையும் நிர்வகிக்கின்றன.

1992 ஆம் ஆண்டு பெருந்தோட்டங்களை கம்பனிகளுக்கு கையளிக்கும்போது 12 இலட்சம் தொழிலாளர்களே பணி புரிந்தனர்.ஆனால் தற்போது பெருந்தோட்டங்களில் ஒரு இலட்சத்து 43 ஆயிரம் பேர் மாத்திரமே தொழில் புரிகின்றனர்.

மலையக மக்களின் மனித உரிமைகள் மறுக்கப்பகின்றன.நாட்டின் பொதுச்சட்டத்திற்கு அப்பாற்பட்ட வகையில் தோட்ட கம்பனிகளால் மலையக மக்கள் நெருக்கடிக்குள்ளாகின்றனர். பெருந்தோட்டங்களை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்க கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சீசீரிவி கமெராவின்... (03 ஆம் பக்கத் தொடர்)

நட்டஈட்டை பெறுவதில் பிரச்சினை எழுந்துள்ளது.

இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சீ.சீ.டிவி காட்சிகள் அழிக்கப்பட்டுள்ளமை உண்மை. இது தொடர்பில் வழக்கு தொடர வேண்டும். அப்போதே முழுமையான நட்டை ஈட்டைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும்.

இதற்கு பதில் வழங்கிய இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, சட்ட மாஅதிபர் அது தொடர்பில் விரைவில் வழக்குத் தொடர வேண்டும். இவை, அழிக்கப்பட்டமை தொடர்பில் ஆகக் குறைந்தது 03 அல்லது 04 பில்லியன் டொலர்களை யாவது பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## கொட்டகலையில் கோலாகல.... (03 ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதியின் இணைப்பாளரும் இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளருமான எஸ் ஆனந்தகுமாரும் சிறப்பு அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆசிரியர்களான ஜஸ்டின், ஜன்னம் சம்மேளனத்தின் திட்டமிடல் ஒருங்கிணைப்பாளர் முரலீஸ்வரன்,என் முருகானந்தன், B. இராதாகிருஷ்ணன், ISA உத்தியோகஸ்தர் சிவானந்தன், வாஹினி ஸ்டுடியோ சுரேஷ் ,கொழும்பு ஜே கே Gram stores ஜே கே குமார் ஆகியோர் சிறப்பதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். G.A செல்லப்பன் CTR, கோபி டெய்லர் கோபி, கொழும்பு பிரதிமேயரின் பிரத்தியேக செயலாளர் மொஹமட் ஹமீட், இசையைப்பாளர் தவராஜா எஸ் ரி தேவா ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

## IMF தீர்மானங்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

நிதி, நல்லிணக்கத்தைப் பேணுவது இன்றியமையாதது . இதற்காக அரசியலமைப்பு ஏற்பாடுகள் போன்ற சட்டக் காரணிகளால் நிதி முகாமைத்துவம் அதிகரிக்கப்பட வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியை அபிவிருத்தி வங்கியாகக் கருதாது, அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். சர்வதேச நாணய நிதியம் ஆதரவளித்தாலும், ஆதரவளிக் காவிட்டாலும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், இலங்கையில் செயற்படுத்தப்பட்ட மானியத் திட்டத்துக்கு அதிக பணம் செலவழித்ததால், துண்டு விழும் தொகை மேலும் அதிகரித்தது.இதுவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு காரணமாக அமைந்ததென முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அறபா வித்தியாலய அதிபருக்கு பாராட்டு

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை முடிவின் பிரகாரம் (2021) அக்கரைப்பற்று கல்வி வலயத்தில், அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது. இதனை முன்னிட்டு, அதிபர் எம்,ஏ அன்சார் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். மேலும் இப்பாடசாலையில், 18 வருடங்களாக இஸ்லாம் பாட ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெறும் மௌலவி யூ.ஏ.அஸ்ரப் அலிக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டது.

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. ஏற்பாடு செய்த இந்நிகழ்வு நேற்று (30) நிகழ்ந்தது. வை.எம்.எம்.ஏ. அட்டாளைச்சேனை கிளையின் தலைவரும், அறபா பாடசாலையின் பிரதி அதிபருமான எம்.ஐ. ஹாசீம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ. பஸ்மில், அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. போசகரும், பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல் தலைவருமான சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன், அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையின் அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் முஹம்மட் றியாஸ், ஆலோசகர் ஏ.சீ.நியாஸ், பொருளாளர் ஆசிரியர் ஏ.எம். சுலைமாலெப்பை, கலாசாரப் பணிப்பாளர் மௌலவி எஸ்.சபீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பயன்படுத்தப்படாத காணி... (தொடர்)

குறிப்பிட்டார். பெருந்தோட்டக் கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு, அமைச்சர் வைத்தியகலாநிதி ரமேஷ் பத்திரன தலைமையில் பாராளுமன்றத்தில் (25) கூடிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாரிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பில், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய விடயம் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். இங்கு பேசிய அமைச்சர், பாரிய பெருந்தோட்டக் கம்பனிகள் புதிய கன்றுகளை நடுவதை முற்றாக நிறுத்தியுள்ளன. இதற்குப் பதிலாக தற்போதையை பயிர்களைப் பேணுவது அல்லது அந்தக் காணிகளில் உள்ள மரங்களை வெட்டி விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கத்தின் பொது விடயமொன்றுக்கு சிறிய அளவிலான காணியையோ அவர்கள் வழங்குவதில்லை.

இதற்கமைய, பயன்படுத்தப்படாத காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு அவசியமான சட்ட வரைபு நடவடிக்கைகளுக்கு, ஆதரவு வழங்குவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார். பயன்படுத்தப்படாத காணிகளை அரசாங்கம் சுவீகரித்து அவற்றை சிறிய அளவிலான தேயிலைக் கைத்தொழிலுக்கு வழங்கி, தேயிலைக் கைத்தொழிலை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் முன்மொழிந்தார்.

தேயிலைக்கான பசளை மற்றும் பூச்சிகொல்லிகள் சந்தையில் விற்பனை செய்யப்படும் விலை மற்றும் அவற்றின் போதுமான தன்மை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, இசுறு தொடங்கொட, குணதிலக்க ராஜபக்ஷ, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, வீரசுமன வீரசிங்க, வீ. இராதாகிருஷ்ணன், சுதத் மஞ்சுள மற்றும் அகில எல்லாவல உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

## தட்டிக் கழிக்கப்பட்டதை தமிழ் மக்கள்... (தொடர்)

சபையை பரிசீலிப்பது தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன (29) பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலே, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்தார். இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களை தீர்க்கும் வகையில், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த மூடாக மாகாணங்களின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன.

இதனை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம், தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்று மாறு, தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். இதுவே சகலரும் ஏற்றுக்கொள்ளும் நடைமுறைச் சாத்தியமான வழி.இந்நிலையில்,1980 களில், தமிழ் மக்களால் தட்டிக்கழிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபை பற்றி பிரஸ்தாபிப்பதற்கு நாம் தயாராக இல்லை.

2009 இல்,யுத்தம் தோற்கடிக்கப்பட்டிருக்கலாம், அதற்காக தமிழர்கள் தோற்றுவிட்டதாக எவரும் கருத முடியாது.

இந்திய,இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னர், சிலரால் முன்னெடுக்கப்பட்ட தவறான வழிமுறைகளே இந்நிலைமைகளுக்கு வித்திட்டன.

தமிழ், சிங்கள மக்கள் மத்தியிலுள்ள சில இனவாத சக்திகள், தங்களின் அரசியல் நலன்களுக்காக தமிழர்கள் தோற்றுவிட்டார்களென்ற கருத்தின் அடிப்படையில், செயற்படுகின்றனர். இதுவே பிரச்சினைகள் இன்னும் தீராமல் இருப்பதற்கு காரணம். இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எவ்வாறெனினும், தமிழ் மக்களின் நியாயமான நிலைப்பாட்டை தற்போதைய ஜனாதிபதி தெளிவாக புரிந்து வைத்திருக்கின்றமை, பல்வேறு சந்தர்ப்பங்களில் அவரின் செயற்பாடுகளிலிருந்து தெரியவருகின்றமை மகிழ்ச்சியளிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## 04 இலட்சம் கிலோ பால்மா தடுப்பு... (தொடர்)

மாறக்கூடுமெனவும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலே பங்கேற்ற பால் மா இறக்குமதியாளர் சங்கத்தின் உறுப்பினரான லக்ஷ்மன் வீரசூரிய இதைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில், அறிக்கை ஒன்றை வெளியிட்ட சுங்க திணைக்களம், லக்ஷ்மன் வீரசூரியவுக்குச் சொந்தமான நிறுவனம் ஒன்றினால் இறக்குமதி செய்யப்பட்ட 06 கொள்கலன் பால் மா கடந்த 14 ஆம் திகதி மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது.

இறக்குமதி சட்டத்திட்டங்களை மீறி சட்டவிரோதமாக பால் மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, உரிய சட்டத்திட்டங்களை மீறி பால் மா இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்த, பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினரான லக்ஸ்மண் வீரசூரிய, தடுத்து வைக்கப்பட்டுள்ள பால் மா நுகர்வுக்கு பொருத்தமற்றதாக மாறும் பட்சத்தில் ஆறாயிரம் இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுமென குறிப்பிட்டார்.

அதேபோன்று அரசாங்கத்துக்கு 145 மில்லியன் ரூபா வரி வருமானம் கிடைக்காது போகும். எனவே, பால் மாவை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேநேரம், சட்டவிரோதமாக பால் மாவை கொண்டு வர முடியாது.

அவ்வாறு கொண்டு வருவதற்கு அது தடை செய்யப்பட்ட பொருள் அல்லவென்றும் பால் மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் லக்ஷ்மன் வீரசூரிய தெரிவித்துள்ளார்.

## இனப் பிரச்சினைக்கு... (தொடர்)

வேண்டிய காலம் இது எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தை தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய எதிர்பார்ப்பை தோற்றுவித்திருந்தார்.

இந்நிலையில்,தற்போது மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பில் அவர்,தெரிவித்திருப்பது ஆச்சரியமூட்டுவ தாகவும் செல்வம் அடைக்கலநாதன் எம்,பி சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வர்த்தக, வாணிப அமைச்சு,கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்களுக்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சமஷ்டி முறையே இனப் பிரச்சினை தீர்வுக்கு சிறந்த முடிவாக முடியும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் தமிழ் தரப்பினர் முதலில் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியது அவசியம்.தமிழ் அரசியல் கட்சிகளிடம் ஒற்றுமை இல்லாததே, தீர்வை இழுத்தடிப்பதாக அரசாங்கம் தெரிவிக்கும் நிலையை தமிழ் தரப்பினர் தோற்றுவிக்கக் கூடாதென்றும் அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால அவரது ஆட்சிக்காலத்தில் கவனம் செலுத்தாது சந்தர்ப்பத்தை தவற விட்டார்.

தற்போது மாவட்ட அபிவிருத்தி சபை பற்றி அவர் பேசுகிறார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது, தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் சாத்தியமான விடயங்களை குறிப்பிட்டிருந்தார்.

பிரதான எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களை நோக்கி தீர்வு வழங்க தயாரா என கேள்வியும் எழுப்பினார்.பிரதான எதிர்க்கட்சிகளும் அதற்கு இணக்கம் தெரிவித்தன. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் தொடர்பிலும் இணக்கம் தெரிவித்தார். .

சமஷ்டி அடிப்படையில் அரசியல் தீர்வு வழங்கப்படும் என தமிழ் மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ள நிலையில், தோல்வியடைந்த மாவட்ட அபிவிருத்தி சபை பற்றி தற்போது குறிப்பிடப்படுகின்றமை அதிர்ச்சி யளிக்கிறது.

## தமிழக மீனவர்களை விடுவிக்க தலையிடுமாறு... (தொடர்)

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

தமிழக மீனவர்கள் 23 பேரை கடந்த (28) கைது செய்த இலங்கை கடற்படையினர், அவர்களது 05 மீன்பிடிப் படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாண்டு மட்டும் 221 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் தமிழக மீனவர்களுக்கு கடுமையான மன அழுத்தத்தம்,மன வேதனைகளை ஏற்படுத்தியுள்னை. ஏற்கனவே நெருக்கடியான பொருளாதாரத்தை எதிர்கொண்டிருக்கும் மீனவ சமுதாயத்திற்கு நமது ஆதரவு தேவைப்படுகிறது.

தமிழ்நாட்டின் 105 மீன்பிடிப் படகுகள் தற்போது இலங்கை வசமுள்ளன. தொடர் முயற்சிகளின் காரணமாக கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுவிக்கப்பட்டாலும், அவர்களின் மீன்பிடிப் படகுகள் இன்னும் இலங்கையின் கட்டுப்பாட்டிலே உள்ளன. எனவே, தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுத்திடவும், தற்போது இலங்கையிலுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களின் மீன்பிடி படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் தேவையான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தமிழக முதல்வரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களை தாக்கும்... (தொடர்)

தீபால் பெரேரா, சிறுவர்களை"இன்றைய நாட்களில், குழந்தைகளுக்கு பல விதமான காய்ச்சல் பரவுகிறது. குறிப்பாக, இன்ஃப்ளூயன்ஸா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள், இன்ஃப்ளூயன்ஸா அறிகுறிகள் உள்ள நோயாளிகள் மற்றும் டெங்கு நோயாளர்களும் நமது சுற்றுச்சூழலில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறிப்பாக இன்ஃப்ளூயன்ஸா நோய்க்கான அறிகுறிகளாக, காய்ச்சலுடன் இருமல், சளி சிலருக்கு வாந்தியும் ஏற்படுகிறது. இந்த அறிகுறிகள் இன்ஃப்ளூயன்ஸா மற்றும் பிற வைரஸ்களால் ஏற்படலாம். எனவே இந்த அறிகுறியுள்ளவர்கள் முடிந்தால், வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

இவ்வாறான குழந்தைகளை ஓய்வாக வைத்திருப்பதுடன், அவர்களுக்குதிரவ உணவு வழங்குவதே சிறந்தது.வெளியே செல்ல நேரிடின், முகக்கவசம் அணியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஆரம்பப் பாடசாலை, டே கெயார் சென்டர்களுக்குச் செல்லும் குழந்தைகளுக்கு அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை வீடுகளில் வைத்திருப்பது நல்லது. இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடிப்பது டெங்குக்கான அறிகுறியென்றும் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், முழு இரத்த பரிசோதனையை செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள்... (தொடர்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (29) பாராளுமன்றத்தில் தெரிவித்த பதிலின், அர்த்தத்தை சிதைக்கும் விதத்தில் பல ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. எனினும், 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில், பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு நேற்று பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மாகாண சபைகளில், மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை (DDC) ஸ்தாபிக்கத் தயாரெனத் தெரிவித்தார். இதுதவிர மாகாண சபைகள் கலைப்பு தொடர்பில் ஜனாதிபதி எந்த கருத்தையும் வெளியிடவில்லை. நிறைவேற்றுத் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பைப் பேணுவதற்கான களமாக மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் செயற்படுமென்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாகும். இதன் மூலம், அபிவிருத்திப் பணிகள் முறையாக நடைபெறுவதுடன், நிதி வீண்விரயம் மற்றும் தாமதங்கள் தவிர்க்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேச்சு நடத்துவதை... (03 ஆம் பக்கத் தொடர்)

அதிபர் திணைக்களம் இணங்கியுள்ளமை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்று ம்போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றுவதற்கு முன்னர் எம்.டி நியூ டயமன்ட் என்ற கப்பலும் இலங்கைக் கடற் பகுதியில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியிருந்தது.

எனினும், சர்ச்சைக்குரிய அந்த கப்பல் மீண்டும் நாடு திரும்பவுதற்கு மீள இடமளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதன் பின்னர், நீர்கொழும்பிலிருந்து பாணந்துறை வரையிலான 65 கிலோ மீற்றர் கடற் பிரதேசத்தில் கடற்றொழிலை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது.

மேல்மாகாணத்துக்கு மாத்திரமல்லாது, வடமேல் மாகாண மாவட்டமான புத்தளத்துக்கும் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன.

கம்பஹாவில் 11,091 குடும்பங்களும், கொழும்பில் 3250 குடும்பங்களும், களுத்துறையில் 701 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன .

இவர்களுக்கு கடற்றொழில் அமைச்சால் அமைக்கப்பட்ட குழுவின் ஊடாக நட்ட ஈடு வழங்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொருவரதும் நாளாந்த வருமானம், மீன்பிடிக்கு விதிக்கப்பட்ட தடைக் காலம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த நட்டஈடு மதிப்பீடு செய்யப்பட்டது என்றார்.

கம்பஹாவுக்கு 348 மில்லியன்களும், கொழும்பு மாவட்டத்துக்கு 335 மில்லியன்களும் இழப்பீடுகளாக ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களமே நடவடிக்கை எடுத்து வருகிறது. இக்கப்பலிடமிருந்து கிடைக்க வேண்டிய நட்டஈட்டை டொலர்களில் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருந்தது.

ஆனால், நாடு நெருக்கடி நிலையிலிருப்பதால்,

இலங்கை ரூபாவில்,நட்டஈட்டு தொகையை பெற்றுக் கொள்ள சட்டமா அதிபர் திணைக்களம் இணங்கியுள்ளது

பாதிப்புகளை மதிப்பீடு செய்வதற்கு இலங்கையில் முறையொன்று இல்லை. இதனால், அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றுக்கு மில்லியன் கணக்கான நிதி செலுத்தப்பட்டே பாதிப்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

# எல்லை நிர்ணய அறிக்கைகளின் பிரகாரம் உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட வேண்டும்


## சாய்ந்தமருது, கல்முனை வடக்கிற்கும் சபைகள் தேவை

அரசாங்கத் தேவைகளுக்காக வகுக்கப்பட்ட நிர்வாக எல்லைகளுக்கு மத, இனவாதச் சாயங்கள் பூசுவதை நிறுத்த வேண்டுமென தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார். உள்ளூராட்சி மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

இன வீதாசாரத்துக்கு ஏற்ப காணிகளைப் பங்கிடாது உள்ளூராட்சி சபைகளைப் பிரித்ததால், இனங்களுக்கிடையில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதையும் சபையின் கவனத்துக்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விவாதத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்ததாவது.

சிறிய கட்சியின் தலைவராகச் செயற்பட்டு, நாட்டின் உச்ச பதவியில் அமர்ந்துள்ள பிரதமர் தினேஷ் குணவர்தனவை வாழ்த்துகிறேன். கடந்த காலங்களில் அவரோடு இணைந்து மிக முக்கியமான அரசியல் தீர்மானங்களை நாங்கள் எடுத்திருந்தோம். இவ்வறான ஒரு முதிர்ச்சிமிக்க தலைவர் அமர்ந்துள்ள இச்சபையில், சில விடயங்களை கவனத்துக்கு கொண்டு வருவதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

கிராமிய மக்களின் சுகாதாரம், அபிவிருத்தி, இன்னும் உள்ளூர் இறைமைகளைப் பாதுகாக்கவென நூறாண்டுகளுக்கு முன்னரே கிராமிய சபைகள், பட்டின சபைகள் உருவாக்கப்பட்டன. அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் அக்கரைப்பற்று, வெவகம்பற்று, சம்மாந்துறைப்பற்று, கரவாகுப்பற்று மற்றும் பாணமைப்பற்று என்பவை இதில் பிரதானமாவை.



இந்தச் சபைகள் 1987 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில், ரணசிங்க பிரேமதாசவால் சில சபைகள் இணைக்கப்பட்டும், சில சபைகள் பிரிக்கப்பட்டும் உள்ளூராட்சி சபைகளாக அறிமுகஞ் செய்யப்பட்டன. அக்கரைப்பற்றிலிருந்து வடக்கைப் பிரித்து அட்டாளைச்சேனைக்கும், தெற்கை, திருக்கோயிலுக்கும் மத்தியை அக்கரைப்பற்றுக்கும் பிரித்துக் கொடுத்தனர்.

பாணமைப்பற்றை, லெளகலை மற்றும் பொத்துவில் எனப்பிரித்தனர். சம்மாந்துறைப்பற்று எதுவும் செய்யப்படாமல் அவ்வாறே இருந்தது.

ஆனால், கரவாகுப்பற்றில் ஒரே DR பிரிவிலிருந்த கரவாகுப்பற்றுத் தெற்கு சாய்ந்தமருதையும், கரவாகுப்பற்று வடக்கு மருதமுனையையும், கரவாகுப்பற்று மேற்கு தமிழர் பகுதியையும் கல்முனை பிரதேச சபையின் கீழ், கொண்டு வந்தனர்.

நூறுவருடங்களாக தனியாக இயங்கிய இச்சபைகள் ஒரு நிர்வாகத்தில் கொண்டுவரப்பட்டதால், இம்மக்கள் தங்களது சுயத்தை இழந்தனர். இந்த உள்ளூராட்சி சபைகளை அன்றைய ஆட்சியாளர்கள் முறையின்றிப் பிரித்ததாலே இன்று, நமது சமூகங்களுக்கிடையில் விரிசல்கள் எழுந்துள்ளன. இதை விடவும், தங்களது தேவைகளுக்காக சில அரசியல்வாதிகள் இந்த சர்ச்சைகளுக்கு வேறு சாயங்களைப் பூசிப் பூதாகரமாக்குகின்றனர். நூறாண்டுகளுக்கு முன்னர் இருந்ததைப் போன்று, கல்முனை கரவாகுப்பற்று பிரதேசத்தை நான்கு சபைகளாகப் பிரித்தால்தான், இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

1897 ஆம் ஆண்டே, சாய்ந்தமருது தனியான சபையாக இயங்கியது.

இங்கு எல்லைப் பிரச்சினைகள் இருப்பதாக சில அரசியல்வாதிகள் கூறுவதை ஏற்க முடியாது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் கடந்த 2020 இல், அலரிமாளிகையில் ஒரு முக்கிய கூட்டம் கூட்டப்பட்டது. அதில், நானும் கலந்துகொண்டேன். கல்முனையின் வட பகுதியைப் பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம், நீதிமன்ற வழக்கைக் கருத்தில் கொண்டு தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. எனவே, எல்லை நிர்ணய அறிக்கை கிடைத்ததும் கல்முனை வடக்கு விவகாரமும் தீர்க்கப்படுவதே நியாயமான பங்கீடாக இருக்கும்.

மேலும், சாயந்தமருதுக்கு 2022 பெப்ரவரியிலிருந்து தனியான உள்ளூராட்சி சபை பிரகடனம் செய்யப்பட்டு வர்த்தமானியும் அன்று வெளியிடப்பட்டிருந்தது. பின்னர், ஏதோவொரு காரணத்துக்காக அதுவும் நிறுத்தப்பட்டது.

அரச கருமங்களை, இலகுவாக்கவே நிர்வாக எல்லைகள் வரையறுக்கப்படுகின்றன. இவ்வாறு பிரிக்கப்படும் சபைகளை தமிழ்ச் சபையென்றோ, முஸ்லிம் சபையென்றோ அல்லது சிங்கள சபையென்றோ சாயம்பூச முடியாது. திருக்கோயில் பிரதேச சபைக்குள் உள்ள வட்ட மடுவில் முஸ்லிம்களுக்கு காணிகள் இல்லை எனக் கூறப்படுகிறது.

மூதாதையர்கள் வெட்டிய காடுகளுக்கு 1984 இல் வழங்கப்பட்ட "பேர்மிற்"களையும் சில அதிகாரிகள் திட்டமிட்டு அழித்துள்ளனர். இவ்வாறு, பொத்துவில், லெளகலை பிரதேச சபைகளிலும் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடத்தில் காணித் தகராறுகள் ஏற்பட்டுள்ளன. DR டிவிசன், DS டிவிசன் மற்றும் AGA டிவிசன்கள் எல்லாம் அரச நிர்வாகத்தின் அடையாள எல்லைகளே தவிர, இன அல்லது மதப்பிரிவுக்கான தனித்துவ அடையாளங்கள் இல்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார். இதையடுத்து, தேசிய காங்கிரஸ் தலைவரின் கருத்துக்களை கவனமாகச் செவிமடுத்ததாகத் தெரிவித்த பிரதமர், தினேஷ் குணவர்த்தன இவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

## புத்தளம் தள வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள்



(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் தள வைத்தியசாலையில் பாரிய சிரமதானம் மற்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக்கின் வழிகாட்டலில், நகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன இணைந்து இப்பணியை முன்னெடுத்தன.

நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் களத்தில் நின்று பணிகளை நெறிப்படுத்தினார். வைத்திய சாலை வளாகத்தில் தேங்கிக் கிடந்த குப்பைகள், பற்றைகள் அகற்றப்பட்டு துப்புரவு செய்யப்பட்டன.

இதன்போது, நகரசபை தமது முழு ஆளணி மற்றும் இயந்திர வளங்களையும் பயன்படுத்தியது. இதன்போது நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களும் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டன.

நகரசபை உறுப்பினர்களான ரனீஸ் பதூர்தீன், விஜேதாஸ ஆகியோரும் இச்சிரமதானப் பணியில் பங்கேற்றனர். இப்பணியை முன்னெடுத்தமைக்காக, நகர பிதாவுக்கு வைத்தியசாலை நிர்வாகத்தினர் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.



களுத்துறை மாவட்ட பெருந்தோட்ட பாடசாலைகளிலுள்ள தரம் ஐந்து மாணவர்களுக்கு, விஷேட கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், ஹொரணை கல்வி வலயங்களுக்குட்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு (26) அதிபர், மற்றும் ஆசிரியர்கள் தலைமையில் மிலகந்த தேசிய பாடசாலையில் நடைபெற்றது. விரிவுரையாளராக திருமதி ஷர்மிளா அருள்பிரகாசம் கலந்துகொண்டார். லண்டன் "ஓம் சரவண பாபா சேவை நிதியம்" ஏற்பாடு செய்த இக்கருத்தரங்கில், மாணவர்கள் மிக ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.




தினகரனின் 90 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சமூகத்துக்கும் நாட்டுக்கும் சேவையாற்றியவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்ச்சி நிரலில் சமூக வேவையாளர் வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் ஐயாவுக்கு தனிப்பட்ட காரணங்களால் சமூகமளிக்க முடியாமல் போய்விட்டது. நேற்று கண்டியில் இருந்து எமது தினகரன் ஆசிரிய பீடத்துக்கு வருகை தந்த அவரை தினகரன், வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவரால் பாராட்டி கௌரவித்த போது. அருகில் பிரதம உதவி ஆசிரியர் =காந்தும் காணப்படுகிறார்.

## மிமிகிரி போட்டி

புதிய அலைகலை வட்டம் இம்முறை மிமிகிரி போட்டியை நடாத்த தீர்மானித்துள்ளது. இப்போட்டி, நேரடிப் போட்டியாக நடைபெறும். பங்கு கொண்டு தமது திறமைகளை வெளிக்கொணர விரும்பியவர்கள் 10.12.2022க்கு முன்னர் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

போட்டியில் தெரிவாகும் மூன்று வெற்றியாளர்களுக்கு முறையே ரூபா, 5000, 3000, 2000 பணப்பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்படும். இலைமறைகாயாகவுள்ள இளங்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், கடந்த 42 ஆண்டுகளாக, புதிய அலை கலை வட்டம் இலக்கியப் பணியாற்றி வருகிறது. வருடாந்தம் கலை, இலக்கியப் பணியாற்றிவரும் வருடாந்தம் "எவோட்ஸ்" என்ற பெயரில் கலை கலாசாரப் போட்டியை நடத்தும் இவ்வமைப்பு, இம்முறை மிமிகிரி போட்டியை நடாத்த முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐயப்ப பக்தர்களின் காப்புறுதி; சர்வதேச இந்து மத பீடம் அமைச்சருக்கு எடுத்துரைப்பு

அறநெறி பாடசாலைகள் சம்பந்தமாக மாணவர்கள், அறநெறி ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் பல்வேறு நிகழ்ச்சி நிரல்கள் சம்பந்தமாக, அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவுடன், சர்வதேச இந்து மத பீடம் கலந்துரையாடியுள்ளது. அமைச்சில் (25) நடைபெற்ற இச்சந்திப்பில், இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் வை. அனிருத்தன், சர்வதேச இந்து மத பீட செயலாளரும் முன்னாள் ஜனாதிபதியின் இந்து விவகார இணைப்பாளருமான கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மாவும் கலந்து கொண்டனர்.



பல விடயங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப் பட்ட இச்சந்திப்பில், கிளிநொச்சியில், ஸ்ரீ வித்யா குருகுலத்துக்கான அந்தணர் பாடசாலைக்கு காணி பெறும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தல், இலவச விசாவில் இந்தியா செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கான காப்புறுதி தொடர்பிலும் கவனம் செலுத்தப் பட்டது.

ஏனைய மதத்தவர்களுக்கு இவ்வாறான காப்புறுதி வசதிகள் உள்ளன. இந்நிலையில், சபரிமலை யாத்திரை காலத்தில் இவர்களுக்கு காப்புறுதி திட்டத்தை வழங்குவது குறித்து அக்கறை செலுத்துமாறு அமைச்சருக்கு பரிந்துரைக்கப்பட்டது.

விபரங்கள் கிடைத்ததும் ஆவன செய்வதாக தெரிவித்த அமைச்சர், கொரோனா காலம் என்பதால், இக்காப்புறுதி திட்டம் இந்து மத யாத்திரிகர்ளுக்கும் இருப்பது அவசியம் என்றும் தெரிவித்தார். மேலும், இது பற்றி அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவுடன் கலந்துரையாடுவதாகத் தெரிவித்த அமைச்சர், வேறு விடயங்கள் இருந்தால் அதுபற்றி பிறிதொரு நேரத்தில் கலந்துரையாட ஆயத்தமாக இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

கேரளாவில் ஐயப்ப பக்தர்கள் நலன் கருதி இலங்கையின் துணை தூதரகம் ஒன்றை நிறுவுவது பற்றியும், ஐயப்ப பக்தர்களுக்கான கப்பல் சேவையை ஏற்பாடு செய்வது குறித்தும் இந்து கலாசார அமைச்சராக இருந்த காலத்தில் அமைச்சருடன் கலந்துரையாடியதையும், பாபுசர்மா இதன்போது நினைவூட்டினார்.

## "முதலாவது தேசிய சாரணர் கிடோரி" பங்களாதேஷ் தூதுவர் பங்கேற்பு



இலங்கை சாரணர் இயக்க வரலாற்றில் இலங்கை சாரணர் சங்கம் முதல் தடவையாக ஏற்பாடு செய்துள்ள "01 ஆவது தேசிய கிடோரி" இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தரீக் அரிபுல் இஸ்லாம் (Tareq Md Ariful Islam) தலைமையில் கடந்த (27) ஆம் திகதி கொழும்பு விகார மகாதேவி பூங்காவில் நடைபெற்றது.

"குழந்தைகள் உலகத்துக்கான நாளைய தினம்" (சிங்கிதி லொவட ஹெட தவசக்) என்னும் தொனிப் பொருளில்நடைபெற்ற இந்தகிடோரிக்கு குழந்தை சாரண சிறுவர் சிறுமியர்கள் 6,000க்கும் அதிகமானோர் பங்கு பற்றினர். விளையாட்டு, வெளிப்புற நடவடிக்கைகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் பல இங்கு நடைபெற்றன.

சிறு குழந்தைகளின் திறமைகளை வெளிக்காட்ட இது ஒரு சிறந்த சந்தர்ப்பமென உதவி பிரதம ஆணையாளர் திருமதி சந்திரானி பெர்னாந்து தெரிவித்தார். சாரணர்களுக்காக "ஜம்போரி" எனவும், "சிறுவர்" சாரணர்களுக்காக "கபோரி" எனவும் சாரண சிறு குழந்தைகளுக்கான தேசிய மட்டத்தில் ஒன்று கூடல் "கிடோரி" எனவும் பெயரிடப்பட்டுள்ளது.

2021ஆம் வருடம் நவம்பர் 13 ஆம் திகதி இலங்கை சாரண இயக்கம் புதிதாக சிறு குழந்தைகள் சாரணப் பிரிவை ஆரம்பித்ததோடு 05 தொடக்கம் 07 வயது வரையான பிள்ளைகள் குழந்தைகளுக்கான சாரணர் பிரிவில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

இலங்கை சாரணர் இயக்கத்தின் பிரதம சாரணர் ஆணையாளர், சட்டத்தரணி ஜனபிரித் பெர்ணாந்துவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் உதவி பிரதம ஆணையாளர் திருமதி சந்திரானி பெர்னாந்து உள்ளிட்ட அமைப்புக் குழுவால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

CIB අපේකම
Dear valued customer,
Please Redeem your "අපේකම" Loyalty points on or before 31st of December 2022
*Conditions apply.
හිතවත් පාරිභෝගිකය,
දෙසැම්බර් 31 වන දිනට පෙර ඔබ විසින් උපයාගත් CIB අපේකම Points Redeem කර ගැනීමට කටයුතු කරන්න.
CIB SHOPPING CENTRE
CIB CURTAINS
HOUSE OF TAILORS
Head Office : No. 101, Pamunuwa Road, Maharagama. | Tel : 0112 897 034/5
E-mail : info@cibweb.lk | www.cibweb.lk | www.cibonline.lk | /cibshopping

NLB
தேசிய லொத்தர் சபையினால் சீட்டிழுக்கப்படும் NLB டொலர் ஃபோர்ச்சூன் லொத்தர் சீட்டு 2022 டிசம்பர் 09 ஆம் திகதி சீட்டிழுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக, சுப்பர் பரிசான அமெரிக்க டொலர் 100,000 பணம் 2022.12.09 ஆம் திகதி அன்று நிலவும் அந்நியச் செலாவணி விகிதத்தில் இலங்கை ரூபாவில் வழங்கப்படும். (இலங்கை மத்திய வங்கியின் அனுமதியின் பேரில்)

திகதி 29.11.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம்: 4954 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,976,400.00 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 2 8 9 9 5 5 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,105,480.00
ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் : 1409 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,055,080.00 — வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 7 8 1 6 2 7 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,326,962.80
ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 263 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,958,640.00 — இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 21 43 57 59 — விசேட இலக்கினம் மகரம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,662,692.00
தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் : 984 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,425,140.00 — வெற்றி இலக்கினம் N — வெற்றி இலக்கங்கள் 06 13 18 51 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 134,510,393.20
கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3196 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,947,160.00 — ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 39 42 44 68 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,444,754.00
கோடி 28+ Mega POWER மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1302 — இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,513,940.00 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 283,291,366.00 — N 04 02 44 46 73 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
தேசிய லொத்தர் சபை National Lotteries Board — தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 — பெக்ஸ்: 011-4669475 — Email : info@nlb.lk — Web : www.nlb.lk

# கிழக்கின் குரல்



# கந்தளாய் குளத்திலிருந்து பெரும்போகத்துக்கான நீரை திறந்து விடுமாறு விவசாயிகள் கோரிக்கை

## பாரிய ஆர்ப்பாட்டம்



**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவுக்குட்பட்ட சீனிபுர பகுதியில் பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான நீரை கந்தளாய்க் குளத்திலிருந்து திறந்து விடுமாறு கோரி கந்தளாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக விவசாயிகள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் நேற்று (30) ஈடுபட்டனர்.

தமது பெரும்போக நெற்செய்கையானது, மழை இன்மையால் வரட்சியில் வாடுவதாக தெரிவித்த விவசாயிகள், தமது பெரும்போகச் செய்கைக்குத் தேவையான நீரை திறந்து விட வேண்டுமெனவும், தெரிவித்தனர். வயலில் விதைப்பு மேற்கொண்டு சுமார் 20 நாட்களாகின்றன. இதுவரையில் மழை பெய்யவில்லை. கந்தளாய்க் குளத்திலிருந்து நீரும் திறந்து விடப்படவில்லை. வரட்சி நீடிக்குமானால், இப்பெரும்போகச்செய்கைக்காகதாம்செலவிட்ட பணம் வீணாகி விடுமெனவும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில், இவ்விடயம் தொடர்பான மகஜரொன்றையும் கந்தளாய் பிரதேச உப செயலாளரிடம் விவசாயிகள் கையளித்துள்ளனர்.

# வீதியோர மீன் விற்பனைக்கு தடை; வியாபாரிகள் கடும் எதிர்ப்பு



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபைக்குட்பட்ட வீதியோரங்களில் மீன் விற்பனை செய்வதை நிறுத்துமாறு கோரி அப்பிரதேச சபையினர் ஒலிபெருக்கி மூலம் பொது அறிவித்தல் விடுத்தமைக்கு, மீன் வியாபாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான அறிவித்தலை மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையினர் கடந்த 27ஆம் திகதி விடுத்திருந்ததைத் தொடர்ந்து, பிரதேச சபைக்கு முன்பாக நேற்று முன்தினம் (29) மீன் வியாபாரிகள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபைக்குபட்பட்ட பொதுச் சந்தைகளில் காலையிலிருந்து நண்பகல் வரை மீன் விற்பனையில் ஈடுபட்டுவிட்டு, பிற்பகல் 2 மணிக்குப் பின்னரே தாம் வீதியோரங்களில் மீன் விற்பனையில் ஈடுபடுவதாகவும், இவ்வறித்தல் தமது வாழ்வாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவும், மீன் வியாபாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

இதேவேளை, பொதுச் சந்தைகளில் விற்பனையில் ஈடுபடுவோர் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் வீதியோரங்களில் மீன் விற்பனையில் ஈடுபடலாமெனும் தீர்மானத்தை தாம் ஏற்கெனவே எடுத்துள்ளதாக, மண்முனை தென்எருவில்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் மே.வினோராஜ் தெரிவித்தார்.

ஆனால், தமது மேலிடத்து அதிகாரிகளின் பணிப்புரைக்கமைய வீதியோரங்களில் மீன் வியாபாரத்துக்கு தாம் தடை செய்வதாக, மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.அறிவழகன் தெரிவித்தார்.

ஒரே பிரதேச சபையில் கடமையாற்றும் இருவர் இவ்வாறு மாறுபட்ட கருத்தை தெரிவிப்பதாக, மீன் வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது இவ்வாறிருக்கையில் அவ்விடத்துக்கு வந்த களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபயவிக்கிரம, இவ்விடயம் தொடர்பில் மீன் வியாபாரிகளை பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு தெரிவித்தார். இது தொடர்பில் தாம் பொலிஸில் முறைப்பாடு செய்வதுடன், எதுவாயினும் தாம் எதிர்கொள்ளத் தயாரெனவும் தெரிவித்து விட்டு, மீன் வியாபாரிகள் கலைந்து சென்றனர்.

# மூதூர் வீதிகளுக்கு புதிய மின் விளக்குகள்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட 13 வட்டாரங்களிலும் வீதி மின் விளக்குகள் பொருத்தும் பணியை மூதூர் பிரதேச சபை மேற்கொண்டு வருவதாக, அப்பிரதேச சபைத் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ் தெரிவித்தார். மேற்படி பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் பல வருட காலமாக ஒளிராமல் காணப்பட்ட மின் விளக்குகளுக்குப் பதிலாகவே, புதிய மின் விளக்குகளைப் பொருத்தும் பணியை மேற்கொண்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார். வீதிகளில் மின் விளக்குகள் ஒளிராமல் காணப்பட்டதால், இரவில் போக்குவரத்துச் செய்வதில் பொது மக்கள் சிரமத்தை எதிர்நோக்கி வந்த நிலையில், அது தொடர்பில் மூதூர் பிரதேச சபையின் கவனத்துக்கு மூதூர் பிரதேச சபை வட்டார உறுப்பினர்கள் கொண்டு வந்தனர். இதனைக் கவனத்தில் கொண்ட பிரதேச சபை, மின் விளக்குகளைக் அவசரமாகக் கொள்வனவு செய்து, மின் விளக்குகளை பொருத்தும் பணியை மேற்கொண்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

# சகவாழ்வுக்கான சமாதானத்தை வலியுறுத்தும் வெளிக்களப் பயிற்சி

**மட்டக்களப்பு விசேட நிருபர்**



சகவாழ்வுக்கான சமாதானத்தை வலியுறுத்தி இளைஞர், யுவதிகளுக்கிடையில் குழுக்களின் தலைமைத்துவத்தை விருத்தி செய்யும் வெளிக்களப் பயிற்சி, சத்துருக்கொண்டான் சர்வோதய வளாகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற இப்பயிற்சியில் மட்டக்களப்பு, பொலன்னறுவை, மொனராகலை, பதுளை, அநுராதபுரத்தைச் சேர்ந்த 60 பேர் கலந்து கொண்டனர்.

பல்லினங்கள் வாழும் இலங்கையில் சகவாழ்வுக்கான தலைமைத்துவப் பண்பில் உள்வாங்க வேண்டிய விடயங்கள்,

கலை, ஓவியங்கள், கலாசார நிகழ்வுகள், தீப்பந்தத்துடன் கூடிய சாகச விளையாட்டுகள், திரைப்படம் மூலம் இளைஞர்களின் மனப்பதிவுகளை உள்வாங்கி தோல்வியை ஏற்கும் பக்குவம், சகிப்புத் தன்மை, மனித உரிமைகளை மதித்தல், பால்நிலை சமத்துவம் பேணும் மனப்பாங்கை வளர்த்தல் ஆகியவை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு, பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இறுதி நிகழ்வாக, சகவாழ்வுக்கான இன நல்லிணக்கத்தை வலியுறுத்திய சமாதானப் பாத யாத்திரையும் நடத்தப்பட்டது. மேலும், பொது மக்களின் 107 சமாதான அனுபவப் பகிர்வுகளை உள்ளடக்கிய தமிழ், சிங்கள மொழிகளில் 'பாதை கூறும் வெள்ளித் தாரகைகள்' எனும் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# ஹெரோயினுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்

**பாலமுனை தினகரன் நிருபர்**

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்ததை தொடர்ந்து இந்நபர்கள் அக்கரைப்பற்றிலும் அட்டாளைச்சேனையிலும் கைது செய்யப்பட்டனர். அக்கரைப்பற்றில் கைது செய்யப்பட்டவரிடமிருந்து 1000 மில்லி கிராமும் அட்டாளைச்சேனையில் கைது செய்யப்பட்டவரிடமிருந்து 20 மில்லி கிராமும் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்களை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (29) ஆஜர்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

# திருமலை பகுதி விபத்தில் தாதி உத்தியோகத்தர் பலி

**றொட்டவெவ குருப் நிருபர்**



திருகோணமலை, புல்மோட்டைப் பிரதான வீதியில் கும்புறுப்பிட்டிப் பகுதியில் நேற்று (30) இடம்பெற்ற விபத்தில் தாதி உத்தியோகத்தர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளும் பவுசரும் மோதி இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாக, பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. இத்தாதி உத்தியோகத்தரும் ஆசிரியையாகக் கடமையாற்றி வரும் அவரது சகோதரியும் கடமைக்காக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது, இவ்விபத்துச் சம்பவித்துள்ளது. நிலாவெளியைச் சேர்ந்த குச்சவெளி வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதி உத்தியோகத்தரான எஸ். கீதாஞ்சனா தேவி (44) இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார். இவ்விபத்தில் படுகாயமடைந்தவர், குச்சவெளிப் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஈஸ்டர் தாக்குதல்; பெண் ஒருவருக்கு பிணை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பெண்ணொருவரை பிணையில் விடுவிக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஏனைய 11 பேரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் (29) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சிறைச்சாலையிலிருந்து இப்பெண் மட்டும் அழைத்து வரப்பட்ட நிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

சஹ்ரான் குழுவுடன் தொடர்புடையவர்கள் என்பதுடன், ஹம்பாந்தொட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காகச் சென்றார்கள் எனும் சந்தேகத்தில் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் உட்பட 66 பேர் கைது செய்யப்பட்டனர்.

காத்தான்குடி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கிலிருந்து 3 பேர் விடுவிக்கப்பட்டதுடன், 63 பேரில் 51 பேருக்கு பிணை வழங்கப்பட்டது. 11 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# அத்தியாவசியப் பொருட்களை கிரமமாக பெறும் வேலைத் திட்டம்

**இறக்காமம் தினகரன் நிருபர்**



நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கிரமமாகப் பெற்றுக் கொள்வதற்கான வேலைத் திட்டமொன்று, வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சினால் பிரதேச செயலக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக, இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 16 திணைக்களங்களில் கடமையாற்றும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் உதவிப் பாவனையாளர் சேவை குழுக்கள் அமைக்கும் வேலைத்திட்டம், பிரதேச செயலாளர் எம்.எஸ்.றஸ்ஷான் தலைமையில் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. இதன்போது, நுகர்வோரும் வியாபாரிகளும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆராயப்பட்டதுடன், அடுத்த கட்ட நடவடிக்கையாக வர்த்தக சங்கங்களை உருவாக்கி 16 திணைக்கள உறுப்பினர்களும் தனித்தனியாக பிரிந்து மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், கிராம அலுவலகர் மட்டத்திலும் மக்களுக்கு இது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

# அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத கடல் பயணத்தை தவிர்க்க கோரிக்கை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு கடல் வழிப் பயணம் மேற்கொள்வதை தடுக்கும் வகையிலும் அது தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையிலும் கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கான உயர் ஸ்தானிகராலய உயர் பொலிஸ் அதிகாரி றொபட் வில்சனுக்கும் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.பிரகமனகேக்கும் இடையில் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (29) இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, அவுஸ்திரேலியாவுக்கு கப்பல் மூலம் செல்வதால் எந்தப் பயனும் இல்லையென்பதுடன், அவ்வாறு எவராவது செல்லும் பட்சத்தில் அவர்கள் உரிய அரசாங்கம் மூலமாக திருப்பி அனுப்பப்படுவார்கள். பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல் அறிவுறுத்தப்பட வேண்டுமென்பதுடன், இலட்சக் கணக்கான பணத்தைக் கொடுத்து ஏமாறாமல் இருக்க வேண்டும். பொதுமக்கள் சட்டவிரோத பயணத்தை நிறுத்த வேண்டும். இவ்வாறான விடயங்களை பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டுமாறு, அவுஸ்திரேலியாவுக்கான உயர் ஸ்தானிகராலய உயர் பொலிஸ் அதிகாரி தெளிவுபடுத்தினார்.

# புற்றுநோய்; பெண்களுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்வு

**தோப்பூர் குறூப், அன்புவழிபுரம் நிருபர்கள்**



மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு புற்றுநோய் மற்றும் நோய் மாதிரிகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையொன்று, தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (29) மேற்கொள்ளப்பட்டது.

சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ் 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்போம் எனும் 16 நாள் விசேட வேலைத்திட்டத்துக்கமைய முன்னெடுக்கப்பட்ட இந்நடவடிக்கையில், 80 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அத்துடன், மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை கழுத்து புற்றுநோய் தொடர்பான நோய் மாதிரிகள் 50 பெண்களிடமிருந்தும் பெறப்பட்டன.



# வாழ்வாதார முன்னேற்றம் கருதி பயனாளிகளுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பு

வாழ்வாதார முன்னேற்றம் கருதி பயனாளிகள் சிலருக்கு சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

கமசமக பிலிசந்தர வேலைத்திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் பின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட சைக்கிள்களே இவ்வாறு வழங்கப்பட்டன.

வாழ்வாதார உதவிப் பொருட்கள் கொள்வனவுக்காக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப், சுமார் 15 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார்.




அக்கரபத்தன பெருந்தோட்ட விவகாரம் ;

# தொழில் அமைச்சருடன் இ.தொ.கா பேச்சுவார்த்தை



அக்கரபத்தன பெருந்தோட்ட நிறுவனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைக்கு தீர்வு காணும் நோக்கில், தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவிற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் செந்தில் தொண்டமானுக்கும் இடையிலான கலந்துரையாடல் தொழில் அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

அக்கரபத்தனை பெருந்தோட்ட நிறுவனத்திற்குகீழ் இயங்கும் தோட்டங்களில் தொழிலாளர் சட்டத்தை தோட்ட நிர்வாகம் மீறுவதுடன், தொழிலாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாக இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் இதன்போது குற்றம்சாட்டினார்.

மேலும் அனைத்து தோட்டங்களிலும் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப் பெற்றால் மாத்திரமே தோட்ட நிர்வாகம் வழமைபோல் செயற்படுவதற்கு இ.தொ.கா ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, அக்கரபத்தன பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் பணிபுரியும் 10,000 தோட்ட தொழிலாளர்கள் வழமைபோல் செயற்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அக்கரபத்தன பெருந்தோட்ட நிறுவனம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்ததுடன் இ.தொ.கா சுட்டிக்காட்டிய தொழிலாளர் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தொழில் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்தார்.

## மஸ்கெலியா பிரதேசவாசிகளுக்கு காணி உறுதி வழங்க கலந்துரையாடல்

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட மஸ்கெலியா நகரை அண்டிய குடியிருப்புகள், கடைத் தொகுதிகளுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



இதன்போது மஸ்கெலியா நகரை அண்டிய குடியிருப்புகள், கடைத்தொகுதிகளுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்குவதில் நீண்ட காலமாக இழுபறி நிலை இருந்து வந்தது எனவும் இது தொடர்பில் நுவரெலியா மாவட்ட அரசாங்க செயலாளர் நந்தன கலபட மற்றும் அம்பகமுவ பிரதேச செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டதாகவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக காணி அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ கலந்துரையாடியதாகவும் தெரிவித்த அவர்.

எனவே இவ்விடயத்திற்கு தகவல்களை திரட்டி சமர்பித்த பின் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஆ.ரமேஸ்)

## எபடீன் நீர்வீழ்ச்சியில் மாயமான இளைஞன் சடலமாக மீட்பு

ஹட்டன் விசேட நிருபர்



கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கினிகத்தேனை எபடீன் நீர் வீழ்ச்சியில் குளிக்கச் சென்று மாயமான இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் (29) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு சென்ற போது நண்பர்களுடன் நீர்வீழ்ச்சிக்கு குளிக்கச் சென்றுள்ளார். நீராடிக்கொண்டிருக்கும் போது ஆழமான பகுதிக்கு அவ் இளைஞன் நீரால் இழுத்துச்செல்லப்பட்டு மாயமானதாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்தது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பொகவந்தலா டின்சின் பிரதேசத்தில் வசிக்கும் கிசான் இனோஜன் (வயது 18) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நீரில் மூழ்கிய இளைஞனை மீட்பதற்கு பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸார் இணைந்து தேடுதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நேற்றுமுன்தினம் காலை வரை அவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இந்நிலையில் கடற்படை சுழியோடிகள் வரவழைக்கப்பட்டு தேடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தபோது பிரதேச இளைஞர்களால் இளைஞனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

# ஜனாதிபதி ரணில் இம்மாத இறுதியில் பொலன்னறுவை விஜயம்

முன்னேற்பாடுகள் குறித்து உயர்மட்டக்குழு ஆராய்வு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொலன்னறுவை மாவட்டத்தில் காணப்படும் குறைப்பாடுகள் மற்றும் அங்கு முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயவும் மதவழிபாடுகளில் ஈடுபடவும் இம்மாதம் இறுதிவாரத்தில் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இரண்டு நாட்கள் தங்கி மாவட்டத்தின் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடவுள்ள ஜனாதிபதி பல்வேறு சந்திப்புகளையும் நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியின் விஜயத்துக்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் பொலன்னறுவை பெரக்கும்பா மஹா பிரிவெனாவில் நேற்று(30) விசேட கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட பௌத்த சபைத் தலைவர்கள், தேரர்கள், ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள், ஐ.தே.கவின் இரத்தினப்புரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்துக்கு பொறுப்பான பொலிஸ் மாஅதிபர், இராணுவக் கட்டளைத் தளபதி உட்பட பல்வேறு முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.



ஜனாதிபதியின் சந்திப்புகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடி உரிய ஏற்பாடுகளை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், ஜனாதிபதியின் செயல்பாடுகளுக்கு ஆசி வேண்டி விசேட பிரித் நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புண்ணியதான நிகழ்வுடன் 5000 பேருக்கு அன்னதானம் வழங்கவும் 500 ஏழை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## பாமஸியில் போதைமாத்திரை விற்பனை; ஒருவர் கைது

520 கிராம் போதை மாத்திரைகள் மீட்பு

மாத்தளை சுழற்சி நிருபர்

மஹவெல பொலிஸ் பிரிவில் பல்லேபொல நகரில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது மருந்தகம் ஒன்றிலிருந்து ஒரு தொகுதி போதை மாத்திரைகளுடன் நபர் ஒருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து மருந்தகம் ஒன்றில் போதை மாத்திரை விற்பனை செய்யப்பட்டு வருவதாக கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் மாத்தளை குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸாரினால் குறித்த மருந்தகத்தை சுற்றி வளைத்த போது அங்கு நான்கு பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த 520 கிராம் போதை பொருள் மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் ஒரு மாத்திரை 100 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரிய வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மருந்தக உரிமையாளரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மகவேல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## மஸ்கெலியா புரவுன்சீக் தோட்ட தொழிற்சாலையில் களவு

பெறுமதியான தேயிலைத்தூள் மாயம்

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ஆர்.பி.கே.பிலான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா புரவுன்சீக் தோட்ட தேயிலை தொழிற்சாலையில் பெறுமதி வாய்ந்த தேயிலை தூள் நேற்று முன்தினம் இரவு களவு போய் உள்ளது என மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்றை அத் தோட்ட முகாமையாளர் நேற்று பதிவு செய்துள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யசரத்ன பண்டார தெரிவித்தார்.

அனைத்து தொடர்ந்து உதவி அதிகாரி மற்றும் பொலிசார் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு கடமை புரியும் காவலர்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிவோரை அழைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சந்தேக நபர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை.தொடர் விசாரணை இடம் பெற்று வருவதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய உதவி அதிகாரி தெரிவித்தார்.

முறையாக விசாரணை நடைபெறவில்லை எனில் அத் தோட்ட தொழிலாளர்கள் அனைவரும் பணி பகிஷ்கரிப்பு மேற்கொள்ள உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

## நீண்ட காலத்தின் பின் யானைகள் கணக்கெடுப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

நாடளாவிய ரீதியில் யானைகள் கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்படவுள்ளது. உடவளவ, பின்னவல உட்பட நாட்டில் உள்ள அனைத்து சரணாலயங்கள் மற்றும் காடுகளில் வாழும் யானைகளை இக்கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படுவதாக பின்னவலை மற்றும் உடவளவை சரணாலயங்களின் தகவல் குறிப்புக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 2011 ஆம் ஆண்டு யானைகள் கணக்கெடுப்பு இறுதியாக மேற் கொள்ளப்பட்ட போதிலும் கடந்த 11 ஆண்டுகளாக இக்கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை என விவசாய மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2011ஆம் ஆண்டு யானைகள் கணக்கெடுப்பின் போது சுமார் 5000 யானைகள் இருந்ததாகவும் தற்போது இத்தொகை 7000 வரை அதிகரித்திருக்கலாம் எனவும் இத்தகவல் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

யானைகளால் பொது மக்களுக்கு ஏற்படும் தொல்லைகள் யானைகள் மனித நடவடிக்கைகளால் வீணாக உயிரிழத்தல் பெரஹராக்களில் யானைகளை ஈடுபடுத்தல் உட்பட பல விடயங்களால் யானைகள் தொடர்பான விவகாரங்கள் தற்போது அதிகமாக பேசப்பட்டு வருகின்றன.

## கிளங்கன் வைத்தியசாலைக்கு ரூ.6 இலட்சம் பெறுமதியான உயிர் காக்கும் இயந்திரம்

கொழும்பு கோட்டை ரோட்டறி கழகம் அனுசரணை





(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர் )

கிளங்கன் வைத்தியசாலைக்கு ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான உயிர் காக்கும் இயந்திரமொன்று கொழும்பு கோட்டை ரோட்டறி கழகத்தின் அனுசரணையில் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில் வழங்கி வைக்கப்பட்டது.

கிளங்கன் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ருக்சானி கலப்பதியின் வேண்டுகோளுக்கு இணங்கவும் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் பஸ்லி பாருக்கின் வழிகாட்டலின் பேரிலும் இவ் உயிர் காக்கும் இயந்திரமானது டிக்கோயா ரோட்டறி கழகத்தினரால் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் செயலாளர் டாக்டர்.ரவிவர்மன், உறுப்பினர்களான டாக்டர். சந்திரராஜன், சோமசுந்தரம், ராஜேந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு இயந்திரத்தை கையளித்தனர்.

இயந்திரமானது மீள் சுழற்சி முறையில் பயன்படுத்தப்படவுள்ளதாக விசேட வைத்தியர் நிபுணர் ருக்சானி கலப்பதி தெரிவித்தார். இதற்காக ஆறு இலட்ச ரூபா செலவு செய்யப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் இந்த இயந்திரம் இல்லாமையின் காரணமாக பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டதாகவும் இது மிகவும் தேவையான ஒரு உயிர் காக்கும் இயந்திரம் எனவும் வைத்தியர் மேலும் குறிப்பிட்டார்.

## மலையக மக்களுக்கான முக்கியமான கோரிக்கைகளை ஜனாதிபதியை சந்திக்கவுள்ள இ.தொ.கா குழு முன்வைக்கும்

இ.தொ.கா உபதலைவர் பாரத் அருள்சாமி தெரிவிப்பு

ஹற்றன் சுழற்சி நிருபர்)

இ.தொ.காவின் உயர்மட்ட குழுவினர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விரைவில் சந்திக்கவுள்ளனர் எனவும், இதன்போது மலையக மக்கள் தொடர்பில் முக்கியமான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் எனவும் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரான பாரத் அருள்சாமி, எமது மக்களுக்கான தற்காப்பு பொருளாதார திட்டங்கள் சம்பந்தமாகவும் இதன்போது யோசனைகள் முன்வைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று (30) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, சமகால அரசியல் மற்றும் தொழிற்சங்க விவகாரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே பாரத் அருள்சாமி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

" நாட்டில் உணவுப் பொருட்களுக்கான பணவீக்கம் அதிகரித்துள்ளது. உலகில் உணவுக்கான பணவீக்க பட்டியலில் இலங்கை ஆறாவது இடத்தில் உள்ளது. அதேபோல மருந்து தட்டுப்பாடும் நிலவுகின்றது. இவ்விரு பிரச்சினைகளும் மலையகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை.



எனவே, இவ்விவகாரங்கள் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்மட்டக் குழுவினர், ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர். இதன்போது எமது மக்களுக்கான நிவாரண திட்டங்கள் பற்றி கலந்துரையாடப்படும். அதேபோல எமது மக்களுக்கான தற்காப்பு பொருளாதார திட்டங்கள் சம்பந்தமாகவும் யோசனைகள் முன்வைக்கப்படும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி, ஒரு சிலர் சுற்றுலா விசாவில் புலம்பெயர் தொழிலாளர்களாக செல்கின்றனர். ஆட்கடத்தலில் ஈடுபடும் ஒரு சில விசமிகள் எமது சமூகத்திலும் உள்ளன. எனவே, வெளிநாடு செல்ல இருப்போர் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களையே நாட வேண்டும். இது சம்பந்தமாக தோட்ட வாரியாக எமது இளைஞர், மகளிர் அமைப்புகள் ஊடாக விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும்.

எங்களின் பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலும் சரி, தலைவர் ஆறுமுகன் தொண்டமான் காலத்திலும் சரி, தற்போதைய தலைமைத்துவத்தின் கீழும் சரி, மக்களுக்கான அரசியல், தொழிற்சங்க பயணத்தையே காங்கிரஸ் முன்னெடுக்கின்றது. மக்கள் நலனே எமக்கு முக்கியம். மக்களுக்கு எதிரான சக்திகளுக்கு தக்க பாடங்களை புகட்டியுள்ளோம். அச்சுறுத்தல்கள் மூலம் காங்கிரஸை அடிபணிய வைக்க முடியாது. மக்களுக்காக எட்டு அடி அல்ல 64 அடிகூட பாய்ந்து, அரசியல், தொழிற்சங்க தாக்குதலை நடத்த காங்கிரஸ் தயார் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன் " என்றார்.

**நான் ரோட்டரிக் கழகத்தில் இணைந்து கொண்டது 2000 ஆண்டு. கிளிநொச்சியில் நேரடியாக தொடர்பில் இருந்தது குறைவு. நான் கிளிநொச்சி ரோட்ரிக் கழக வட்சொப் குழுமத்தில் இருக்கிறேன். அது மிகச் சரியான தரம் வாய்ந்த குழுமம் ஆகும். சில அமைப்புக்கள் மாதாந்தம் ஒரு நிகழ்வையும் இரு மாதத்திற்கு ஒரு நிகழ்வையும் மூன்று மாதத்திற்கொரு நிகழ்வையும் நடத்துவார்கள். ஒரே நாளில் இரண்டு மூன்று நிகழ்ச்சிகள் நடத்துவார்கள். அந்தவகையில் நான் தூர இருந்தாலும் என்னுடைய சொந்த இடம் கிளிநொச்சி என்றபடியால் அவர்களுடைய செயற்பாட்டைப் பார்த்து அதிசயப்பட்டிருக்கின்றேன். எப்பொழுது கிளிநொச்சிக்குச் செல்லச் சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அப்பொழுது அவர்களுடன் இணைந்து அவர்களுடைய செயற்றிட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளேன்.**

**அண்மையில் கல்வி தொடர்பிலான செயற்றிட்டத்தின் போது நானே ஒரு முக்கிய வளவாளராக இணைந்து செயற்பட்டுள்ளேன். அதனை நினைக்கும் போது மனதிற்கு சந்தோசம். ஆக மொத்தத்தில் ரோட்ரிக் கழகத்தில் ஓர் அங்கத்தவராக இருப்பதில் நான் பெருமையடைகிறேன். ஒவ்வொரு தலைவர்களும் அடுத்தடுத்து வருகின்ற தலைவர்களுடைய வழிமுறைகளை உள்வாங்கி தங்களுக்குரிய தனித்துவத்தையும் மெருகூட்டி செயற்பட்டு வருகிறார்கள்.**

**கழகத்தை மேம்படுத்தும் வண்ணம் மெருகூட்டிச் செல்லுகின்றனர். இப்போது இருக்கின்ற தலைவர்**

# "தேசிய அபிவிருத்திக்கு" இயற்கை மைய நகர அபிவிருத்தி சிந்தனை அவசியம்

**எந்திரி டி. சிவக்குமார்** BSc (Hons)Eng., MEng (AIT), DEng (YNU ஜப்பான்), AMIE (SL), CMILT மூத்த விரிவுரையாளர், போக்குவரத்து மற்றும் தளவாட மேலாண்மை துறை, பொறியியல் ஆசிரியர், மொரட்டுவ பல்கலைக்கழகம்.



**யோசுவா அடிகளாரும் குறைவான ஆளில்லை. ஆனால் அவருடைய ஆக்கத்திறனுடைய வடிவத்தின் ஊடாக தற்போது பல விடயங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. வேலைத் திட்டம் அதிகரித்துள்ளது என எந்திரி டி. சிவக்குமார் தெரிவித்தார்.**

**எமது போக்குவரத்து துறை தொடர்பில் அவர் தெரிவித்த கருத்து...**

## நகரங்களை நோக்கி மக்கள் கவர்ந்து வர நகரங்கள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்று கூறுவீர்களா?

பொதுவாக நகரங்கள் இயற்கையோடு ஒன்றித்து இருத்தல் வேண்டும். நகரங்களுக்குள் வந்து எப்படா தம் வேலைகளை முடித்து விட்டு ஓடுவோம் என்று இல்லாமல் எப்பொழுதும் நகரத்திற்கு மிகுந்த ஆர்வத்தோடு சனங்கள் வருதல் வேண்டும் என்ற செயற்திட்டம் இருக்கிறது. மக்களை நகரங்கள் கவர்ந்து இழுத்தல் வேண்டும். நகர மயம் என்றில்லாமல் அது ஒரு கிராமம் மாதிரி இருத்தல் வேண்டும். நாம் கிராமம் ஒன்றுக்குள் போனால் எவ்வளவு சந்தோசமாக இருக்கின்றோமோ நகரமும் அவ்வாறு இருக்க வேண்டும்.

நகரப் போக்குவரத்துச் சேவையை பொறுத்தவரையில் எல்லோரும் ஒரு பொதுவான அமைப்பில் சேவையில் ஈடுபட்டு வருகிறோம். இது ஓர் இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு மனிதர்களையோ அல்லது பொருட்களையோ எடுத்துச் செல்வதையே குறிக்கும். இந்தப் போக்குவரத்து முறையில் வண்டி மாடுகளைத் தவிர எல்லா வாகனங்களில் செல்ல அனுமதிகள் இருக்கின்றன. இவை புகையிரத வண்டிப் பொதுப் போக்குவரத்துச் சேவை. பேரூந்து போக்குவரத்துச் சேவை, தனியார் போக்குவரத்துச் சேவை, ஏனைய போக்குவரத்துச் சேவைகள் இணைந்து செயற்படும் விதத்தில் பெரும் பங்கிருக்கிறது.

போக்குவரத்து எனும்போது தனியாக பாதையைப் பற்றியோ, வாகனத்தைப் பற்றியோ நாம் கதைக்க முடியாது. எல்லாவற்றோடும் இணைந்த விடயம் தான் போக்குவரத்து. இந்தப் போக்குவரத்துச் சேவை பொருத்தமுடையதாகவும் பொருளாதார அபிவிருத்திற்கு வலு சேர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும். நகரில் வியாபாரம் செய்யும் போது அதற்குள் சன நெரிசல்கள், நெருக்கடிகள் காணப்படுமாயின் அது வியாபாரத்திற்கு ஏற்ற பொருத்தமான இடமல்ல.

சனங்கள் வர வேண்டும். ஆனாலும் நகருக்குள் வாகனங்கள் அதிகமாக வரக் கூடாது. அதற்கு ஏற்ற வகையில் நாங்கள் நகரை மாற்ற வேண்டும். அதுதான் சிறந்த முறையாகும். பொதுவாக நகரங்களில் வாகனங்கள் அதிகம் நிறைந்து காணப்படுகின்றன. இங்கு மக்களுக்கு இடமில்லை. அவ்வாறான நகரம் பொருளாதார வளர்ச்சிக்குப் பொருத்தமான நகரமல்ல.

## அவ்வாறாயின் ஏன் வாகனத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது?

வீதியை நாம் பயணிப்பதற்கு பயன்படுத்தாமல் வாகனம் நிறுத்தும் இடமாகப் பாவிக்கின்றோம். அதனால் தான் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதற்கு விடைகாண வேண்டுமாயின், சமீபத்தில் நடைபெற்ற துரித அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், வீதிகள் அனைத்தும் வாகனப் போக்குவரத்திற்கு ஒத்துழைப்பு வழங்வதற்கு ஏற்பவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. வாகனங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்லுகிறது. வாகனங்கள் அதிகரிக்க அதிகரிக்க அதற்கு ஏற்ற வகையில் வீதியை அபிவிருத்தி செய்து கொண்டு செல்லுகின்றோம். அதுதான் அதற்கு தீர்வு என்று செய்து கொண்டிருக்கிறார்களே தவிர அது உண்மையான ஒரு தீர்வல்ல. வீதியை அதிகமானோர் பாவிப்பதற்கென அகலமாக்க மேலும் வாகனங்கள் கூடிக் கொண்டு செல்லுமே ஒழிய அது குறையப் போவதில்லை. ஆகவே வீதியை மீள்புனர் நிர்மாணம் செய்வது அதற்கு உரித்தான தீர்வாக அமையாது. அது ஒரு பிரச்சினையாகத் தான் அமையும்.

அதிகம் வாகனங்கள் வரும் போது ஒரு கட்டுப்பாட்டு வரையறை தேவை. பிரதேச சபை அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன வீதியை அகலமாக்குவதை தான் செய்கின்றன. இது இலகுவான வேலையாகும். ஆனால் உண்மையான நெருக்கடி கூடிக் கொண்டுதான் செல்லும்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றால், பிரச்சினை எங்கிருந்து தொடங்குகிறது என்று பார்க்க வேண்டும். நாம் வீதியைப் பாவிக்கும் தேவை கூடிக் கொண்டு செல்லும் போது வீதியின் அளவு அப்படியே இருக்கிறது. அது கொள்ளக் கூடிய தன்மையை விட வாகனங்களின் அளவு கூடும் போது நெருக்கடி நிலை உருவாக்கப்படுகிறது.

துரதிஷ்டவசமாக நாங்கள் வாகனத்தின் எண்ணிக்கையை வைத்தே மதிப்பீடு செய்கின்றோம். வாகனப் போக்குவரத்தின் முக்கிய பணி மக்களையும் பொருட்களையும் ஏற்றி இறக்குவதாகும். ஆகையால் நாங்கள் வாகனங்களின் எண்ணிக்கையில் தங்கியுள்ளோம். அங்கேதான் நாங்கள் அடிப்படை தவறை செய்கிறோம். 1000 பேரை அடுத்த இடத்திற்கு நகர்த்த வேண்டும் என்றால் தனிப்பட்ட வாகனங்கள், பொதுப் போக்குவரத்து வாகனங்கள் என அதிக வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதற்காக பாதையை அகற்றுவது அல்ல விடயம். வாகனங்கள் உள்ளே வருவதற்கு குறித்த நேரம் ஒன்றை ஒதுக்கி அதற்கான கட்டணம் அறவிடப்பட வேண்டும். கொழும்பு போன்ற நகரத்திற்கு இது கட்டாயம் தேவை. ஏனைய கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களில் அவ்வளவுக்கு நெரிசல் பற்றிக் கதைக்கத் தேவையில்லை. ஆனாலும் வாகனங்களை குறைக்கின்ற விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்

ஆனால் வாகனங்களை எப்படிக் குறைக்க வேண்டும் எனில், மக்களிடம் பிரயாணம் செய்யாதீர்கள் என்று சொல்ல முடியாது. நாங்கள் அவர்களுடைய செயற்பாட்டை மாற்ற இயலாது. ஆனால் அவர்கள் பயன்படுத்துகின்ற வாகனத்தை மாற்றலாம். சொந்த வாகனத்தில் செல்லாமல் பொது போக்குவரத்தை பயன்படுத்தலாம். ஒரு பேரூந்தில் 50 பேர் பிரயாணம் செய்யலாம். ஆனால் 50 நபர்களும் காரைப் பயன்படுத்தினால் 50 கார்கள் வீதியில் நிற்கும்.

ஒவ்வொரு நபர்களும் எமது நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சிந்தித்து செயலாற்ற வேண்டி இருக்கிறது. அந்த வகையில் பொதுப் போக்குவரத்தை நாங்கள் இயன்றளவு பயன்படுத்த வேண்டும். அதற்குப் பொதுப் போக்குவரத்து சீராக இருக்க வேண்டும். எமது சிந்தனையில் மாற்றம் எழ வேண்டும். தனியார் வாகனங்களால் நெரிசல் ஏற்படலாம்.

எமது வீதிகள் எல்லாம் மிகச் சிறியதாகும். எல்லோருக்கும் பொதுப்பாதையைப் பயன்படுத்துவதற்கு சமமான உரிமை இருக்கிறது. ஆகவே எல்லோரும் வரி செலுத்தியுள்ளனர். ஆனால் கார் வைத்திருப்பவர் எந்த வகையில் தனியே சொகுசாக வீதியில் செல்லலாம். தனியார் வாகனம் வைத்திருப்பவர்கள் அனைவரும் வீதியை இலவசமாகப் பயன்படுத்துகிறார்கள். அதிலேயும் நெருக்கடி இருக்கிறது.

எனவே தங்களுடைய எண்ணங்களை மாற்றி இது ஒரு பொதுவான வீதி. தார்மீக சிந்தனையோடு பாவிக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் யோசித்து செயற்பட வேண்டும்.

## மக்கள் பொதுப் போக்குவரத்தில் பயணத்தை மேற்கொள்ளத் தயார். எனினும் அதில் செல்வதற்கும் தன் சொந்தக் காரில் செல்வதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன? அவ்வாறான பொதுச் சேவை இருக்கிறதா?

உண்மையிலேயே இதற்கு விடையில்லை. பொதுப் போக்குவரத்தில் தனியார் செல்லும் காரிலுள்ள வசதி வாய்ப்புக்களை கொடுத்தாக வேண்டும். அந்தவகையில் பொதுப் போக்குவரத்து அவ்வாறில்லை. அதைச் சரி செய்ய வேண்டும். அதைச் செய்யாமல் பேரூந்தில் செல்லுங்கள் என்று கோரினால் யாரும் செல்லப் போவதில்லை. பொதுப் போக்குவரத்தின் தரத்தை நாங்கள் அதிகரிக்க வேண்டும்.

விதியை அபிவிருத்தி செய்தல் ஒரு பொருத்தமான செயற்பாடு அல்ல என நாம் கதைத்தோம். எங்கள் கொள்கைத் திட்டத்தை மாற்ற வேண்டும். வீதியை அபிவிருத்தி செய்வதில் பிரயோசனமில்லை. அதற்குப் பதிலாக நெருக்கடி நிலை இல்லாமற் செய்வதுதான் முக்கியம். வாகனங்களை குறைத்து அதிக மக்கள் பயணிக்க கூடிய வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதில் வெற்றி இருக்கிறது. உதாரணமாக பாடசாலைகள், அரச அலுவலகங்கள், தனியார் அலுவலகங்கள் எல்லா நிறுவனங்களும் காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகிறது. எல்லாரும் 7,8 வரையிலும் வீதியைப் பயன்படுத்த முயற்சி செய்கிறோம். அந்த நேரத்தில் பெரியதொரு நெரிசல் இருக்கும். பின்னர் வீதி நெரிசல் அற்றிருக்கும். இதில் நாங்கள் சிறியதொரு மாற்றம் செய்தால் பாடசாலையை சிறு நேர மாற்றத்துடன் தொடங்கினாலும். அரச நிறுவனங்கள் வழமையாகத் தொடங்கிறது போன்று தொடங்கினாலும் தனியார் நிறுவனங்கள் இன்னும் கொஞ்சம் பிந்தித் தொடங்கினால் இருக்கிற வீதி தாராளமாகப் போதுமானதாகும். எல்லோரும் ஒரே நேரத்தில் பாவிக்கத் தொடங்கினால் தான் பிரச்சினை வரும். இருக்கிற வளத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதற்கு நிறைய வழி இருக்கிறது. எல்லோரும் ஒரு வட்டத்திற்குள் வேலை செய்யாமல் நேரத்தில் மாற்றம் செய்யலாம். வீதியின் பெறுமானத்தை குறைக்க வேண்டும். எடுத்த எடுப்பில் வீதியை அபிவிருத்தி செய்து கொண்டு செல்வது என்பது ஒரு தீர்வாக அமையாது. போக்குவரத்தின் தேவையை எவ்வாறு முகாமைத்துவப்படுத்தலாம் என்ற விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதில் தான் நாம் வெற்றி இலக்கை அடையலாம். அது ஒரு பிழையான திட்டமிடல் ஆகும். அதனால்தான் நிறைய பிரச்சினைகளை இன்னும் தீர்க்க முடியாதுள்ளது. அதேநேரம் பொதுப் போக்குவரத்துச் சேவையை சொகுசுப்படுத்தினால் தான் பழைய முறையில் இருந்து புதிய வழிக்குச் செல்லலாம்.

## எங்களுடைய பொதுப் போக்குவரத்துச் சேவை திறன்படச் செயற்படுகிறதா?

பொதுப் போக்குவரத்துச் சேவை திறன்படச் செயற்படுகிறதா என்று சொல்வதற்கு முதல் எங்களிடம் பொதுப் போக்குவரத்துச் சேவை ஒன்று இல்லை என்றே கூற வேண்டும்.

பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு அடிப்படை திட்டம் இருக்கிறது. பேரூந்து என்று சொன்னால் அது பொதுவான ஒரு வாகனம். எல்லோரும் பாவிக்க வேண்டிய வாகனம். பொதுவான வாகனம், எல்லோருக்கும் உரித்துடையது. இன்னார் ஏற முடியாது. இன்னார் ஏற வேண்டும் என்ற சட்ட திட்டம் கிடையாது. அது தான் பொதுப் போக்குவரத்து ஆகும். அது இலவசமாக ஓடுவதில்லை. தனியார் காரில் போவது மாதிரி இருக்காது. ஓரளவு சொகுசு தன்மை இருக்கும். திட்டமிட்ட நேரத்தில் பயணம் செய்யும். திட்டமிட்ட பாதையில் பயணம் செய்யும். தனியார் கார் மாதிரி எல்லா இடங்களும் போகாது.



வேண்டிய நேரத்திலும் வராது. இப்படியான ஒரு சில கடப்பாடுகளுக்கிடையே செயற்படுவதுதான் பொதுப் போக்குவரத்தாகும். எங்களுடைய பொதுப் போக்குவரத்துச் சேவை நிறையப் பேருக்கு பயன்படுத்தக் கூடியதாக இல்லை. பேரூந்தில் உள்ளே செல்ல மூன்று படிகளில் ஏறினால் தான் செல்லலாம். ஆனால் பள்ளிக் கூடப் பிள்கைள் அதில் தாங்களாகவே ஏற முடியாது. எங்கள் பாடசாலை மாணவர்களுக்கு பேரூந்தில் செல்வதற்கான வசதிகள் இல்லை. முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள், சக்கர நாற்கலியை பயன்படுத்துகின்றவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் கொண்டதாக இல்லை. கர்ப்பிணித் தாய்மார்கள் அதில் ஏற முடியாது. சில நோயாளிகளுக்கும் பேரூந்தில் ஏற முடியாது. இவ்வாறான பொதுப் போக்குவரத்தைப் பாவிக்கவே இயலாது. எமது பொதுப் போக்குவரத்துச் சேவை திறன்மிக்கதில்லை என்று சொல்ல முடியாது.

முதலில் வாகனத்தின் வடிவத்தை மாற்ற வேண்டும். நாங்கள் நிலத்தில் நிற்கும் இடமும் பேரூந்தில் ஏறும் இடமும் ஒரே தலத்திற்கு வர வேண்டும். நாங்கள் படியேறாமல் இலகுவாக ஏறி இறங்கக் கூடிய பேரூந்துகள் உள்ளன. முதலாவது பேரூந்தையே மாற்ற வேண்டும். எங்களுடைய பேரூந்துகள் எல்லாம் லொறிகள் ஆகும்.

லொறிகளுடைய செஸ்ஸியைக் கொண்டு வந்து பேரூந்தாக மாற்றியமைத்துள்ளார்கள். உண்மையாக பொதுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் வாகனங்கள் அல்ல. பொது போக்குவரத்துக்குப் பயன்படுத்தக் கூடிய வாகனங்களை உடனடியாக அல்லாமல் சிறுது சிறுதாக பொது போக்குவரத்துக்கான வாகனங்களை மாற்ற வேண்டும்.

## இவையெல்லாம் சரி செய்யப்பட்டால் வேறு எவ்வாறான மாற்றங்கள் தேவை?

தனியார் வாகனத்தில் செல்லும் போது எத்தகைய நேர காலங்கள் தேவைப்படுகின்றதோ அத்தகைய நேர காலங்கள் பொதுப் போக்குவரத்திலும் இருத்தல் வேண்டும். தன் சொந்த வாகனத்தில் செல்லும் போது 30 நிமிடம் சென்றால் பொதுவாகனத்தில் செல்லும் போது 20 நிமிடம் சென்றால் மட்டும்தான் பொது பேருந்தில் செல்வதற்கு சிந்திக்க முடியும். இல்லையேனில் சிந்திக்க முடியாது, பொதுப் பேரூந்து எப்போதும் போக்குவரத்து நேரமாக இருக்கட்டும், சொகுசாக இருக்கட்டும், வசதிகள் எல்லாம்



தங்களுடைய சொந்த வாகனங்களை விட அதிகமாக இருத்தல் வேண்டும். இருந்தால் தான் பொதுப் போக்குவரத்துச் சேவையைச் சிறப்பானதாக மாற்றலாம்.

100 விகிதம் பொதுப் போக்குவரத்து சேவைக்கு மாற்ற முடியாது. ஆசனங்கள், குளிரூட்டல்கள், ஆசனங்களுக்கிடையே இடைவெளி இப்படி பல விதமான வசதிகள் இருக்க வேண்டும். பாதுகாப்பு இருத்தல் வேண்டும். இவை எல்லாம் பரிபூரணமாக அமைந்தால், சகல வசதிகளையும் வைத்துக் கொண்டு காரில் போகின்றவர் ஏன் நாம் காரில் போக வேண்டும் என்ற சிந்தனை வர வேண்டும். இப்படியான சகல வசதிகளையும் கொண்ட பேரூந்துகள் பயன்படுத்துதல் வேண்டும்.

சாரதி நடத்துனர்களுக்கு பயிற்சிகள் வழங்குதல் வேண்டும். அவர்களுடைய ஆளுமை விருத்திகள், பண்பாடுகள் மாற வேண்டும். பிரயாணிகளுடன் எவ்வாறு நடந்து கொள்ளுதல் வேண்டும் போன்ற விடயங்கள் விருத்தி செய்யப்படுதல் வேண்டும். இப்போது உள்ள சாரதி, நடத்துனர்களுடைய பழக்க வழக்கத்தை யாருமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஒரு நாள் ஏறியவர் மறுநாள் ஏற மாட்டார். அந்தளவுக்கு அவர்களுடைய நடவடிக்கைகள் அமைந்துள்ளன.





**இக்பால் அலி**

# இந்தியாவுக்கு தல யாத்திரை செல்வோர் மலேரியா தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறவும்

**யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்**

இந்தியாவுக்கு தல யாத்திரைகள் செல்ல இருப்பவர்கள் சுகாதார முற்பாதுகாப்பு ஆலோசனைகளை பின்பற்றி மலேரியா தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறவேண்டுமென யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை 2016 ஆம் ஆண்டு முதல் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் மலேரியா தொற்று பரவலில்லை. எனினும் கடந்த ஆண்டுகளில் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் இந்தியா மற்றும் ஆபிரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வரும் பயணிகளில் மலேரியா தொற்றுடன் பலர் இனங்காணப்பட்டுள்ளனர். இது மலேரியா அற்ற நாடாக எமது நாட்டை பேணுவதில்மிகப்பெரிய சவாலாகும்.

எனவே, மலேரியா நோய் பரவல் அதிகம் காணப்படுகின்ற இந்தியா போன்ற நாடுகளுக்கு ஐயப்பன் தல யாத்திரைக்கோ அல்லது வேறு தல யாத்திரைகளுக்கோ செல்பவர்கள் முற்பாதுகாப்பாக தடுப்பு மருந்துகளை ஒரு வாரத்திற்கு முன்பிருந்தே உரிய முறையில் உள்ளெடுப்பதன் மூலம் தமக்கு மலேரியா தொற்று ஏற்படுவதை தடுக்கலாம்.

எனவே; இந்தியா போன்ற நாடுகளுக்கு செல்ல இருப்பவர்கள் மலேரியா நோயிலிருந்து தம்மை காத்துக்கொள்வதற்காக பொதுச்சுகாதார பரிசோதகரை தொடர்பு கொள்ளவும் அல்லது, அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ அல்லது சுகாதார கிராமம், பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய மலேரியா தடை இயக்க பணிமனையிலோ தடுப்பு மருந்துகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் 021 222 7924 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.



இவர்கள் மலேரியா பரம்பல் அதிகமாக காணப்படும் நாடுகளில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் வாரத்திற்கு ஒருமுறை மட்டும் தடுப்பு மருந்துகளை தொடர்ந்து உள்ளெடுப்பதோடு பயணம் நிறைவுற்று நாடு திரும்பிய பின்னர் நான்கு வாரங்கள் நிறைவுறும் வரை வாரத்திற்கு ஒருமுறை தடுப்பு மருந்துகளை தொடர்ந்து எடுக்கவேண்டும்.

அவ்வாறே ஒரு வருடத்திற்குள் காய்ச்சல் ஏற்படின் உங்கள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று தங்கள் பயணம் தொடர்பான விபரங்களை வைத்தியருக்கு வழங்குவதுடன் மலேரியா நோய்க்கான குருதியை பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

மேலும், இவ்வாறான பயணங்களை மேற்கொள்ளும் யாராவது குருதிக்கொடையாளர்களாக இருந்தால் மூன்று வருடங்களுக்கு இரத்ததானம் வழங்க முடியாது.

மலேரியாவை பரப்பும் அனோபிலிஸ் வகை நுளம்புகள் பெருமளவில் எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன. மேலும் அண்மைக்காலங்களாக நகர்ப்புற மலேரியாவை பரப்பக் கூடிய அனோபிலிஸ் ஸ்டெபென்சி வகை நுளம்புகளும் எமது பிரதேசங்களில் காணப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையானது மலேரியா நோயை ஏற்படுத்தும் பிளாஸ்மோடியம் வகை ஒட்டுண்ணிகளை மனித உடலிலிருந்தும் அதை காவிப்பரப்பும் நுளம்புகளிலிருந்தும் ஒழித்ததன் மூலமே மலேரியா அற்ற நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

---


## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்
## பாதுகாப்பு அமைச்சு
# பதவி வெற்றிடங்கள்

## தணிப்பு நடவடிக்கைகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம் (RLVMMP) ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் நிதியிடப்பட்டது

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியினால் நிதியிடப்பட்டதும் தணிப்பு நடவடிக்கைகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனைக்காக பின்வரும் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன. இந்த செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவராண்மையானது பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமாகும். இந்த செயற்றிட்டத்தின் கீழ் பதுளை, கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, நுவரெலியா, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 126 அமைவிடங்களில் மற்றும் புகையிரத வழித்தடமுடன் அமைந்துள்ள உறுதியற்ற அமைவிடங்களில் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் பணிகள் மேம்படுத்தப்படும். I ஆம் கட்டத்தின் கீழ் முக்கியமான 24 தளங்கள் மண்சரிவிலிருந்து குறைக்கப்படும்/சீரமைக்கப்படுமென்பதுடன் மீதியான தளங்கள் II ஆம் கட்டத்தின் கீழ் மண்சரிவிலிருந்து குறைக்கப்படும்/சீரமைக்கப்படும்.

### 1. கொள்வனவு விஷேடத்துநர் (01 பதவி - பிஎஸ்3 மட்டம்)

**பதவியின் சுருக்கம்**

செயற்றிட்டத்தின் முழுவதுமான கொள்வனவு செயற்பாடுகள் மற்றும் ஒப்பந்த நிருவாகத்தை முகாமைப்படுத்துவதற்கு அவர் (ஆண்/பெண்) பொறுப்பாகவிருப்பார்.

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட இளமாணி பட்டப்படிப்பு அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பட்டப்படிப்பிற்கு நிகரானதொரு தகைமை அல்லது சிவில் பொறியியலில்/அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது நிகரான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/நிகரான தொழில்சார் தகைமையொன்றுடன் முகாமைத்துவரீதியிலான மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**அல்லது**

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் சித்திகரமாக பூர்த்தி செய்யப்பட்ட இளமாணி பட்டப்படிப்பு அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பட்டப்படிப்பிற்கு நிகரானதொரு தகைமை அல்லது சிவில் பொறியியலில்/அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது நிகரான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்ற இணைந்த அங்கத்துவமொன்று/நிகரான தொழில்சார் தகைமையொன்றுடன்

சிவில் பொறியியலில் / அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது சிவில் பொறியியலில்/அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது நிகரான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெற்ற கூட்டுரு/பட்டயம் பெற்ற அங்கத்துவம் அத்துடன் முகாமைத்துவரீதியிலான மட்டத்தில் ஆகக் குறைந்தது 09 வருட பட்டப்பின் தகைமைப்பட்ட அனுபவம்.

**அல்லது**

இ) நாடளாவிய அரசாங்க சேவையில் I ஆம் தர அலுவலர் அல்லது சிவில் பொறியியலில்/அளவிடல் அளவையில் அல்லது வேறேதாவது நிகரான துறையில் நிகரான பதவிநிலை

**அத்துடன்**

I ஆம் வகுப்பு பதவியில் ஆகக் குறைந்தது 4 வருட அனுபவம்.

**வயது :** 2022.11.15 ஆம் திகதியன்று 64 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

நியமனங்கள் ஆரம்பத்தில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அமைந்திருப்பதுடன் திருப்திகரமான செயற்பாட்டில் வருடந்தோறும் புதுப்பிக்கப்படுவதற்கு உட்பட்டதாகவிருக்கும். அரச சேவை/ நியதிச்சட்ட சபைகள்/கூட்டுத்தாபனங்கள் அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனங்களின் தலைமைகளுடாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டால் விடுவிக்கப்படுவாரா இல்லையா என்பதை அவர் குறிப்பிடல் வேண்டும். மாதாந்த சம்பளத்தின் 10% ஆனது ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பாகவிருக்கும் என்பதுடன் தொழில் வழங்குநரின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பானது 12% ஆகவும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பானது 3% ஆகவுமாகவிருக்கும்.

**சம்பளம்:**

01/2019 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் ஏனைய உரித்தான முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாகவிருக்கும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:**

இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து 10 நாட்களுள் முழுமையான சுயதரவு மற்றும் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்கள் அத்துடன் உரித்தான சான்றிதழ்களின் பிரதிகளுடன் தயவு செய்து விண்ணப்பிக்கவும்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்கள் பின்வரும் முகவரியை அடையும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். (உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத, தேவைப்படுத்தப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவம் இல்லாதவைகள் மற்றும் சான்று பகரும் சான்றிதழ்கள் இல்லாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்று நிராகரிக்கப்படும்)

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**தணிப்பு நடவடிக்கைகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05.**
**(தொலைபேசி: 0112559869)**


---

# இனப்பிரச்சினை தீர்வுக்கான ஜனாதிபதியின் அழைப்பை சமத்துவக் கட்சி வரவேற்கிறது

**முன்னாள் எம்.பி சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம்**

***கிளிநொச்சி குறூப் நிருபர்***

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற நோக்கில் தமிழ் பேசும் தரப்பினருடன் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி எடுத்திருக்கும் நடவடிக்கைகளை, தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியென்ற வகையில் நாங்கள் வரவேற்கிறோம் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்கு பொருளாதார மீட்டெடுப்புடன், தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்றினை காண்பதும் முக்கியமானதாகும். இது தங்களைப்போன்ற துணிச்சலும் அர்ப்பணிப்பும் உறுதிப்பாடும் உள்ள தலைமைகளால் மட்டுமே முடியும்.

---

**மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குள்**

# கழிவுகள் கொட்டுவதை நிறுத்துமாறு வலியுறுத்தி மக்கள் போராட்டம்



***யாழ்.விசேட நிருபர்***

யாழ்.மாநகர சபை தமது பிரதேச எல்லைக்குள் கழிவுகளை கொட்டுவதை நிறுத்த வேண்டும் என கோரி மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்கள், மக்கள் இணைந்து நேற்றைய தினம் புதன்கிழமை வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குள் இருக்கும் கல்லுண்டாய் பிரதேசத்தில் கழிவுகளை கொட்டி வருகிறது. அதனால் அப்பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர்கள் , அப்பகுதி மக்களுடன் இணைந்து மாநகர சபை தமது எல்லைக்குள் கழிவுகளை கொட்டக்கூடாது என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர் .

---


# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை போக்குவரத்து சபை (இபோச)

**Supply and delivery of pre-cured Tread Liners, Bonding Gum, Gum Solvent (S.B.P.) to SLTB Ampara Tyre Factory**

**SLTB/TS/GEN/2022/03-VI**

1. Pre-cured tread liners, Bonding Gum, Gum solvent (S.B.P.) ஆகியனவற்றை இபோச அம்பாறை டயர் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ள விபரக்குறிப்புக்களுக்கு உறுதிப்படுத்தும் வகையில் வழங்கக்கூடிய தகுதியுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து **2022.12.15 ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை** இபோச உயர்மட்ட பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். **2022.12.01 ஆம் திகதியிலிருந்து 2022.12.14 ஆம் திகதி வரை** அலுவலக நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவைச் செலுத்திய பின்னர் கொழும்பு-05, கிருள பாதை, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழு செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.

| விளக்கம் | விலைமனுப்பிணை |
|---|---|
| Supply and Delivery of Pre-cured tread liners, Bonding Gum, Gum Solvent (S.B.P.) and related materials for SLTB Ampara Tyre Factory, on 30 days credit. | 1.0 மில்லியன் ரூபா |

2. தேவைப்படும் Pre-cured tread liners, Bonding Gum, மற்றும் ஏனைய தொடர்புள்ள பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான ISO:9001 தர சான்றிதழைக் கொண்டுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் மாத்திரம் மற்றும் முன்வைக்கப்படும் அம்சங்களை உற்பத்தி செய்யக்கூடிய ISO:9001 தர சான்றிதழைக் கொண்டுள்ள வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்ளூர் முகவர்கள் ஆகியோர் விலைமனுக்களை முன்வைப்பதற்கான தகுதியைப் பெற்றுக் கொள்வர்.
3. (அ) எந்தவொரு விலைமனுதாரரின் முகவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிட்டவராக அல்லது அவரின் சார்பாக செயற்படுவராகவிருப்பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னராக 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க சட்ட பொது ஒப்பந்தங்களுக்கமைவாக இலங்கை பொது ஒப்பந்தங்களின் பதிவாளருடன் அவ்வாறான நபர் பதிவு செய்தல் வேண்டும். விலைமனுவுடன் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சான்றிதழின் மூலப்பிரதியை சமர்ப்பிப்பதற்கு தவறும் விலைமனுதாரர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
   (ஆ) 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பித்தவுடனேயேயும் ஒப்பந்தத்தை பெற்றுக் கொள்ள முன்பும் விலைமனுதாரர்கள் தம்மை பதிவு செய்தல் வேண்டும். உரித்தான பெறுகைக் குழுவிற்கு பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறும் எந்தவொரு விலைமனுதாரருக்கும் ஒப்பந்தம் வழங்கப்படமாட்டாது.
4. விலைமனுக்கள் **2023.03.15** ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். இருப்பினும் முன்வைக்கப்படும் விலைகள் ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் **2023.04.14** ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் மேலே குறிப்பிட்டுள்ள பெறுமதிக்கானதுமான விலைமனுப்பிணையொன்றுடனும் மத்திய வங்கியில் பதிவு பெற்றதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருப்பதும் இபோச இன் முதல் எழுத்து மூலமான விண்ணப்பத்திலேயே திருப்பப்படாததும் நிபந்தனையற்றதுமான உத்தரவாத அடிப்படையில் விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.
6. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்துப் பக்கங்களும் விலைமனுதாரரினால் சிற்றொப்பமிட்டு அவரது இலட்சினை பொறிக்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் ஒன்றில் கொழும்பு-05, கிருள பாதை, 200 ஆம் இலக்கத்திலுள்ள இபோச பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் **2022.12.15 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனு அடக்கப்பட்டுள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Bid for the Supply & delivery of Pre-cured tread liners, Bonding Gum, Gum solvent (S.B.P.) to SLTB Ampara Tyre Factory"** என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. கொழும்பு-05, கிருள பாதை, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பெறுகைக் குழுவின் செயலாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**இபோச பெறுகைக் குழு,**
**பெறுகைப் பிரிவு,**
**இலங்கை போக்குவரத்து சபை,**
**இல.: 200, கிருள பாதை, கொழும்பு-05.**
**விசாரணைகள் : செயலாளர், இபோச பெறுகைக் குழு.**
**தொலைபேசி : 011 7706110 மற்றும் 0771056110. தொலைபேசி/தொலைநகல்: 011 2588457**


---


# எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி
# பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 02/09/10/17 | ஜனவரி 2023 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 03/11/18/23 | ஜனவரி 2023 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 69, தெஹிவளை வீதி, மஹாரகம. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 04/12/19/24 | ஜனவரி 2023 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
29. அலுமினியம் கதவுகள் மற்றும் பொருத்தல் கட்டமைப்புகள்/Vertical & Venetian Blinds
30. பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து
31. பால்மா/ சீனி/ தேயிலை
32. போத்தலில் அடைக்கப்பட்ட நீர் (குடிப்பதற்கானது)
33. ஏனைய உருப்படிகள்

**முகாமையாளர் (பொருள்வளம்)**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**சுத்திகரிப்பு பிரிவு,**
**த.பெட்டி 11, களனி, தொலைபேசி : 2400110.**

---

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை
### இறுதி தீர்மான பொது அறிவித்தல்

## தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்

### அம்பாந்தோட்டையில் 10 மெகாவற் சூரிய PV சக்தி பொறித்தொகுதியை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்ட கருத்திட்டம் ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப.) அறிக்கை

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை பிற்சேர்க்கை (ஆ.சு.ப.) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 22 நவம்பர் 2000 ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(1) இற்கமைவாக மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை இல. 41/3, 1/1, 5வது வீதி, ராஜகிரியவில் அமைந்துள்ள நித்ஹன்யா இன்டர்நஷனல் (பிரைவட்) லிமிடெட்டிற்கு குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆ.சு.ப. அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**"பரிசரபியச",**
**இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை
### இறுதி தீர்மான பொது அறிவித்தல்

## தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்

### இல. 64, புத்கமுவ, ராஜகிரியவில் பிரேரிக்கப்பட்டுள்ள கலப்பு அபிவிருத்தித்திட்டம் ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப) அறிக்கை.

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை பிற்சேர்க்கை (ஆ.சு.ப.) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 22 நவம்பர் 2000 ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை இல. 65, புத்கமுவ வீதி, ராஜகிரியவில் அமைந்துள்ள பெய்லி இன்வஸ்ட்மன்ட் லங்கா (பிரைவட்) லிமிடெட்டிற்கு குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆ.சு.ப. அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**"பரிசரபியச",**
**இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

## மத்திய சுற்றாடல் அதிகார சபை
### இறுதி தீர்மான பொது அறிவித்தல்

## தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்

### மட்டக்களப்பு ஓட்டமாவடியிலமையவிருக்கும் உத்தேசிக்கப்பட்ட 100 மெகாவற் சூரிய சக்தி கருத்திட்டம் ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப.) அறிக்கை

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை பிற்சேர்க்கை (ஆ.சு.ப.) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 22 நவம்பர் 2000 ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக மேற்கூறப்பட்ட செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை இல. 100/10, ஹொர்ட்டன் கார்ட்டன்ஸ், ஒப்வ் ஹோர்ட்டன் பிளேஸ், கொழும்பு-07 இல் அமைந்துள்ள சோலார் போஜ் (தனியார்) நிறுவனத்தற்கு குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆ.சு.ப. அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை**
**"பரிசரபியச",**
**இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

## நுவரெலியா மாநகர சபை

# 2023 குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை

மாநகர சபை சட்டவாக்கத்தின் (252ஆம் அதிகாரம்) 212(ஆ) பிரிவின் பிரகாரம் நுவரெலியா மாநகர சபையின் 2023ஆம் ஆண்டு சார்பாக தயாரிக்கப்பட்ட குறைநிரப்பு வரவு செலவுத் திட்ட அறிக்கை, 2022 டிசம்பர் 02ம் திகதி முதல் 2022 டிசம்பர் 08 வரை மக்கள் பரிசீலனைக்காக நுவரெலியா மாநகர சபை அலுவலகம், மக்கள் நூலகம், பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

இதற்கு மேலதிகமாக எமது இணையதளம் (www.nuwaraeliya.mc.gov.lk) மூலமும் பரிசீலிக்கலாம்.

**பீ.டீ. சந்தன லால் கருணாரத்ன,**
**நகர முதல்வர்,**

**நுவரெலியா மாநகர சபை.**

2022.11.28ம் திகதி

### பெயர் மாற்றம்

இல. 46 யூஸூப் ஹாஜியார் மாவத்தை பெரிய முல்லை நீர்கொழும்பு எனும் முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல. 882591417V கொண்ட தவராசா தர்சன் ஆகிய நான் இன்று முதல் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை தவராசா அப்துல் ரஹீம் என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புனித பெயரை யே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடு வேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு மக்களுக்கும் அறியத் தருகின்றேன்

**T. அப்துல் ரஹீம்**

Repeat Your ad For Better Offers

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

**கிரிந்திவெல நிறைவேற்று பொறியியலாளர், பணிமனையினால் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தலுகம களனி வீதிக்காக ரெடிமிக்ஸ் கொங்றீட் (G30) பெற்றுக்கொள்ளல்**

**கேள்வி இலக்கம் - PRDA/WP/PRO/2022/47**

இவ் அதிகாரசபையின் தலுகம களனி வீதிக்கு தேவையான ரெடிமிக்ஸ் கொங்றீட் (G30/20/120mm) கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்வி சுருக்கம்**

| உருப்படி | அளவு (கியூபிக் மீட்டர்) | கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) | காசாக பிணைமுறி (ரு) | வங்கிப்பிணை முறி (ரு) |
|---|---|---|---|---|
| 01. தலுகம களனி | 219.50 | 2000.00+வெட் | 46,000.00 | 92,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2022.12.01 முதல் 2022.12.12 வரை மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை தலைமையகத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

03. இதற்கான கேள்வி பிணைமுறி காசாக அல்லது வங்கி/காப்புறுதி பிணைமுறியின் மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்காக கேள்வித்தொகை ரூ-50 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் குறித்த 1987 இல - 03 பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச்சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2022.12.13 மு.ப.11.00 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ் வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும்.

06. அவ் வேளையில் வழங்குநர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதயொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல.59, சென் செபஸ்தியன் மேடு**
**கொழும்பு - 12**
**தொ.பே.இல - 0115676903**

# இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/PT/6317(MAR) | Supply , Installation of 01 No. Electro Hydraulic Towing winch Cum Anchor Windlass on Board 45 Ton Bollard pulling capacity M/T Vijayabahu | 400,000.00 | 3,500.00 | 2023.01.05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02 /PT/6414(MP) | 10 Nos. Main Hoist Wire Rope 25MM X 485 M | 195,000.00 | 3,500.00 | 2023.01.05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/PT/6417(EL) | Slip Rings and Carbon Brushes for Torque Motors of Transfer Cranes | 20,000.00 | 1,000.00 | 2023.01.05 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/22/PT/09/010 | 07 (Nos) Multimedia Projector with Screen | 16,000.00 | 1,000.00 | 2022.12.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/21/PT/04/058 | Spares for Mitsubishi/Caterpillar DP25/ FD25 Fork Lift Trucks-06 | 65,000.00 | 1,000.00 | 2022.12.22 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/22/PT/08/056 | 02 Nos. Euroneema Ropes 56MM DIA, 60M Coil and 02 Coi. Euroneema Ropes 56MM DIA, 160M Coil | 104,000.00 | 3,500.00 | 2022.12.22 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 டிசம்பர் 02 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482331, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை**

# வழங்குநர்கள் மற்றும் சேவை நிறுவனங்களைப் பதிவு செய்தல்

2023 ஆண்டிற்காக கீழேயுள்ள வேலைகளுடன் சம்பந்தப்பட்ட வழங்கல்கள் மற்றும் சேவைகள் சார்பாக பிரதிநிதிகள் மற்றும் நிறுவனங்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வழங்கல்கள்**

1. சகல வகையான காகிதாதிகள்
2. சகல வகையான கட்டிடப் பொருட்கள்/ மின்சார துணைப்பாகங்கள்
3. சகல வகையான மின் உபகரணங்கள்/ வளிச்சீராக்கி இயந்திரங்கள்
4. சகல வகையான கணனி, அச்சு இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரம் மற்றும் கணனி உபகரணங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள்
5. டோனர் மற்றும் அச்சு துணைப்பாகங்கள்
6. வாகன உதிரிப் பாகங்கள்
7. டயர் மற்றும் டியூப்
8. அலுவலக உபகரணங்கள்
9. அலுவலக சுத்திகரிப்பு மற்றும் கை கழுவும் திரவங்கள்
10. சிசிடிவி கெமரா

**சேவைகள்**

1. வாகன பழுதுபார்த்தல்கள்
2. வாகன சேர்விஸ் செய்தல்
3. அச்சு விடயங்கள்/ பெயர் பலகை
4. கணனி, அச்சு இயந்திரங்கள், போட்டோப் பிரதி இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரம் பழுதுபார்த்தல் மற்றும் சேவை வழங்குதல்
5. அலுவலக சுத்திகரிப்புகள்

**ஒப்பந்தங்கள்**

1. பழுதுபார்த்தல் ஒப்பந்தங்கள்
   பதிவு செய்வதற்காக www.condominium.lk இணைய தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து இலங்கை வங்கி, லேக்ஹவுஸ் கிளையின் 0000351042 கணக்கிற்கு ரூபா 1,178.75 (வரியுடனான ஒரு வழங்கல்/ சேவை/ ஒப்பந்தத்திற்காக) வரவு வைத்து விண்ணப்பத்துடன் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை 2022.12.19ம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**தொ.பே. இல: 011-2447429/ 0112447432**
**தலைவர்,**
**கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை**
**முதலாம் மாடி,**
**தேசிய வீடமைப்பு திணைக்கள கட்டிடம், கொழும்பு-02.**

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்

2023ஆம் ஆண்டில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்திற்கு பின்பவரும் பண்டங்கள்/ சேவைகளை வழங்கல் மற்றும் நிர்மாணங்களிற்காக பதிவு செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் வழங்குநர்களிடமிருந்து/ உற்பத்தியாளர்களிடமிருந்து/ தேசிய முகவர்களிடமிருந்து/ விநியோகஸ்தர்களிடமிருந்து/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ஒவ்வொரு பண்டங்கள்/ சேவைகள்/ நிர்மாணத்துறை உப தொகுதிகளிற்காக மீளளிக்கப்படாத ரூபா 2000.00 இற்கான வைப்புத் தொகையை பதிவுக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.
- மீளளிக்கப்படாத ரூபா 2000.00 இற்கான பதிவுக் கட்டணத்தை மக்கள் வங்கியின் கங்கொடவில கிளையின் இலக்கம் 097-1-001-6-2315454 என்ற கணக்கிற்கு அல்லது இணையத்தளம் மூலம் www.sjp.ac.lk (Procurement & Notices) இணையத்தளம் மூலம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். காசுக்கட்டளைகள் (Money order) வங்கிவரைவு (Bank Draft) அல்லது காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- மாதிரிப்படிவங்கள் மற்றும் குறித்த விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக இணையதளத்தில் தரவிறக்கம் செய்து கொள்ளலாம். www.sjp.ac.lk procurement and Notices
- இதற்காகக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுக்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களுடன் கீழ்க்காணப்படும் ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
  1. வியாபாரப் பதிவுச் சான்றிதழ், வழங்குநர்களின் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் துறைகளிற்கான ஏனைய உரிமங்கள், வரையறுக்கப்பட்ட கம்பனிகளிற்கான கம்பனிப்புறவிதிகள் மற்றும் அமைப்புவிதிகள்.
  2. உரித்தான துறைகளில் 03 வருட அனுபவம். (உறுதிப்படுத்துவதற்காகத் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)
- தகைமைகளைப் பூரணப்படுத்தாத விண்ணப்பதாரர்கள், பதிவு செய்யப்பட மாட்டார்கள் என்பதுடன் வைப்பத் தொகையானது மீளளிக்கப்பட மாட்டாதென்பதனை தயவு செய்து கவனிக்கவும். அரச திணைக்களங்கள்/ சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் மேற்படி கட்டணங்களைச் செலுத்துதல் மற்றும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் அவசியம் இல்லை.
- விண்ணப்பங்களைப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரதான பாதுகாப்பு நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் 2022 டிசம்பர் 21 அன்று பி.ப. 4.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் நேரில் சேர்த்தல் மேற்கொள்ளலாம். பதிவுக்காக விண்ணப்பிக்கும் உபதொகுதியை விண்ணப்பப்படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடவும்.
- கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுக்கள், விண்ணப்பம் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் தபாலுறையொன்றில் சேர்த்து அதன் இடது பக்க மேல் மூலையில் ‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் (உபதொகுதி) 2023’ எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
- எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரித்தாகும். எந்தவொரு வழங்குநரும் கேள்வி கோரலிற்கு அமைய, உரிய விபரக்குறிப்புக்கமைவாக உரிய காலத்தில் பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு முடியாமற்போனால், முன்னறிவித்தலின்றி பதிவை இரத்துச் செய்யும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரித்தாகும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் மற்றும் முன்னைய ஆண்டுகளில் உரிய விபரக்குறிப்புக்களிற்கு அமைவாக அல்லது உரிய காலத்தில் பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்க இயலாமையிலான வழங்குநர்களின் விண்ணப்பங்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.
- பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுவதுடன், போட்டிரீதியிலான கேள்விகளைக் கோரும் நோக்கில், ஏனைய வழங்குநர்களிடமிருந்து மற்றும் Promise. lk என்ற இணையதளத்தில் கேள்வி கோரும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரித்தாகும்.
- பதிவு செய்து கொள்ளப்படும் அனைத்து வழங்கல்கள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பாக குறைந்த பட்சம் 30 நாட்களிற்கு கடன் வசதிகளை வழங்கல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை வாரவேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 - பி.ப. 3.30) பிரதி நிதி அலுவலர் வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். 0112758216/ 0112758217

**பதிவாளர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**
**கங்கொடவில**
**நுகேகொடை.**
**2022.11.30**

**மின்வலு மற்றும் சக்திவலு அமைச்சு**

# இலங்கை அணுசக்தி சபை

## 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

இலங்கை அணுசக்தி சபைக்கு 2023ஆம் ஆண்டில் பண்டங்களை வழங்கல் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்காக பதிவு செய்துகொள்வதற்கு ஆர்வமுள்ள, அங்கீகாரம் பெற்றுள்ள வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து 2022.12.31 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதற்கான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான மாதிரிப் படிவங்களை தரவிறக்கம் (Download) செய்து கொள்வதற்காக எமது உத்தியோகபூர்வ இணையதளமான www.aeb.gov.lk (English→ Procurement→Supplier Registration 2023) இற்கு பிரவேசிக்கவும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இங்கை அணுசக்தி சபை,**
**இல. 60/460, பேஸ்லைன் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிட்டிய.**
**தொலைபேசி இல : 011-2533427**
**தொலைநகல் இல : 011-2533448**

எனது இல:- DS/RAT/LND/04/01

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல:- 4-3/4/2021/LRB/248

## காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்வரும் காணிக்கான மேற்படி சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் உரித்து மற்றும் நட்டஈட்டு விசாரணை 2022.12.13. ரத்கம பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது என்பதை பொதுமக்களின் அறிவிற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்த காணியுடன் தொடர்பு உள்ளவர்கள் விசாரணைக்கு தோன்றுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 2022.11.14 ஆம் திகதிய 2306/11 ஆம் இலக்க அதிவிசேட வத்தமானியைப் பார்க்க.

மாவட்டம் :- காலி

பிரதேச செயலாளர் பிரிவு :- ரத்கம

கிராம உத்தியோகத்தர் பிரிவு:- 46 சி பள்ளியப்பிட்டி

வரைபட இலக்கம் :- இல 4652

காணித் துண்டுகள் :- 16

காணியின் விஸ்தீரணம் :- 5.2816 ஹெக்டயர்

காணி அமைந்துள்ள ஊர் :- பள்ளியப்பிட்டி

காணியின் பெயர் :-கட்டில்ல இரலியத்த, கதுருகணுவ, மஹவெலிபொக்க, போகஹலியத்த, ஊருபோகஹலியத்த, நிந்தானெகும்புர, ஹத்ரியன்கும்புர, குடாபெலிபொக்க, ஊருபொக்கலியத்த, குடாபெலிபொக்ககும்புர, தென்கும்புர குடாவெலிபொக்க, திகனெகும்புர, தந்தூவ, ஜயதினாலியத்த, தலகொலவலதுடுவ, பத்தம்பகொடபேலிய, திவுல்கஹலியத்த, கொஸ்கஹலியத் தேகும்புர, எம்பிலிவெலகும்புர, பத்தம்பகொட, எலஇரகும்புர

**பிரதேச செயலாளர்**
**ரத்கம பிரிவு**

**2022.11.28**
**ரத்கம பிரதேச செயலகம்**

எனது இல:-DS/RAT/LND/04/01

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல:- 4-3/4/2021/LRB/248

## காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி எடுத்தற் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்வரும் காணிக்கான மேற்படி சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் உரித்து மற்றும் நட்டஈட்டு விசாரணை 2022.12.13 ரத்கம பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது என்பதை பொதுமக்களின் அறிவிற்காக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்த காணியுடன் தொடர்பு உள்ளவர்கள் விசாரணைக்கு தோன்றுதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 2022.11.14 ஆம் திகதிய 2306/11 ஆம் இலக்க அதிவிசேட வத்தமானியைப் பார்க்க.

மாவட்டம் :- காலி

பிரதேச செயலாளர் பிரிவு :- ரத்கம

கிராம உத்தியோகத்தர்

பிரிவு :- 46 சி கம்மெத்தெகொட

வரைபட இலக்கம் :- இல 4649

காணித் துண்டுகள் :- 36

காணியின் விஸ்தீரணம் :- 3.9895 ஹெக்டயர்

காணி அமைந்துள்ள ஊர் :- கம்மெத்தெகொட

காணியின் பெயர் :- ரஜ்ஜன்வெல அல்லது தொம்மாயி அப்பகெவெல மற்றும் விதானமுத்தெட்டுவ, ரஜ்ஜன்வெல அல்லது தொம்மாயி அப்பகெவெல விதானமுத்தெட்டுவ மற்றும் முத்தெட்டுவகும்புர, வெலபடவத்தை, கலதெகும்புர, வெலபடலியத்த மற்றும் அத்தகெவெல, வெலபடவத்தை மற்றும் கலதெகும்புர, வெலபடலியத்த, ஜயதினாலியத்த கும்புர, ஜயதினாலியத்த ஊருபோகஹலியத்த, ஊருபோகஹலியத்த, தொடம்பெகும்புர, பிட்டஇரகும்புர, கம்மெத்தெகும்புர, பிட்டஇரகும்புர அல்லது கட்டில்லஇரகும்புர, கார்தியலியத்த, தும்மலஹெலகும்புர, குருன்னெஹெகெகும்புர களுவெலிபிட்டனிய அத்தரகும்புர, குருன்னெஹெகெ கும்புர, கல்பொத்த கும்புர, ஹெல்வலகும்புர, கட்டில்லஇரலியத்த, பிட்டரகும்புர அல்லது கட்டில்ல இரகும்புர, விதானெமுத்தெட்டுவ

**பிரதேச செயலாளர்**
**ரத்கம பிரிவு**

**2022.11.28**
**ரத்கம பிரதேச செயலகத்தில்**

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## 2022ஆம் வருடத்தில் வர்த்தக சேதனப் பசளை உற்பத்திப் பிரிவிற்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்

### விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

### வடமத்திய மாகாணம்

வடமத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் திரப்பனே பண்ணையில் நிர்மாணிக்கப்படவுள்ள வர்த்தக சேதனப் பசளை உற்பத்திப் பிரிவிற்குத் தேவையான பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து மாகாணப் பணிப்பாளர் / பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் விலைகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பொருள் விபரங்கள் | சராசரி மதிப்பீடு (ரூபா. மில்லியன்) | சமர்ப்பிக்க வேண்டிய கேள்விப் பிணை முறி (ரூபா) | மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | 04 சக்கர டிராக்டரொன்றைக் கொள்வனவு செய்தல் | 7.00 | 70,000.00 | 2,500.00 |
| 012 | ஏனைய இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்<br>1. கொம்போஸ்ட் குவியல்களை புரட்டும் இயந்திரம்<br>2. கொம்போஸ்ட் தூளாக்கும் இயந்திரம் | 1.6 | 16,000.00 | 2,500.00 |

02. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2022 டிசம்பர் மாதம் 01ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் 22ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அநுராதபுரம் கொடகே மாவத்தையில் அமைந்துள்ள மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண அலுவலகத்தில் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் 2,500.00 ரூபா மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தைச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களுடன் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதிக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் பிணை முறியொன்றை விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் (2023 மார்ச் 24) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

03. உங்களால் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் மீண்டும் ஒரு உறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து 2022 டிசம்பர் 23ஆம் திகதி 03.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் மாகாணப் பணிப்பாளர் / தலைவர், பெறுகைக் குழு, மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கொடகே மாவத்தை, அநுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாணப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எதற்காக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

04. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து 2022 டிசம்பர் மாதம் 23ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் வாய்ந்த பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம். இந்த பெறுகை நடவடிக்கைகள் தொடர்பில் வடமத்திய மாகாண விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். மேலதிக விபரங்கள் தேவையாயின் 025-2222533 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அநுராதபுரம்.**

# நோர்வூட் பிரதேச சபை

## 2023ம் ஆண்டிற்கு விநியோகஸ்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்

கீழ்க்காட்டப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் வழங்குபவர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் 2023.01.01ம் திகதி தொடக்கம் 2023.12.31ம் திகதி வரையான காலப்பகுதிக்கு பதிவு செய்து கொள்வதற்காக தகைமையுடைய விநியோகஸ்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள், முகவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சகல விண்ணப்பப்படிவங்களும் 2022.12.30ம் திகதிக்கு முன் **"தவிசாளர், நோர்வூட் பிரதேச சபை, டியன்சின் பசார், பொகவந்தலாவை"** என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலின் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து கையளிக்கலாம். தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் **"2023ம் ஆண்டிற்கான விநியோகஸ்தர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்"** எனக் குறிப்பிடப்பட வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சேவைகள் வழங்கல் மற்றும் பொருட்கள் விநியோகத்திற்காக தனித்தனியே விண்ணப்பித்தல் வேண்டும்.

| வகை இல. | விபரம் | மீள் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ) |
|---|---|---|
| **விநியோகஸ்தர்கள்** | | |
| 01 | எல்லா வகையான காகிதாதிகள், இறப்பர் முத்திரைகள் மற்றும் டோனர் வகைகள் | 1,000.00 |
| 02 | ஹாட்வெயார் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சுக்கள் (எல்லா வகையான ஹாட்வெயார் பொருட்களும், சீமெந்து நிறப்பூச்சுக்கள் மற்றும் பளபளப்பாக்கும் திரவியம் பொலிஷ் முதலியன) | 1,000.00 |
| 03 | நலம் காக்கும் மற்றும் சுகாதார சேவைக்குத் தேவையான உபகரணங்கள் (மழை மேலங்கி, பூட்ஸ், பிளாஸ்டிக் வாளிகள், தும்புத்தடி, ஈக்கிள், குப்பை அகற்றுவதற்குத் தேவையான கைவண்டி பங்கசு கொல்லிகள் மற்றும் ஏனைய பொருட்கள்) | 1,000.00 |
| 04 | வீதி மற்றும் கட்டிடப்பொருட்கள் (மெட்டல் கற்கள், கருங்கல், சீமெந்து, மணல், செங்கற்கள், ஓடுகள், சுண்ணாம்பு மற்றும் சீமெந்திலான குழாய்கள் முதலியன) | 1,000.00 |
| 05 | வாகன உதிரிப்பாகங்கள் (மின்கலம், டயர், டியூப் மற்றும் சகல விதமான உதிரிப்பாகங்கள்) | 1,000.00 |
| 06 | காரியாலய தளபாடங்கள் (மேசை,நாற்காலி, அலுமாரிகள், கோவைகள் வைக்கும் அலுமாரி, இரும்பு அலுமாரி, மற்றும் ஏனைய தளபாடங்கள்) | 1,000.00 |
| 07 | காரியாலய உபகரணங்கள் (நிழற்பிரதி இயந்திரம், மேசைக் கணனி, மடிக்கணனி, கணனி உதிரிப்பாகங்கள், தொலைநகல் இயந்திரம், நிழற்பிரதி இயந்திரம் மற்றும் ஏனையன | 1,000.00 |
| 08 | வீதி விளக்கு பொருட்கள், பாதுகாப்புப் பட்டி மற்றும் சகல விதமான மின் பொருட்கள் | 1,000.00 |
| 09 | விளையாட்டு உபகரணங்கள் (கரம், செஸ், கிரிக்கெட், உதைப்பந்து, வலைப்பந்து மற்றும் கரப்பந்து ஆகியவற்றுக்கு தேவையான உபகரணங்கள் ஏனையன) | 1,000.00 |
| **சேவைகள்** | | |
| **வகை இல.** | **விபரம்** | **மீள் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ)** |
| 11 | அச்சக சேவைகள், டிஜிட்டல் பதாதைகள் (Digital Banner) பிரிண்ட் செய்தல் மற்றும் புத்தகங்கள் கட்டும் வேலைகள் | 1,000.00 |
| 12 | மோட்டார் வாகனம், இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் சேவைகள் | 1,000.00 |
| 13 | காரியாலய உபகரணங்களைப் பழுது பார்த்தல் (போட்டோ கொப்பி இயந்திரம், பிரதி எடுத்தல் இயந்திரம், கணினி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் முதலியன) | 1,000.00 |
| 14 | அலுவலக தளபாடங்கள் பழுதுபார்த்தல் | 1,000.00 |
| 15 | கட்டிட வரைபட கலைஞர்களை பதிவு செய்தல் (கட்டிட வரைபடங்கள் கீறுவதற்கு) | 1,000.00 |
| **ஒப்பந்தக்காரர்கள்** | | |
| **வகை இல.** | **விபரம்** | **மீள் செலுத்தப்படாத பதிவுக் கட்டணம் (ரூ)** |
| 16. | ரூ. 100,000.00 வரை | 2,000.00 |
| 17. | ரூ. 100,000.00 - ரூ.10,000,000.00 | 5,000.00 |
| 18. | ரூ. 10,000,000.00 ற்கு மேலதிகமாக | 8,000.00 |
| 19. | இயந்திர உபகரணம் வழங்குநர் (Backhoe Loader, Lorries & Wacker Machine) | 5,000.00 |

**குறிப்பு:- பதிவு செய்யப்படும் விநியோகஸ்தர்கள் பொருட்களை களஞ்சியசாலைக்கு கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும்.**

விநியோகஸ்தர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் தங்களை பதிவுசெய்யும் போது விண்ணப்பப்படிவத்துடன் வியாபார பதிவுச்சான்றிதழின் பிரதியினையும் ஒப்பந்தக்காரர்கள் விண்ணப்பப்படிவத்துடன் ICTAD பதிவு மற்றும் அரச திணைக்களங்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதற்கான ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் மீளச் செலுத்தப்படாத மேற்குறிப்பிட்ட பதிவுத் தொகையினை **"தவிசாளர், நோர்வூட் பிரதேச சபை"** என்ற பெயருக்கு காசாக/காசோலையாக விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பதிவுக்கட்டணங்கள் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக தகவல்களுக்கு செயலாளரை தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இலக்கம் :- 052-2267678/052-2267788**

**K.K. ரவி**
**தவிசாளர்,**
**நோர்வூட் பிரதேச சபை**

# பெறுகை அறிவித்தல்

## 02 பெடல் படகுகளை வழங்குதல்

### பண்டுவஸ்நுவர பிரதேச சபை

பின்வரும் விபரக்குறிப்புகளின் பிரகாரம் 02 பெடல் படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| Size | Total Capacity | Raw Materials | Guarantee | Other Parts | Non-refundable from Fee | Bid Security Amount |
|---|---|---|---|---|---|---|
| Length 11´ - 6´´<br>Width 8´ - 0´´ | 02 Persons | All Fiber Glass Raw Material are Lloyds approved Type and are from U.K, Australia, Malaysia & Germany | 1 year For Fiber Glass Parts. | 02 Nos - Safety Jacket | Rs:1500.00 | Rs:15000.00 |

சகல விபரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை 2022-12-01ஆம் திகதி முதல் 2022-12-30ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பண்டுவஸ்நுவர பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்தில் விசாரிக்கவும்.

**பீ.எம். தர்மசேன பமுனுசிங்க,**
**தலைவர்,**
**பண்டுவஸ்நுவர பிரதேச சபை,**
**ஹெட்டிபொல.**

**037-2291075/ 0723860931**

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகரசபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணைமுறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ML/184/2022 | கொழும்பு-07 விஹாரமஹாதேவி பூங்காவில் பைசிக்கிள்களை வாடகைக்கு அமர்த்துதல். | 5,750.00 | வரிகள் நீங்கலாக விலைகூறப்பட்ட மாதாந்த வாடகையின் 2 வருடங்களுக்கு கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியின் 2% இற்கான நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான உத்தரவாதம். | செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவுக்கான சான்றிதழுடன் இந்த வகையான வேலையில் அனுபவமுள்ள கம்பனிகள்/ தனிநபர்கள் | பொறியியலாளர் பணிப்பாளர் (காணிகள் மற்றும் சூழல்) தொலைபேசி: 0112-695475 |
| 2. | ME/ME/DR/169/2022 | அகழிகள்/ ஆள்செல்லும் துவாரங்கள், தோண்டுதல், ஆதரவு தூண்கள் மற்றும் மீள்நிரப்பல் | 5,750.00 | விலைமனு பெறுமதியின் 2% - நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான உத்தரவாதம் அல்லது விலைமனு பெறுமதியின் 1% ரொக்கப் பணவைப்பு. | எந்தவொருICTAD பதிவுடன் இவ்வகையான வேலையில் குறிப்பிடத்தக்க அனுபவமுடைய ஒப்பந்தக்காரர்கள். | பொறியியலாளர் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 0112-674809 |

**விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

முறை 01 - கொழும்பு மாநகரசபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகரமண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவுவைக்கலாம்.

ஆ) கொழும்புமாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வாரநாட்களில் மு.ப. 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை செலுத்தலாம்.

➢ **வட்டார அலுவலகம் 04,**

இல. 147,ஹைலெவல் வீதி,கிருலப்பனை,

கொழும்பு 06.

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,**

மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டின் மூலப்பிரதி/வங்கிவரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை **dirproj@Colombo.mc.gov.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்பு கொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகரமண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2022-12.21ஆம் திகதி மு.ப. 10.00 மணிவரையில் நகரமண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07,நகரமண்டபம்,கொழும்பு மாநகர சபை,மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. 2022.12.21ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பணக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனுமுறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுமுறி/ பிணை 2023.07.20ஆம் திகதிவரை செல்லுபடியாதல் வேண்டும். முன்வைப்பானது 2023.06.20ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

இ. உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகரமண்டபம்,செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-12.22 ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ 2022-12.22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு அதன் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும். இந்தநாள் பொதுவிடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்துவரும் வேலைநாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவுசெய்து கொண்டபின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஊ. ME/ME/DR/169/2022 என்ற செயற்றிட்ட இலக்கத்திற்கு உரித்தான வகையில் கொழும்பு-10,மாளிகாகந்த, கொமாநகரச இன் வடிகாலமைப்பு பிரிவின் மாநாட்டு அறையில் 2022.12.08ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக்கூட்டம் நடைபெறும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

## பயிற்சியாளர்களை தேடும் வலைப்பந்து



இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனம் தற்போது வெற்றிடமாகியுள்ள, இலங்கை வலைப்பந்து அணியின் தலைமைப் பயிற்சியாளர் மற்றும் உதவிப் பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பங்களை கோருவதாக தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜுலை மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலக வலைப்பந்து சம்பியன்ஷிப்பினை இலக்காகக் கொண்டு, இலங்கை வலைப்பந்தாட்ட அணிக்கு புதிய தலைமைப் பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரும் டிசம்பர் 10 ஆம் திகதி வரை ஏற்கப்படவுள்ளன. புதிய பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்ட பின் இலங்கை அணியின் பயிற்சிகள் வரும் ஜனவரி முதல் நடைபெறவுள்ளது.

### உலகக் கிண்ண நொக் அவுட்:

# இங்கிலாந்து-செனகல் மற்றும் அமெ.-நெதர்லாந்து களத்தில்

உலகக் கிண்ண கால்பந்து போட்டியின் நொக் அவுட் சுற்றில் இங்கிலாந்து எதிர் செனகல் அணியும், நெதர்லாந்து எதிர் அமெரிக்க அணியும் மோதவுள்ளன.

உலகக் கிண்ணத்தில் ஏ மற்றும் பி குழுவுக்கான கடைசி போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகளே அடுத்த சுற்றில் ஒன்றுடன் ஒன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன.



இதன்படி ஏ குழுவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் கட்டார் அணியை 2–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய நெதர்லாந்து அணி நொக் அவுட் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டதோடு அதே குழுவில் ஈக்வடோர் அணியை 2–1 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்தி செனகல் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.



தொடர்ந்து இலங்கை நேரப்படி நேற்று அதிகாலையில் நடைபெற்ற பி குழுவுக்கான இரண்டு போட்டிகளில் ஈரான் அணியை அமெரிக்கா 1–0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்ததோடு இங்கிலாந்து அணி வேல்ஸ் அணியை 3–0 என்ற கோல் வித்தியாசத்தில் இலகுவாக வீழ்த்தி 16 அணிகள் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது.

உலகக் கிண்ணத்தின் நொக் அவுட் சுற்றுப் போட்டிகள் வரும் சனிக்கிழமை (03) ஆரம்பமாகவுள்ள நிலையில் அன்றைய தினம் காலிறுதிக்கு தகுதி பெறுவதற்காக நெதர்லாந்து மற்றும் அமெரிக்கா பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

தொடர்ந்து இலங்கை நேரப்படி வரும் திங்கட்கிழமை (05) அதிகாலை 12.30க்கு ஆரம்பமாகும் நொக் அவுட் சுற்று போட்டியில் இங்கிலாந்து மற்றும் செனகல் அணிகள் பலப்பரீட்சை நடத்தும்.

# பிரிமா இளையோர் கிண்ணம் கொழும்பு தெற்கு அணி வசம்




கொழும்பு எம்.சி.ஏ மைதானத்தில் நேற்று முன்தினம் (29) நடைபெற்ற 15 வயதுக்கு உட்பட்ட பிரிமா இளையோர் கிரிக்கெட் தொடரின் இறுதி போட்டியில் கொழும்பு வடக்கு அணியை 3 விக்கெட்டுகளால் தோற்கடித்து கொழும்பு தெற்கு அணி சம்பயன் பட்டத்தை சுவீகரித்தது.

நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தடிய கொழும்பு வடக்கு அணி 50 ஓவர்களுக்கும் 08 விக்கெட்டுகளை இழந்து 148 ஓட்டங்களை பெற்றது. பதிலெடுத்தாடிய கொழும்பு தெற்கு அணி நிர்ணயிக்கப்பட்ட 45.5 ஓவர்களில் வெற்றி இலக்கை எட்டியது.

# மேர்கன்டைல் ஹொக்கி தொடர் டிசம்பர் 4 இல்




44ஆவது மேர்கன்டைல் ஹொக்கி தொடர் எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பு பீ. சரா ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இந்தத் தொடருக்கு நிப்பொன் பெயின்ட்ஸ் நிறுவனம் பிரதான அனுசரணை வழங்குவதோடு பிரவுன்ஸ் நிறுவனம், பரகா ஜொயின்ட் ஈஸ் ஸ்ப்ரே மற்றும் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் இணை அனுசரணை வழங்குகின்றன.

இது பற்றி அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு கடந்த செவ்வாயன்று (29) பி.ஆர்.சி மைதானத்தில் நடைபெற்றது. 22 அணிகள் பங்கேற்கும் இம்முறை தொடர் டிசம்பர் 4 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆரம்பித்து மாலை 4.30க்கு இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

# ஆடவர் உலகக் கிண்ணம்: பெண் நடுவர்கள் சாதனை

ஆடவர் உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் முதல் முறை அனைத்து நடுவர்களும் பெண்களாக செயற்பட்டுள்ளனர்.

ஜெர்மனி மற்றும் கொஸ்டாரிகா இடையில் நேற்று நடைபெற்ற குழுநிலை போட்டியில் ஸ்டபனி ப்ரப்பார்ட் முதல் பெண் நடுவராக செயற்பட்டார். ப்ரப்பார்ட் முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மெக்சிகோ மற்றும் போலந்துக்கு இடையிலான போட்டியில் நான்காவது நடுவராக செயற்பட்டு தொடரில் முதல் பெண் நடுவராக பாதிவாகி இருந்தார்.

இந்நிலையில் அல் பைத் அரங்கில் நேற்று நடைபெற்ற போட்டியில் பிரேசிலின் நியூசா பெக் மற்றும் மெக்சிகோவின் கரன் டயஸ் மெடினா ஆகிய பெண் நடுவர்களுக்கு ப்ரப்பார்ட் தலைமையை ஏற்று செயற்பட்டார்.



# இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்றது நியூசிலாந்து

இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டியும் மழையால் கைவிடப்பட்ட நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரை நியூசிலாந்து 1–0 என கைப்பற்றியது.


கிறிஸ்சேர்ச்சில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்திய அணி 47.3 ஓவர்களில் 219 ஓட்டங்களுக்கே சுருண்டது. வொசிங்கடன் சுந்தர் அதிகபட்சமாக 64 பந்துகளில் 51 ஓட்டங்களை பெற்றார்.

எனினும் பதிலெடுத்தாடிய நியூசிலாந்து அணி 18 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 104 ஓட்டங்களை பெற்றிருந்தபோதும் மழை குறுக்கிட்டதை அடுத்து போட்டியை தொடர முடியாத நிலை ஏற்பட்டது.



இந்தத் தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்து வெற்றியீட்டிய போதும் இரண்டாவது போட்டியும் மழையால் கைவிடப்பட்டது.

# அல்சைமர் நோய்க்கான மருந்தில் முன்னேற்றம்



அல்சைமர் நோயினால் மூளையில் ஏற்படும் அழிவை மெதுவாக்கும் முதல் மருந்தின் சோதனையில் சாதகமான முடிவு கிடைத்துள்ளது. பல தசாப்தங்கள் நீடித்த தோல்விக்குப்பின்னரே இந்த மருந்தை கண்டுபிடிப்பதில் ஆராய்ச்சியாளர்கள் வெற்றி கண்டுள்ளனர்.

எனினும் இந்த மருந்தில் சில பாதகமான நிகழ்வுகள் பதிவாகி இருக்கும் நிலையில் அதன் பாதுகாப்பு பற்றியும் தொடர்ந்து கவலை உள்ளது.

லெகானமாப் என்ற அந்த மருந்தை மருந்து தயாரிப்பு நிறுவனங்களான இஸ்சய் மற்றும் பயோஜின் என்ற நிறுவனங்கள் தயாரித்துள்ளன. இந்த மருந்தின் 3ஆம் கட்ட சோதனை முடிவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. இதில் அல்சைமர் பாதிக்கப்பட்டோரிடம் ஏற்படும் அறிவாற்றல் மற்றும் செயல்பாட்டு சரிவை லெகானமாப் மருந்து 27 வீதம் குறைப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் மூளையில் உருவாகும் நச்சுத் தன்மை வாய்ந்த பீட்டா – அமிலாய்டு புரதங்களின் திட்டுகளை நீக்கும் வகையில் லெகானமாப் மருந்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# சீன முன்னாள் ஜனாதிபதி ஜியாங் சமின் காலமானார்



தியானன்மன் சதுக்க போராட்டங்களின் பின் ஆட்சிக்கு வந்த சீன முன்னாள் ஜனாதிபதி ஜியாங் சமின் தனது 96ஆவது வயதில் காலமானார் என்று சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

இரத்தப் புற்றுநோய் மற்றும் உடல் உறுப்புகள் செயலிழந்த நிலையில் ஜியாங் நேற்று (30) நண்பகல் மரணமடைந்ததாக சின் ஜியாங் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சீனா சர்வதேச அளவில் பெரும் புறக்கணிப்பை எதிர்கொண்ட 1989 தியானன்மன் சதுக்க ஜனநாயக ஆதரவு ஆர்ப்பட்டங்கள் முடக்கப்பட்ட சம்பவத்தின் பின் ஆட்சிக்கு வந்த ஜியாங்கின் கீழ் சீனா ஒரு வலுவான பொருளாதார சக்தியாக உருவெடுத்தது.

அவர் 1993 தொடக்கம் 2003 வரை சீன ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

# சுக்கானில் 11 நாட்கள் பயணித்த மூவர் மீட்பு



நைஜீரியாவிலிருந்து புறப்பட்ட கப்பலின் சுக்கானில் அமர்ந்தவாறு 11 நாட்கள் பயணம் மேற்கொண்ட மூவர் ஸ்பெயினின் கனரி தீவுகளில் மீட்கப்பட்டுள்ளனர்.

183 மீற்றர் நீளமுள்ள அலிதினி இரண்டு எனும் கப்பலின் சுக்கானில் சட்டவிரோதக் குடியேறிகள் அமர்ந்திருப்பதைக் காட்டும் படம் சமூக ஊடகத்தில் பகிரப்பட்டது.

கப்பலில் இம்மாதம் 17ஆம் திகதி புறப்பட்ட அவர்கள் தண்ணீர்ப் பற்றாக்குறை, குறைவான உடல் வெப்பநிலை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. உள்நாட்டுச் சட்டப்படி சட்டவிரோத குடியேறிகள் உடனடியாக நாடு திரும்ப வேண்டும். இருப்பினும் அவர்கள் அகதிக்கான தகுதியைப் பெற்றால் ஸ்பெயினில் இருப்பது சாத்தியம் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## மும்பை தாக்குதலுக்கு நீதி நிலைநாட்ட உறுதி

மும்பை தாக்குதல் குற்றவாளிகளுக்கு எதிராக நீதியை நிலைநாட்ட இந்தியா மற்றும் ஏனைய சர்வதேச நட்பு நாடுகளுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றுவதாக அமெரிக்கா உறுதியளித்துள்ளது. 170க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட 2008 ஆம் ஆண்டின் மும்பை தாக்குதலின் 14 ஆவது ஆண்டு நிறைவிலேயே அமெரிக்கா இதனைத் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதலின் உண்மையான குற்றவாளிகள் தப்ப முடியாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய் சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

# சீனாவில் புதிய ஆர்ப்பாட்டங்களில் மோதல்

கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தெற்கு சீன நகர் ஒன்றில் ஏற்பட்ட புதிய ஆர்ப்பாட்டங்களில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது.

கடந்த சில நாட்களாக சீனாவில் தீவிரம் அடைந்த இந்த ஆர்ப்பாட்டங்களை முடக்கப்போவதாக சீன நிர்வாகம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு எச்சரிக்கை விடுத்ததோடு பாதுகாப்பையும் பலப்படுத்தியது.

எனினும் தென் சீன நகரான கங்சுவில் கடந்த செவ்வாய் இரவு தொடக்கம் நேற்று புதன்கிழமை வரையில் மோதல்கள் இடம்பெற்றிருப்பதாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்பு அங்கி அணிந்த பொலிஸார் கலகம் அடக்கும் கேடயங்களுடன் தெற்கு நகர வீதிகளில் இருக்கும் படங்கள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன. இதில் மக்கள் கூச்சலிடுவதும், பொலிஸார் மீது பொருட்களை வீசி எறிவதும் தெரிகிறது.



எனினும் பல மாவட்டங்களில் கொவிட் கட்டுப்பாடுகளில் தளர்வு கொண்டுவரப்பட்டதாக அதிகாரிகள் நேற்று தெரிவித்தனர்.

சீனா கொவிட் தொற்றை முழுமையாக துடைத்தொழிக்கும் கொள்கையை பின்பற்றுவதோடு இதன்மூலம் மக்கள் கடுமையாக முடக்கநிலை மற்றும் கூட்டாக கொரோனா சோதனைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இந்தக் கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு கோரி தலைநகர் பீஜிங், ஷங்காய் மற்றும் ஏனைய நகரங்களில் ஆர்ப்பாட்டம் வெடித்ததோடு சிலர் ஜனாதிபதி ஷி ஜின்பிங்கை பதவி விலகும்படியும் கோசம் எழுப்பினர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.